
JEYECHANDRANS
முகூர்த்த பட்டுபுடவைகளுக்கு ராசியான ஒரே இடம்...
புத்தம் புதிய டிசைன்களில்...
ஜெய்ச்சந்திரன்ஸ்
இல.433, காலி வீதி, கொழும்பு 06.
தொ. 011 4528438, 011 4528435
Whatsapp. 0778 238 402
மி. info@jeyechandrans.com



# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 424 பிலவ வருடம், மார்கழி மாதம் 26ஆம் திகதி திங்கட்கிழமை (10.01.2022) ஹிஜ்ரி - 1443, ஜமா அத்துல் ஆகீர் - 06, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30




JEYECHANDRANS
Colorful Bright full Delightful Selections
NEW ARRIVALS
JEYECHANDRANS
No.433, Galle Road, Colombo 06
T. 011 4528438, 011 4528435
Whatsapp. 0778 238 402
E. info@jeyechandrans.com


# வருகிறது தொடர் மின்வெட்டு!

## 1-2 மணிநேர திட்டமிட்ட மின்வெட்டிற்கு பரிந்துரை

## பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவும் அனுமதி

நாட்டில் நாளாந்தம் 1 முதல் 2 மணித்தியாலங்கள் திட்டமிடப்பட்ட மின்வெட்டை அமுல்படுத்துமாறு இலங்கை மின்சார சபை, மின்சக்தி அமைச்சுக்கு பரிந்துரை செய்துள்ளது.

மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளர் ஹெந்த ஹேவ இந்த தீர்மானத்தை மின்சக்தி அமைச்சின் செயலாளர் வசந்த பெரேராவுக்கு அறிவித்து உடனடியாக அமுல்படுத்துமாறு வலியுறுத்தியுள்ளார்.

இருப்பினும், மின் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை சமாளிக்க, அதே காலத்திற்கு நீடிக்கும்....

02 பக்கம்

## உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் மேலும் ஓராண்டுக்கு ஒத்திவைப்பு

இலங்கையின் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை மேலும் ஒரு வருடத்திற்கு பிற்போடுவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர் வரும் வாரத்தில் வெளியிடப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான விடயங்களை நீக்கி குறித்த வர்த்தமானி வெளியிடப்படவுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவிற்கு கொவிட்-19 தொற்றுறுதியாகியுள்ளமையினால் அவரால் தேர்தலை பிற்போடுவது தொடர்பான வர்த்தமானியை வெளியிட....

02 பக்கம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் நயினாதீவுக்கு விஜயம்



02 பக்கம்

## சுயநிர்ணய உரிமையை மீறியதாக அரசியல் தீர்வு அமைய முடியாது!

### அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை அறிவிப்பு


தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தமிழரின் அடிப்படை உரிமையான சுயநிர்ணய உரிமையை மீறுவதாக அமைய முடியாதென அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை தெரிவித்துள்ளது.

International Council of Eelam Tamils
அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை

அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை மேலும் தெரிவித்துள்ளதாவது.

02 பக்கம்

## உஷ்



சமையல் எரிவாயு பிரச்சினை யாரை விட்டுவைத்தது.?

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து இப்போது ஆளுங்கட்சிக்கு ஆதரவை வழங்கிவரும் டயனா கமகே எம்.பி, சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றை வாங்க பத்தரமுல்ல சென்றாராம், அங்கு சமையல் எரிவாயு கிடைக்காத காரணத்தினால் எரி வாயு ஏற்றிச்சென்ற லொறி ஒன்றை பின் தொடர்ந்தே சென்று அந்துருகிரிய பகுதியில் அந்த லொறியை வழிமறித்து கேட்டபோது அதில் வெற்று சிலிண்டர்களே இருந்துள்ளன.

பின்னர் வேறு வழியில்லாமல் எல்லா இடமும் தேடி அலைந்து ஒருவாறாக எரிபொருள் நிரப்பும் நிலையமொன்றில் வரிசையில் நின்று எரிவாயு சிலிண்டரை வாங்கினாராம் டயனா எம்.பி.

## இலங்கை மருத்துவ மாணவர்கள் சீனாவில் கல்வியை தொடரலாம்!

### பிரதமரின் கோரிக்கைக்கு சீன வெளியுறவுத்துறை அமைச்சர் சாதகமான பதில்

தமது கல்வி நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்காக மீண்டும் சீனாவிற்கு செல்வதற்கு எதிர்பார்த்திருக்கும் இலங்கை மருத்துவ மாணவர்களுக்கு சீனாவிற்கு வருகைத் தருவதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்குமாறு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (09) சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங்கி யீயிடம் அலரி மாளிகையில் சந்தித்தபோது விசேட கோரிக்கையொன்றை முன்வைத்தார்.

அதற்கு பதிலளித்த சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங்கி யீ, இலங்கையின் மருத்துவ மாணவர்களுக்கு மீண்டும் அங்கு வருகைத் தருவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு வெளியுறவுத்துறை அமைச்சுடன் நெருக்கமாக செயற்படுமாறு இலங்கைக்கான சீனத் தூதுவருக்கு உடனடியான அறிவுறுத்தினார்.

சீனாவின் மருத்துவக் கல்லூரிகளில் இறுதி ஆண்டில் கல்வி கற்றுவந்த 400 மாணவர்கள் உள்ளிட்ட சுமார்...

02 பக்கம்



இலங்கை - சீனா இடையிலான ஜனநாயக உறவுகளின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை வந்த சீன வெளிவிவகார அமைச்சர் வாங்கி யீ, நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தார்.

## தமிழர் உரிமைகளை வெல்ல சீனாவின் செல்வாக்கு தடை

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

தமிழர் அரசியல் உரிமைகளை மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக கொள்கைகளின் அடிப்படையில் வெல்வதற்கு சீனாவின் செல்வாக்கு முட்டுக்கட்டையாக விளங்கும் – சீனா எங்கள் பகுதிகளில் கால்பதிப்பதை நாங்கள் விரும்பாததற்கு இது ஒரு காரணம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார். ஊடகமொன்றிற்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது.

வடகிழக்கில் சீனாவின் பிரசன்னத்தை நாங்கள் வரவேற்கவில்லை எனத் தெளிவாக தெரிவித்திருக்கிறோம். அதற்கான காரணத்தையும் தெரிவித்துள்ளோம்.

02 பக்கம்

## பல்பொருள் அங்காடியில் திருடியவர் தற்கொலை

**ராகமவில் பரபரப்புச் சம்பவம்**

ராகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மஹ பாகே வீதியிலுள்ள பல்பொருள் அங்காடியொன்றில் நேற்றுக் (09) காலை நபர் ஒருவர் சிறு குழந்தைகளுக்கு பயன்படுத்தப்படும் வாசனைத் திரவியத்தை எடுத்துக்கொண்டு பணம் செலுத்தாமல் வெளியே வந்துள்ளார்.

இதன்போது...

02 பக்கம்

## 52 நாட்கள் சூழ்ச்சியை செய்திருக்காவிடின் இன்றும் சிறிசேனவே நாட்டில் ஜனாதிபதி

### இராதாகிருஷ்ணன் எம்.பி தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)



"இந்திய பிரதமருக்கு அனுப்பப்படவுள்ள கூட்டு ஆவணத்தில் நாம் கையொப்பமிடாவிட்டாலும், தமிழ்த் தேசியக்கட்சிகளால் முன்னெடுக்கப்படும் முயற்சிக்கு முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும். அவர்களின் நடவடிக்கைக்கு எதிராக நிற்க மாட்டோம்" - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று (09) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு சமகால அரசியல் நிலைவரங்கள்...

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



இந்தியாவுக்கு எண்ணெய்...
சீனாவுக்கு பட்டர்...


வெளிநாடுகளில் சிரமத்துடன் உழைக்கும் வெளிநாட்டு பணத்திற்கு அதிக பெறுமதி




வெளிநாடுகளில் உழைத்த பணத்தினை தாய்நாட்டிற்கு அனுப்பி இலங்கை ரூபாவிற்கு மாற்றும் போது ஒவ்வொரு அமெரிக்க டொலருக்கு அல்லது அதற்கு சமனான பெறுமதியுடைய வேண்டியதொரு வெளிநாட்டு நாணயத்திற்கு மேலதிகமாக ரூ. 10 மக்கள் வங்கியால் செலுத்தப்படும்.

உங்களின் வசதிக்காக நாடெங்கிலும் உள்ள எமது 741 கிளைகளிலும் இச்சேவையை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

PEOPLE'S Remittance | WesternUnion WU | ria Money Transfer

* 2022 ஜனவரி 31 வரை செல்லுபடியாகும்.

*நிபந்தனைகள் உண்டு

www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK
Pride of the Nation
AA- (lka) Fitch Rating, AAA- Brand Finance Rating
People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

## இலங்கை மருத்துவ...

1200 இலங்கை மருத்துவ மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்காக மீண்டும் சீனாவிற்கு செல்வதற்கு எதிர்பார்த்துள்ளனர். கோவிட் தொற்று நிலைமை காரணமாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக அவர்களுக்கு மீண்டும் சீனாவிற்கு செல்வதற்கு முடியாது போயுள்ளது. பிரதமரின் கோரிக்கைக்கு பதிலளித்த சீன வெளிவிவகாரத்துறை அமைச்சர், இலங்கை மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதாக உறுதியளித்தார்.

இந்த இருதரப்பு பேச்சுவார்த்தையின் போது தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்திற்கு மேலும் ஒத்துழைத்தல், துறைமுக நகரம் மற்றும் ஹம்பாந்தோட்டை கைத்தொழில் வலயம் ஆகியவற்றிற்கான முதலீடுகளை ஈர்த்தல், சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையே சுற்றுலாத்துறையை மேம்படுத்தல், இலங்கையின் ஏற்றுமதியை அதிகரித்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையே பௌத்த மற்றும் கலாசார உறவினையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்துவது குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

**இச்சந்திப்பினை தொடர்ந்து கீழ்வரும் உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்பட்டன.**

பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான உடன்படிக்கை,

கொழும்பில் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான மானிய வீட்டுத்திட்டம் தொடர்பான பரிமாற்றக் கடிதம்,

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு திட்டத்தை ஒப்படைக்கும் சான்றிதழ்,

சிறுநீரக நோய்க்கான நடமாடும் பரிசோதனை அம்பியூலன்ஸ்களுக்கான தொழில்நுட்ப ஒத்துழைப்பிற்கான திட்டத்தை ஒப்படைக்கும் சான்றிதழ்.

சீன கொம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபிக்கப்பட்டு நூற்றாண்டுகள் பூர்த்தி மற்றும் சீன-இலங்கை இருதரப்பு உறவின் 65 ஆண்டு பூர்த்தி ஆகியவற்றை முன்னிட்டு இலங்கை மத்திய வங்கி கடந்த ஆண்டு நினைவு நாணயமொன்றை வெளியிட்டிருந்தது.

அந்நாணயங்களை இதன்போது பிரதமர் சீன வெளிவிவகாரத்துறை அமைச்சருக்கு நினைவுப் பரிசாக வழங்கினார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு சீன ஜனாதிபதி மற்றும் பிரதமரின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்த சீன வெளிவிவகாரத்துறை அமைச்சர் வாங்கி யீ, இலங்கைக்கு தேவையான உதவிகளையும் ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு சீனா தொடர்ந்து செயற்படும் எனக் குறிப்பிட்டார்.

இருதரப்பு சந்திப்பின் போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்ததாவது,

உங்களை மீண்டும் இலங்கைக்கு அன்புடன் வரவேற்கிறோம். இத்தால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே நீங்கள் இலங்கைக்கு வருகைத்தந்தீர்கள். நீங்கள் மீண்டும் வருகைத்தந்துள்ளமை குறித்து மகிழ்ச்சி.

இந்த ஆண்டு நம் இரு நாடுகளுக்கும் மிக முக்கியமான ஆண்டாகும். இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்ட 65ஆவது ஆண்டு நிறைவையும், இரப்பர் அரிசி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 70ஆவது ஆண்டு நிறைவையும் குறிக்கிறது.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 100ஆவது ஆண்டு விழாவிற்கு வாழ்த்து தெரிவிக்க எனக்கு ஒரு வாய்ப்பு வழங்குங்கள். இந்த முக்கியமான மைல்கல்லை குறிக்கும் வகையில் இலங்கை மத்திய வங்கி விசேட நினைவு நாணயத்தை வெளியிட்டது உங்களுக்குத் தெரியும்.

கொவிட்-19 தொற்றுநோய்க்கு எதிராக போராடுவதற்கான ஒத்துழைப்பிற்கு சீன அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சினோஃபார்ம் தடுப்பூசிகளின் தொடர்ச்சியான விநியோகம் எங்கள் தடுப்பூசி திட்டத்தின் வெற்றிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளது.

ஏனைய நாடுகளைப் போலவே இலங்கையின் பொருளாதாரமும் தொற்றுநோய் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டமை நீங்கள் அறிந்ததே. நமது பொருளாதார மீட்பு மற்றும் நிதி ஸ்திரத்தன்மைக்கான சீனாவின் ஆதரவை நாங்கள் பாராட்டுகிறோம்.

இயல்பு நிலைக்கு திரும்புவதற்கு இன்னும் நீண்ட தூரம் செல்லவேண்டியுள்ளது. ஆனால் சீனா போன்ற நட்பு நாடுகளின் ஆதரவுடன், இந்த சவால்கள் விரைவில் சமாளிக்க முடியும் என நம்புகிறோம்.

பொதுவான சவால்களை எதிர்கொள்வதில் உங்களுடனும் சீன அரசாங்கத்துடனும் நெருக்கமாக பணியாற்ற நான் எதிர்பார்க்கின்றேன் - என்றார்.

## 52 நாட்கள்...

தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

"இந்த அரசுக்குள், அரசியல் ரீதியிலும் தற்போது நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளது. இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து சுசில் பிரேமஜயந்த நீக்கப்பட்டுள்ளார். மறுபுறத்தில் மைத்திரிபால சிறிசேனவும் கடும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றார். எனவே, அரசு வெகுவிரைவில் கவிழும் என்பதையே நாட்டில் இடம்பெறும் அரசியல் சம்பவங்கள் மூலம் உணர முடிகின்றது.

எதிர்காலத்தில் புதிய கூட்டணிகள் உருவாகலாம். புதிய பயணம் பற்றி மைத்திரிபால சிறிசேனவும் கருத்து வெளியிட்டுள்ளார். அந்தவகையில் நாமும் தேர்தலுக்கு தயாராகவே இருக்கின்றோம். தேர்தலை மட்டும் எதிர்ப்பார்த்து வருபவன் தலைவர் கிடையாது. நாளை சமுதாயம் பற்றி சிந்திப்பவனே உண்மையான தலைவன். அவ்வாறானவர்களுக்கே நாம் ஆதரவு வழங்க வேண்டும்.

அதேவேளை, தமிழ்ப் பேசும் கட்சிகள் இணைந்து கலந்துரையாடல்களை நடத்தியிருந்தன. அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பை பெறுவதற்கே ஆரம்பத்தில் இணக்கம் காணப்பட்டிருந்தது. அதன்பின்னர் சமஷ்டி, சுயநிர்ணயம் உள்ளிட்ட விடயங்களும் உள்வாங்கப்பட்டன. இதனால் மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகள் ஆவணத்தில் கையொப்பமிடவில்லை.

ஆனாலும் தமிழ் தேசியக் கட்சிகளால் முன்னெடுக்கப்படும் முயற்சிக்கு நாம் முழு ஆதரவை வழங்குவோம். அதற்கு தடையாகவோ - எதிராகவோ நிற்கமாட்டோம்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்தால் நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டது. 20 மூலம் அது நீக்கப்பட்டது. அதனால் ஏற்பட்டுள்ள அவல நிலையை மக்கள் இன்று உணர ஆரம்பித்துள்ளனர். இந்த உண்மையைத்தான் மைத்ரி இன்று கதைக்கின்றார். ஆனால் 52 நாட்கள் அவர் அரசியல் சூழ்ச்சி செய்திருக்காவிட்டால், இன்றும் அவரே ஜனாதிபதி - என்றார்.

## தமிழர் உரிமைகளை...

எங்கள் அரசியல் அபிலாசை என்பது ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை அடிப்படையாக கொண்டது – இந்த இரண்டு கருத்துக்களும் சீனாவிற்கு அந்நியமான விடயங்கள். எங்கள் அரசியல் உரிமைகளை மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக கொள்கைகளின் அடிப்படையில் வெல்வதற்கு சீனாவின் செல்வாக்கு முட்டுக்கட்டையாக விளங்கும் – சீனா எங்கள் பகுதிகளில் கால்பதிப்பதை நாங்கள் விருப்பாததற்கு இது ஒரு காரணம் எனவும் இரண்டாவது காரணம் நாங்கள் தென்சீன கடற்பகுதியில் இல்லை – தென்சீன கடற்பகுதியில் இருந்திருந்தால் நாங்கள் சீனாவின் நியாயபூர்வமான பாதுகாப்பு கரிசனைகளை அங்கீகரித்திருப்போம். ஆனால் நாங்கள் இந்து சமுத்திரப் பகுதியில் இருக்கின்றோம், இந்திய கரையிலிருந்து சில கிலோமீற்றர் தொலைவில் உள்ளோம். இந்தியாவின் நியாயபூர்வமான பாதுகாப்பு கரிசனைகளை நியாயப்படுத்துவதற்காக, ஏற்றுக்கொள்வதற்காக, பாதுகாப்பதற்காக எங்களை யாரும் குற்றம்சொல்ல முடியாது.

சீனா இந்தியாவுடன் நட்புறவு பாராட்டும் நாடு இல்லை. இதன் காரணமாக இந்திய கரைக்கு மிக அருகில் உள்ள வடகிழக்கில் சீனா காலூன்ற அனுமதிப்பது – இந்தியாவிற்கு எதிராக மேலும் பகைமை நடவடிக்கைகளில் சீனா ஈடுபடுவதற்கு அனுமதிப்பதற்கு சமமானது. இதனை நாங்கள் செய்யக்கூடாது என நினைக்கின்றோம். இந்த காரணங்களுக்காக நாங்கள் வட-கிழக்கில் சீனாவை விரும்பவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பல்பொருள்...

அருகில் இருந்த முச்சக்கரவண்டி சாரதி ஒருவர் அவரைப் பிடிக்க முற்பட்டபோது முச்சக்கரவண்டி சாரதியை கையில் வைத்திருந்த கத்தியால் குத்திவிட்டு குறித்த நபர் தப்பிச் சென்றுள்ளார்.

பின்னர், மற்றொரு குழு சந்தேக நபரை துரத்திச் சென்றபோது, யாரும் நெருங்க வேண்டாம் என்றும் அவ்வாறு செய்தால் கழுத்தை அறுத்துக்கொள்வதாக மிரட்டிய அந்த நபர், கையில் வைத்திருந்த கத்தியால் கழுத்தை அறுத்துக்கொண்டுள்ளார்.

குறித்த பல்பொருள் அங்காடியில் இருந்து சுமார் 500 மீட்டர் தொலைவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பின்னர் சந்தேகநபர் நோயாளர் காவு வண்டி மூலம் ராகம வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். அங்கு அவரை பரிசோதித்த வைத்தியர்கள் குறித்த நபர் இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர்.



சந்தேக நபரின் சடலம் ராகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

நாகொல்ல, உக்குவெலவத்தை பகுதியைச் சேர்ந்த 44 வயதான ரெஜி வனசுந்தர என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த முச்சக்கர வண்டியின் சாரதி ராகம வைத்தியசாலையின் விபத்துப் பிரிவில் சிகிச்சைப்பெற்று வருகின்றார்.

இது தொடர்பான பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## உள்ளூராட்சி...

முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதானால் அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் வெளியிடப்பட வேண்டும்.

எவ்வாறாயினும் கொவிட்-19 தொற்றுறுதியாகியுள்ள இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க, இங்கிலாந்தில் உள்ளமையினால் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கு முடியாமல் உள்ளது.

இந்தநிலையில் தேர்தலை பிற்போடுவதற்கான இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான விடயங்களை நீக்கி மற்றுமொரு அமைச்சுக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய மற்றுமொரு அமைச்சின் ஊடாக குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் மார்ச் மாதம் 20ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தல் ஓராண்டு பிற்போடப்பட்டால் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி கட்டாயமாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் ஓராண்டு காலப்பகுதிக்கு மாத்திரமே பிறபோட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## வருகிறது...

திட்டமிடப்படாத மின்வெட்டுகள் அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

காலை 11 மணி முதல் மாலை 6 மணி வரை ஒரு மணிநேர மின்வெட்டு மற்றும் மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை உச்ச நேரங்களில் 45 நிமிடங்களுக்கு இரண்டு முறை மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

டொலர் நெருக்கடி காரணமாக அனல் மின் நிலையங்களுக்கு எரிபொருள் வழங்குவதில் இருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் விலகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், நுரைச்சோலை நிலக்கரி அனல்மின் நிலையத்தின் மூன்றாவது அலகு மற்றும் கெரவலப்பிட்டி யுகதனவி ஆலையின் ஒரு பகுதி பராமரிப்புக்காக மூடப்பட்டமை மற்றும் களனிதிஸ்ஸ 115 மெகாவாட் எரிவாயு விசையாழி ஆலையில் ஏற்பட்ட பழுதினால் மின்வெட்டு அமுல்படுத்தப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது.

தற்போதைய நிலையில் தினசரி உச்ச நேரம் – இரவு நேரம் – தேவை சுமார் 2,500 மெகாவாட் மற்றும் பகல் நேரத் தேவை சுமார் 2,100 மெகாவோட் என்றாலும், இலங்கையின் ஆற்றல் தேவை சுமார் 48 ஜிகாவோட் ஆகும்.

பற்றாக்குறையை சமாளிக்க வேண்டுமானால் இரண்டரை மணிநேரம் மின்வெட்டு செய்யப்பட வேண்டும் என இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளருக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் பிரதிப் பொது முகாமையாளர் ஆர்.அழகக்கோன் அறிவித்திருந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

எனினும், தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாததால், கடந்த சில நாட்களாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் திட்டமிடப்படாத மின்வெட்டு ஏற்பட்டது.

"முன்கூட்டிய அறிவிப்பைத் தொடர்ந்து குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்படும்போது திட்டமிடப்பட்ட மின்வெட்டுகள் விதிக்கப்படுகின்றன, ஆனால் திட்டமிடப்படாத மின்வெட்டு என்றால், தேவையைப் பூர்த்தி செய்ய முடியாதபோது, கணினி செயற்பாடு தானாகவே சரிந்து சில மணிநேரங்களுக்கு குறிப்பிட்ட சில பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்படும்.

"நாங்கள் அதை நிறுத்தமுடியாது. அதுதான் இப்போது நாட்டில் நடக்கிறது. அதனால்தான், நடைமுறையில் இருக்கும் யதார்த்தத்திற்குள் அதிகாரபூர்வமாக திட்டமிட்ட மின்வெட்டுகளை விதிக்க வேண்டும் என்று முன்கூட்டியே சொன்னோம். இருந்தும், அதிகாரிகள் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை," என, உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

150 மெகாவாட் திறன் கொண்ட சப்புகஸ்கந்த தொழிற்சாலை மற்றும் 60 மெகாவாட் திறன் கொண்ட கொழும்பு துறைமுக பார்ஜ் ஆகியவை எரிபொருள் பற்றாக்குறையால் நேற்றுமுன்தினம் காலை வரை நிறுத்தப்பட்டிருந்தன.

இதேவேளை, ஒரு மாத காலமாக பராமரிப்பு பணிகளுக்காக மூடப்பட்டுள்ள நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் 3ஆவது அலகிலிருந்து 300 மெகாவோட் மின்சாரம் தேசிய மின்உற்பத்தி தடைப்பட்டுள்ளது. அதேபோன்று, கெரவலப்பிட்டிய 300 மெகாவாட் மின் உற்பத்தி நிலையத்தின் யுகதனவியின் ஒரு பகுதி, திட்டமிடப்பட்ட பராமரிப்பு காரணமாக கடந்த மாதம் முதல் இயங்கவில்லை. இது தேசிய மின்கட்டமைப்பிற்கு 150 மெகாவாட் மட்டுமே வழங்குகிறது.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் மூன்றாவது அலகு இம்மாத இறுதிக்குள் இயங்கத் தொடங்கும் என்றும் யுகதனவி இம்மாத நடுப்பகுதிக்குள் முழுமையாக இயங்கும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

மேலும், பழமையான 115 மெகாவோட் களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்தில் தற்போது தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது.

இதன் விளைவாக, தினசரி மின் தேவையில் 40 சதவீதம் நீர் மின்சாரம், 30 சதவீதம் நிலக்கரி, 22 சதவீதம் எண்ணெய் மற்றும் 8 சதவீதம் சூரிய சக்தி மற்றும் காற்றாலை மூலம் பூர்த்திசெய்யப்படுகிறது. மழை இல்லாததால், நீர்ப்பிடிப்பு பகுதிகளில், மினி நீர்மின் நிலையங்கள் எதுவும் செயல்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் இன்று முதல் (10) நாளாந்தம் மின்வெட்டை அமுல்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்படுவதாக இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில், ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு மணித்தியாலங்கள் மின்வெட்டை அமுல்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## எதிர்க்கட்சித் தலைவர்...

*(யாழ். நிருபர்)*

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கு நேற்று பயணம் மேற்கொண்டார்.

அந்த வகையில் நயினாதீவுக்கு விஜயம் செய்த சஜித் பிரேமதாச நாகவிகாரைக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டு விகாராதிபதியிடம் ஆசிகளை பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திலும் விசேட வழிபாடுகளை மேற்கொண்டார்.

இதன்போது, சஜித் பிரேமதாசவின் பாரியார் ஜலனி பிரேமதாச, மாத்தறை நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண, அக்கட்சியின் தமிழ் விவகாரங்களுக்கு பொறுப்பான உமாச்சந்திர பிரகாஷ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மரண அறிவித்தல், நினைவஞ்சலி, மற்றும் பிறந்தநாள் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்கலாம்
அழையுங்கள்
0761393805

## சுயநிர்ணய உரிமையை...

***ஒற்றையாட்சி முறையில் தமிழர்களுக்கு பாதுகாப்பில்லை:***

இலங்கையின் ஒற்றையாட்சி குடியரசு அரசியலமைப்பு, முதலில் 1972 இல் உருவாக்கப்பட்டு 1978 இல் அனைத்து திருத்தங்களுடனும் அமுல்படுத்தப்பட்டது. இந்த அரசியல் அமைப்பானது தமிழ் மக்களின் பங்களிப்பு இல்லாமலேயே இயற்றப்பட்டது. 1947 இல் கொண்டுவரப்பட்ட சோல்பரி அரசியலமைப்பு ஈழத் தமிழர்களின் ஆணையைக் கொண்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இது குறைந்தபட்சப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு விதியைத் (பிரிவு 29) தமிழர்களுக்கு வழங்கியது. மேலும் இந்த அரசியலமைப்பால் வழங்கப்படும் பாதுகாப்புக்கள் மீறப்பட்டால், ஐக்கிய இராச்சியத்தில் உள்ள கோமறை மன்றத்தில் (Privy Council) மேன் முறையிடும் உரித்தை தமிழர்களுக்கு வழங்கியிருந்தது. இலங்கைக் குடியரசின் 1972ஆம் ஆண்டு அரசியலமைப்பு பிரித்தானிய முடி அரசுடனான உறவுகளைத் துண்டித்ததோடு இங்கிலாந்தில் உள்ள கோமறை மன்றத்தில் (Privy Council) தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எந்தவொரு அத்துமீறல்களிற்கும் மேல்முறையீடு செய்யும் தமிழ் மக்களின் உரிமையைப் பறித்தெடுத்தது.

இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்புச் சட்டமானது இலங்கைத் தீவில் தமிழ்த் தேசியம் இருப்பதை முறையாக அங்கீகரிக்கத் தவறிவிட்டது. சிங்கள மொழியையும் பௌத்த மதத்தையும் அரசு முதன்மைப்படுத்தியதனூடாக, சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கான அடிப்படையை அரசியலமைப்பு ரீதியாக உறுதிப்படுத்தியது. பல் தேசிய இனங்களின் உண்மையான சமத்துவத்தை உறுதிசெய்யாத அரசியலமைப்பாகும். இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் இலங்கைத் தீவில் தமிழ்த் தேசியத்தின் இருப்பை சிதைக்கும் நோக்கிலான கொள்கையை முன்னெடுத்து வருகின்றன. தமிழர்களைத் துன்புறுத்துதல், பாகுபாடு காட்டுதல், அரச வன்முறை, அரசால் கட்டவிழ்த்து விடப்படும் குழு வன்முறைகள், இனப்படுகொலைகள், நில அபகரிப்புகள், மறுதலிக்கப்பட்டு வரும் தமிழர் உரிமைகள் என்பன திட்டமிட்டு தொடர்ந்து இடம்பெறுகின்றது. எனவே, தமிழ்த் தேசியத்தை அங்கீகரிக்காத எந்த ஒரு தீர்வுத்திட்டத்தாலும் இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்று வரும் தமிழ் இன அழிப்பை தடுத்து நிறுத்தமுடியாது.

***13வது திருத்தச் சட்டம்:***

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் இருந்து பெறப்பட்ட இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதற்கான தொடக்கப் புள்ளியாகக் கூடக் கருத முடியாது என்பதே நிதர்சனமான உண்மை. 13ஆவது திருத்தம் ஈழத் தமிழர் தேசத்தின் அத்தியாவசிய கூறுகளை சிதைக்கும் மாகாண சபை முறைமையை வழங்குவதோடு, இந்த சட்டமூலம் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகத்தை நிரந்தரமாகப் பிரிப்பதோடு, அர்த்தமுள்ள சுயாட்சி முறையை முற்றாக இல்லாதொழிக்கும் நோக்கம் கொண்டது. சிக்கல் நிறைந்த பரிமாணங்களைக் கொண்ட தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு எந்த வகையிலும் செம்மையான தீர்வை வழங்காத 13ஆவது சட்டத் திருத்தம் நிரந்தர அரசியல் தீர்வாக என்றுமே அமையாது. சிங்கள பௌத்த பேரினவாதக் கொள்கைகள் தமிழ்த் தேசத்தை அடிபணியச் செய்ய அனுமதிக்கும் அரசியலமைப்பு அம்சங்கள் இன்னமும் இலங்கையின் அரசியலமைப்பில் வேரூன்றியுள்ளன.

பாரம்பரியமாக நாம் வாழ்ந்து வரும் எமது தாய் மண், தனித்துவச் சிறப்புடைய எமது கலாசாரம், மகத்துவமானதும் பழமையானதுமான எமது தாய்மொழி, தமிழருக்கே உரித்தான வாழ்க்கை முறை, 2600 வருடங்களுக்கு மேற்பட்ட எமது வரலாறு, இந்தப் பண்புகளால் ஒரு தனித்துவமான தேசிய இனமாக நாம் அமையப் பெற்றிருக்கிறோம்.

ஒரு அர்த்தமுள்ள தீர்வு என்பது தமிழ் மக்களின் அடிப்படை மற்றும் பிரிக்க முடியாத சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாக இருக்கவேண்டும். பொருளாதார விவகாரங்கள், நிதி விவகாரங்கள், நீதித்துறை விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு விவகாரங்கள் உட்பட, தமிழரின் பாரம்பரிய தாயகத்தில் உள்ள அனைத்து நிர்வாக கட்டமைப்புகள் மற்றும் பணியாளர்கள் மீதான கட்டுப்பாட்டை நாமே உறுதிசெய்வதோடு, உள்கட்டமைப்பு மற்றும் அத்தியாவசிய சேவைகளின் வளர்ச்சி. தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகத்தில் நிலம் மற்றும் கடல் அனைத்துக்கும் அதிகாரம் இருக்கவேண்டும். தமிழ்த் தேசியத்தை அடிப்படையாக ஏற்று, தமிழ் மக்களிடன் ஆணை பெற்று, தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் அரசியல்வாதிகள், 13 ஒரு ஆரம்பப்புள்ளியாகக்கூட இல்லை என்பதை உணர்ந்து, தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய அரசியல் தீர்வை அனைத்துலகத்திடம் முன்வைக்கவேண்டும்.

அனைத்து அதிகாரங்களும் பறிக்கப்பட்டு வெறுமையாக உள்ள 13இல் மாகாணசபைக்கு கூட எந்த அதிகாரங்களும் இல்லை. அரைகுறையாக கொடுக்கப்பட்ட காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைக் கூட நடைமுறைப்படுத்தப்படாத 13ஐப் பெற்று தமிழர்களால் எந்த அரசியல் தீர்வுகளையும் பெறமுடியாது. பறிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு அப்பால் மிகுதியாக உள்ள அதிகாரங்கள் மகாகாணசபையில் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் கொடுக்காமல் ஆளுநரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்டுக் கூறவேண்டுமானால், ஒரு நகரசபைக்கு உள்ள சுயாதீன அதிகாரங்கள் கூட மாகாண சபைகளுக்கு இல்லை என்பதே உண்மை.

சர்வதேச சமூகத்தின் பொறுப்பு:

தமிழ்த்தேசியப் பிரச்சினைக்கு அர்த்தமுள்ள தீர்வைக் காண்பதில் சர்வதேச சமூகம் தோல்வியடைந்தால் தமிழ் மக்கள் நிரந்தரமாக சகல உரிமைகளையும் இழக்க வைக்கும் திசையில் இலங்கை அரசாங்கத்தைச் செல்ல ஊக்குவிக்கும். இதன் மூலம் உலகளாவிய தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய பாதுகாப்பு மற்றும் பொருளாதாரம் ஆகிய துறைகளில் அசாதாரண நிலையை இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் ஏற்படுத்த வழிவகுக்கும். இந்தோ-பசுபிக் பிராந்திய அரசியலில் இன்றும் தமிழர்கள் ஒரு முக்கிய புள்ளியாக இருப்பதால் சர்வதேசம் இனியாவது நேர்மையாக தமிழருக்கான நிரந்தர அரசியற் தீர்வை ஈட்டித்தர இதயசுத்தியுடன் செயற்பட வேண்டும். சீனாவின் ஒரு பட்டி ஒரு வீதி முன்முயற்சி (Belt and Road Initiative) ஐரோப்பிய ஒன்றியத்தின் உலகளாவிய நுழைவாயில் (Global Gateway) போன்ற சர்வதேசத்தின் பொருளாதார முன்னெடுப்புகளில் ஈழத்தமிழரின் பங்கு தவிர்க்க முடியாதது.

***அர்த்தமுள்ள நிரந்தரத் தீர்வு:***

எமது மக்களுக்கு எதிரான பேரினவாத ஒடுக்குமுறை இனவழிப்பாக உருவெடுத்த போது சிங்கள மற்றும் தமிழ்த் தேசிய இனங்கள் மத்தியில் முரண்பாடு முற்றி விரிசல் உண்டானபோது, ஒற்றையாட்சி முறையின் கீழ் ஐக்கியமாக வாழ முடியாது என்ற நிலைக்குத் தமிழர்கள் தள்ளப்பட்ட போது, சுயநிர்ணய உரிமை அடிப்படையில் எமது தலைவிதியை நாமே தீர்மானிக்கும் வகையில் தமிழர்கள் பிரிந்து செல்லும் கட்டாய சூழலுக்குத் தள்ளப்பட்டோம். தமிழ் மக்கள் கடந்த ஏழு தசாப்தங்களாகத் தொடர்ச்சியாக மாறி மாறி ஆட்சியமைத்த சிங்கள அரசுகளால் மனிதாபிமானமற்ற மகாபாதக அடக்குமுறைகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஆகவே, தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை அங்கீகரித்து இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தும் அர்த்தமுள்ள தீர்வை சர்வதேச சமூகம் வழங்க முடியாவிட்டால், தமிழ்த் தேசம் தமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்கானசந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். ஏற்கனவே 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது 1976 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு சுதந்திரமான இறையாண்மை கொண்ட மதச்சார்பற்ற அரசை உருவாக்குவதற்கான அமோகமான மக்களாணை சனநாயக ரீதியாக முன்கூட்டியே வழங்கப்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

# இன்றைய ராசி பலன்

**10.01.2022 திங்கட்கிழமை மார்கழி 26**

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

| | | |
|---|---|---|
| **நட்சத்திரம்: அசுவினி** காலை 8.50 - 11.01.2022 காலை 11.10 வரை | பிற்பகல் 12.24 வரை | பிற்பகல் 12.24 வரை |
| **யோகம்: சித்தம்** காலை 10.37-11.01.2022 காலை 10.56 வரை | **பூர்வ பட்ச நவமி** பி.ப 12.24 - 11.01.2022 பிற்பகல் 2.21 வரை | பிற்கரணம்: பாலவம் பி.ப 12.24 - 11.01.2022 அதிகாலை 1.18 வரை |
| **திதி: பூர்வ பட்ச அஷ்டமி** | **முற்கரணம்: பவம்** | |

| | | |
|---|---|---|
| **சுப நேரங்கள்** காலை 6.26 - 7.53 மாலை 4.43 - 6.11 | பிற்பகல் 1.46 - 3.14 | **லோகநாயகி ஸஹஸ்ர சீர்ஷ வதனா அன்னை ப்ரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி** |
| **அசுப நேரங்கள்** | **எமகண்ட காலம்** காலை 10.50- பி.ப 12.18 | |
| **ராகு காலம்** காலை 7.54 - 9.22 | **துர் முகூர்த்தம்** பிற்பகல் 12.42 - 1.29 | |
| **குளிகை காலம்** | பிற்பகல் 3.03 - 3.50 | |

**மேஷம்:** பங்குதாரர் தொழில் சம்பந்தப்பட்ட வருவாய் நல்ல நிலை பெறலாம். நிதி நிலைமை சீராகும். பணியிடத்தில் ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து ஆர்வத்துடன் செயலாற்றும் சூழ்நிலை உண்டாகலாம். தத்துவ விடயங்களின் கற்கைகளும் ஏற்படலாம்.

**ரிஷபம்:** திருமண உறவில் கருத்து வேறுபாடுகள் மறந்து இருப்பது நன்மை. செலவுகள் அதிகரிக்கலாம். சில உறவுகளை பற்றிய கவலை தோன்றலாம். பிள்ளைகளுக்கு தலைவலி சம்பந்தப்பட்ட சிறிய பிரச்சினை தோன்றலாம்.

**மிதுனம்:** பணிகளில் உங்களுக்கு மேலதிக அதிகாரம் உண்டாகலாம். பங்குச்சந்தை முதலீட்டில் இலாபங்கள் அதிகரிக்கலாம். கடன்கொடுத்தல்/வாங்குதல் விடயத்தில் கவனம் தேவைப்படலாம். அரசாங்கம் சம்பந்தப்பட்ட வேலைகள் தடையின்றி நிறைவேறலாம். சில விருப்பங்கள் பூர்த்தியாகலாம்.

**கடகம்:** தொழில்நுட்ப வேலைகளில் இலாபங்கள் அதிகரிக்கும். சுயமரியாதை பற்றிய சிறிய கவலை உண்டாகலாம். தூரப் பயணம் உருவாகலாம். சுயத் தொழில் செய்பவர்களுக்கு சாதகமான நாளாக அமையலாம்.

**சிம்மம்:** உயர்கல்வி பெறும் மாணவர்களுக்கு நல்ல நாளாக அமையலாம். வணிக நிதி இலாபங்கள்மேம்படும். சட்டத்திற்கு புறம்பான விடயங்களில் ஒதுங்கி இருப்பது நன்மை. இறைதியானம் நன்மை.

**கன்னி:** நற்பெயருக்கு களங்கம் தரும் பிரச்சினைகளில் இருந்து ஒதுங்கி இருப்பது நல்லது. உங்கள் மீதுள்ள எதிர்ப்புகளிலும் கவனம் தேவைப்படலாம். இன்று அவசியமற்ற பயணங்களை தவிர்ப்பதும் நன்மை. சில சுயநல நண்பர்களால் பிரச்சினை உருவாகலாம். இறைவணக்கம் தேவை.

**சந்திராஷ்டமம்: உத்தரம் நட்சத்திரம் பாதம் 1/2/3க்கு காலை 8.50 - 11.01.2022 அதிகாலை 4.31 வரை**

**துலாம்:** வணிகத்தில் எதிர்பாராத இலாபங்கள் கிடைக்கப் பெறலாம். அனைத்து வேலைகளும் சரியான திட்டம் மற்றும் புத்திகூர்மையால் உங்களால் நிறைவேற்றப்படும். இல்லத்தில் அமைதியுடன் வளங்களும் உண்டாகலாம். சில குடும்பப் பிரச்சினைகள் நீங்கத் தொடங்கும்.

**விருச்சிகம்:** பணிச்சுமை அதிகரித்தாலும் உற்சாகத்துடன் இருக்கும் நிலை உருவாகலாம். உங்கள் பணி முறையால் மற்றவர்களிடம் ஈர்ப்பு உண்டாகலாம். புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கலாம். சில பிரச்சினைகள் நீங்கலாம்.

**தனுசு:** தேவையற்ற பயணங்களால் கால விரயம் உண்டாகலாம். உங்கள் திறமையை நிருபணம் செய்யும் இன்று கிடைக்கும் நல்ல வாய்ப்பை அலட்சியத்தால் நழுவ விடாமல் கவனமாக இருப்பது நன்மை. காதல் உறவில் கவனம் தேவைப்படலாம். பிள்ளைகளின் பிரச்சினைகளை உணர்ந்து கொள்ள துணை செய்யும் கருத்து பரிமாற்றம் நன்மை தரலாம்.

**மகரம்:** உங்கள் நலம் விரும்புபவர்களை அரவணைத்து செல்லுவது மேன்மை. ஆடம்பர நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்கலாம். பணியிட வேலைகளில் உங்கள் தீவிர முயற்சியால், மேலதிகாரிகளின் மதிப்பு உருவாகலாம்.

**கும்பம்:** வேலை தேடுவோருக்கு புதிய பணி வாய்ப்பு கிடைக்கலாம். இல்லத்தில் ஒரு சுப மங்கள நிகழ்வு திட்டம் உருவாகலாம். மாணவர்களுக்கு சில சிக்கலான பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கலாம். வணிக இலாபங்கள் அதிகரிக்கலாம்.

**மீனம்:** சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் மனக் கவலை தோன்றலாம். இறையருளால் நன்மை கிடைக்கலாம். தொழிலில் சில தடைகள் உண்டாகலாம். வீட்டின் வேலைகளில் நேரம் செல்லலாம். தொழில் சம்பந்தப்பட்ட விடயங்களில் அனுபவ சாலிகள் அல்லது வயதில் மூத்தவர்களிடம் ஆலோசனை பெறுவது நன்மை தரும். இன்று இறைவணக்கம் தேவை.

# தற்போதைய அரசாங்கம் விரைவில் கவிழும்; சஜித் தலைமையில் புதிய ஆட்சி மலரும்

## கோட்டா மீட்பாரென புகழாரம் சூட்டியவர்களே இன்று அவருக்கு எதிராக போர்க்கொடி என்கிறார் திகாம்பரம் எம்.பி.







(க.கிஷாந்தன்)

"நாங்கள் மக்களைக் காட்டிக்கொடுத்து அரசியல் நடத்துவதில்லை. மக்களுக்கான அரசியலையே நடத்தி வருகின்றோம். இனியும் நடத்துவோம். இந்த ஆட்சி விரைவில் கவிழும். சஜித் தலைமையில் புதிய ஆட்சி மலரும். அந்த ஆட்சியில் நாங்கள் அமைச்சராக இருப்போம். மக்களுக்கு பல சேவைகளை வழங்குவோம்" - என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் சூளுரைத்தார்.

இராகலை, வலப்பனை பிரதேசசபை மண்டபத்தில் நேற்று (09) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு சூளுரைத்தார்.

இதன்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தும் உடபுஸ்ஸலாவ, இராகலை, வலப்பனை போன்ற பகுதிகளில் உள்ள அங்கத்தவர்கள் சிலர் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரத்துடன், இணைந்துகொண்டனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.உதயகுமார், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் எம்.ராம் உட்பட கட்சி முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இது தொடர்பில் முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரம் மேலும் கூறியதாவது,

"நான் மக்களுக்காகவே அரசியல் செய்கின்றேன். மக்களைக் காட்டிக்கொடுத்து அரசியல் செய்வதில்லை. அப்படி செய்வதாக இருந்தால் 20ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவு வழங்கிவிட்டு சொகுசு வாகனங்களைப் பெற்றிருக்கலாம்.

அரசுக்கு வாக்களித்த மக்களே இன்று அரசுக்கு எதிராக திரும்பியுள்ளனர். ஆளுங்கட்சியில் உள்ளவர்கள்கூட ஆட்சியைக் கடுமையாக விமர்சிக்கின்றனர். பொருட்களின் விலைகள் உச்சம் தொட்டுள்ளன. பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடும் நிலவுகின்றது. உர நெருக்கடியால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். பெருந்தோட்டத்துறையும் பாதிக்கப்பட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்‌ஷவே மீட்பாரென புகழாரம் சூட்டியவர்களே இன்று அவருக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளனர். 20 வருடங்களுக்கு இந்த அரசை அமைக்க முடியாதென மார்தட்டினர். ஆனால் 2 வருடங்களிலேயே ஆட்டம் கண்டுவிட்டது. இப்படி நடக்குமென எமக்கு தெரியும். அதனால்தான் நாம் எதிரணி பக்கமே இருந்துகொண்டோம். எப்படியும் விரைவில் இந்த அரசு வீட்டுக்கு சென்றுவிடும். உடனே வீட்டுக்கு அனுப்பவும்கூடாது. இந்த ஆட்சியாளர்களின் பலவீனத்தை மக்கள் உணரவேண்டும். அப்போதுதான் இனியும் ஆசைவார்த்தைகளை நம்பி ஏமாறமாட்டார்கள்.

மலையகத்திலும் இராஜாங்க அமைச்சர் ஒருவர் இருக்கின்றார். அவரும் ஜனாதிபதியை கடவுள் என்றார். இப்போது 15 கிலோ கோதுமைமாவுக்கு நிவாரணம் வழங்கப்பட்டதையும் வரவேற்றுள்ளார். ஏனையோருக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு கிலோ மாவுக்கு வெறும் 40 ரூபாதான் நிவாரணம். வெட்கமின்றி இதனையும் வரவேற்கின்றனர்.

சின்ன பையனால் முடியாது என சொன்னோம். நீங்கள் ஒரு இலட்சம் வாக்குகளை வழங்கினீர்கள். இன்று நாங்கள் செய்த திட்டங்களை திறக்கும் திறப்பு விழாவைதான் நடத்திவருகின்றனர். மஹிந்த ராஜபக்‌ஷ மக்களை பார்த்து அன்று 'செபத' என கேட்டார். நாமும் இப்போது 'சந்தோஷமா' எனக் கேட்கின்றோம் - என்றார்.

# பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ – சீன வெளிவிவகார அமைச்சர் சந்திப்பு



இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள சீனாவின் வெளிவிவகார அமைச்சர் வாங் யீ, பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பின்போது பல இருதரப்பு விடயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாக பிரதமர் ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.

இலங்கை மருத்துவ மாணவர்களை சீனாவுக்குத் திரும்பச் செல்வதற்கான ஏற்பாடுகள் குறித்த கலந்துரையாடல்கள் மீது கவனம் செலுத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுற்றுலா, முதலீடுகள், கொவிட்-19 நிவாரணம் மற்றும் கொவிட்டுக்கு பிந்தைய தயார்நிலை உள்ளிட்ட பல பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு சீன அரசாங்கம் தொடர்ந்தும் வழங்கி வரும் ஆதரவிற்கு பிரதமர் நன்றி தெரிவித்தார். எதிர்வரும் காலங்களில் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு மேலும் மேலும் வலுவடையும் என நம்புவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

# இளைஞர் குழுவுடன் மோதல்; இராணுவ வீரர்கள் மூவர் காயம்

மினுவாங்கொடையில் இராணுவத்தினருக்கும் இளைஞர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் 3 இராணுவ வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

வவுனியா பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் கடமையாற்றும் மூன்று இராணுவத்தினர், தற்போது கொழும்பில் உள்ள இலங்கை இராணுவத் தலைமையகத்தில் இணைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கும் மினுவாங்கொடையில் வசிக்கும் பாடசாலை மாணவர்கள் உட்பட ஏழு இளைஞர்களுக்குமிடையில் இந்த மோதல் இடம்பெற்றது.

மோதலுக்கான காரணம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. இராணுவத்தினர் செய்த முறைப்பாட்டையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் மினுவாங்கொட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த வழக்கு எதிர்வரும் ஜனவரி 24ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கறுப்புப் பட்டியலில் இருந்து நீக்குக

## சீனாவிடம் மக்கள் வங்கி கோரிக்கை

சீனாவின் கறுப்புப் பட்டியலில் இருந்து தம்மை நீக்குமாறு இலங்கை மக்கள் வங்கி கோரிக்கை விடுத்துள்ளது.

கடன்பத்திரத்திற்கு அமைய குறித்த கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளதாக சீன தூதரகத்துக்கு தாம் அறிவித்துள்ளதாக மக்கள் வங்கி தெரிவித்துள்ளது.

எனவே, இன்றைய தினத்திற்குள் (10) குறித்த கறுப்புப்பட்டியலில் இருந்து தம்மை நீக்கிக்கொள்ள எதிர்பார்ப்பதாக மக்கள் வங்கி குறிப்பிட்டுள்ளது.

# யூரியா உரத்தை பெற்றுத்தருவதாக ஏமாற்றிய விவசாயி; மரத்தில் கட்டிவைத்து தாக்கி பணத்தை பெற்றபின் விடுவிப்பு

(அநுராதபுரம் நிருபர்)

யூரியா உர மூடைகளை பெற்றுத் தருவதாக கூறி பணத்தினை பெற்றுக் கொண்டதன் பின்னர் ஏமாற்றிய விவசாயி ஒருவரை மரத்தில் கட்டி வைத்து மீண்டும் பணத்தினை வழங்கியதன் பின்னர் அவிழ்த்துவிட்ட சம்பவமொன்று அநுராதபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் அநுராதபுரம் பரசன் கஸ்வெவ பொலிஸ் பிரிவிலுள்ள கஹகொள்ளாவ பகுதியில் நேற்று முன்தினம் (08) இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பரசன்கஸ்வெவ பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

அநுராதபுரம் தலாவ பகுதியிலுள்ள நபர் ஒருவருக்கு இதற்கு முன்னர் யூரியா உர மூடைகள் மூன்றினை 50 ஆயிரத்துக்கும் அதிகமான விலைக்கு விற்பனை செய்துள்ளதுடன், இன்னும் சில உர மூடைகளை பெற்றுத்தருவதாக கூறி பணத்தினை வாங்கிவிட்டு உரத்தினை வழங்காது ஏமாற்றித் திரிந்த விவசாயி ஒருவருக்கே இந்நிலை ஏற்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

# நிலக்கரி கொள்வனவிற்கான நிதி அரச திறைசேரியிலிருந்து

மின்சார உற்பத்திக்குத் தேவையான நிலக்கரியை கொள்வனவு செய்வதற்கு தேவையான நிதி, அரச திறைசேரியில் இருந்து வழங்கப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

தடையின்றி மின்சாரத்தை விநியோகிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

செயலிழந்துள்ள நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தின் மின்பிறப்பாக்கிகளும் சில நாட்களில் பிரதான மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருளைப் பெறுவதற்காக பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு 18 பில்லியனைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக மின்சக்தி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மகளிர் எழுச்சி நாள் நிகழ்வு யாழ்ப்பாணத்தில்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு







(யாழ். நிருபர்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணியின் ஏற்பாட்டில் மகளிர் எழுச்சி நாள் நிகழ்வு நேற்றையதினம் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

"பெண்களே நம் தேசத்தின் கண்கள்" எனும் தொனிப்பொருளில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்கள் எழுச்சியோடு முன்னோக்கி செல்ல வேண்டும் என்னும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கலை கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் வாசுகி சுதாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை மாவட்ட மூன்று தேர்தல் தொகுதிகளுக்கு அமைப்பாளர்கள் நியமனம்

(சீனக்குடா நிருபர்)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூன்று தேர்தல் தொகுதிகளுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களை நியமித்துள்ளது.

இதன்படி, மூதூர் தொகுதியின் அமைப்பாளராக கிழக்கு மாகாண சபையின் முன்னாள் தவிசாளர் சிரேஷ்ட சட்டத்தரணி எச்.எம்.எம்.பாயிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை தொகுதிக்கான அமைப்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகரவும் சேருவில தொகுதிக்கான அமைப்பாளராக மகேஷ் சதுரங்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, திருகோணமலை மாவட்ட அமைப்பாளராக மறைந்த முன்னாள் அமைச்சர் எம்.கே.ஏ.டிஸ்.குணவர்தனவின் புதல்வர் நளின் குணவர்தன நியமிக்கப்பட்டார்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மைத்ரிபால சிறிசேன நேற்று முன்தினம் (08) கொழும்பில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டின்போது வழங்கிவைத்தார்.

உலகளாவிய ரீதியில் சர்வதேச மனித உரிமைகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1950 டிசம்பர் 4ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் 317ஆவது கூட்டத் தொடரில் சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் யோசனை திட்டத்தின் 423 (ஏ) பிரிவுக்கமைய, ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகள் மற்றும் ஏனைய அமைப்புகள் டிசம்பர் 10ஆம் திகதியை சர்வதேச மனித உரிமைகள் தினமாக ஏற்றுக்கொண்டன.

அனைத்து இனத்தவர்களுக்கும் மனித உரிமைகளை உறுதிசெய்தல், உலகளாவிய ரீதியில் எழும் மனித உரிமை மீறல்களுக்கு தீர்வு காணல் மற்றும் மனித உரிமைகளை பலப்படுத்தல் ஆகியவை சர்வதேச மனித உரிமை தினத்தின் நோக்கமாகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடான இலங்கை, மனித உரிமை கொள்கைகளை 1955ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டது.

அரசியல், பொருளாதாரம் மற்றும் கலாசாரம் முதலிய அனைத்து விடயங்களிலும் மக்களின் உரிமைகளை பாதுகாப்பது அனைத்து அரசாங்கங்களினதும் பொறுப்பு என 1993ஆம் ஆண்டு நடைபெற்ற மனித உரிமை மாநாட்டின் போது தெரிவிக்கப்பட்டது.

நிலைபேறான அபிவிருத்தி கொள்கையில் மனித உரிமை கொள்கை முன்னுரிமையில் உள்ளது. மனித உரிமை கொள்கையில் ஒற்றுமை, சமத்துவம், கௌரவம், பொறுப்பு மற்றும் சட்டவாட்சி உள்ளிட்ட விடயங்கள் உள்ளடங்குகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து இத்தனை ஆண்டுகள் கடந்த பிறகும் இங்கு அப்பட்டமாக மனித உரிமைகள் மீறப்படுவதாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் தொடர்ந்தும் சாடி வருவதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

உள்நாட்டு யுத்தம் முடிந்த பின்னர் இத்தனை ஆண்டுகள் கடந்தும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பது உறுதிப்படுத்தப்படவில்லை. கடந்த காலங்களில் நிலவிய அதே அடக்குமுறை, துன்புறுத்தல் போன்றவை தொடர்கின்றன.

2015ஆம் ஆண்டில், மனித உரிமை மீறல் நடக்காதவாறு பார்த்துக் கொள்வதாக அப்போதைய அரசு ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு உறுதிமொழி அளித்த பிறகும், தற்போதைய அரசு, அதன் முந்தைய ஆட்சியாளர்களை போலவே உண்மையை கண்டறியவும் குற்றங்களுக்கு பொறுப்புடைமையாக்கும் நடவடிக்கையிலும் தோல்வி அடைந்திருக்கிறது.

போரில் உயிர் பிழைத்த ஆயிரக்கணக்கானோரின் வாழ்வு நிர்மூலமாகியிருக்கிறது. அதுமட்டுமின்றி அமைப்பு முறை, கட்டமைப்பு, கொள்கைகள், பணியாளர்கள் போன்றவற்றில் முந்தைய காலம் போலவே விதிமீறல்கள் தொடருகின்றன. ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் முக்கியமான பணி, குறைகளுக்கு தீர்வு கண்டு முந்தைய விதிமீறல்கள் எதிர்காலத்தில் நடக்காதவாறு கவனிப்பதுதான். ஆனால், அதற்கு இலங்கை எந்தளவு தூரம் ஒத்துழைத்திருக்கிறது என்று வினவினால் வரும் விடை பூஜ்ஜியமே.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜனவரி 10ஆம் திகதி, திங்கட்கிழமை

# மனித உரிமைகள் மதிக்கப்படவேண்டும்

இலங்கையில் முந்தைய ஆண்டுகளில் வளர்ந்து வந்த சுதந்திர சிவில் சமூகமும் ஊடக சுதந்திரமும் தற்போது வேகமாக சுருங்கி வருகின்றன. நீதித்துறை சுதந்திரம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஆகியவை 20ஆவது அரசியலமைப்பு திருத்தம் மூலம் பலவீனமாக்கப்பட்டுள்ளன.

முக்கியமான சிவில் நிர்வாகப் பணிகளில் அதிகரித்துவரும் இராணுவத் தலையீடு, ஜனநாயக ஆளுகை மீதான ஆக்கிரமிப்பாக பார்க்கப்படுகிறது. பிரத்தியேக சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதில் காணப்படும் தொடர்ச்சியான தோல்வி அல்லது விதிமீறல்களுக்கு காரணமானவர்களை அடையாளம் காணாமல் இருப்பது, கொடூரமான குற்றங்கள் மற்றும் விதிமீறலில் குற்றம் சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகளை பொறுப்புடைமைக்கு ஆளாக்காமல் விட்டுள்ளது அரசின் அலட்சியத்தை காட்டுகிறது. அத்துடன் நீதிமன்றங்களில் தண்டனைக்குள்ளாவோர் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்படும் சோக நிலை தொடர்கிறது.

தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினர், அரசின் உயர் பொறுப்புகள் உள்ளிட்ட பணிகளில் சேராதவகையில், அவர்கள் பிளவுபடுத்தக்கூடிய மற்றும் தவறான சொல்லாடல்களால் தவிர்க்கப்படுகிறார்கள்.

கொவிட்-19 சடலங்கள் கட்டாயப்படுத்தப்பட்டு தகனம் செய்யப்பட்டமை முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ சிறுபான்மை சமூகங்களுக்கு வலியையும் சங்கடத்தையும் ஏற்படுத்தியது.

கடந்த கால வன்முறைகள், இப்போதும் தொடரலாம் என்ற அபாய செய்தியின் அறிகுறி தெளிவாக தென்படுகிறது. எப்போதுமே, அடுத்து வந்த அரசுகள், இறந்தகாலத்திற்கான உண்மையையும் பொறுப்புடைமையையும் உறுதிப்படுத்துவதில் தோல்வியடைந்து விட்டன. உண்மையில், மனித உரிமைகள் வழக்குகளில் அரசாங்கம் நீதி நடைமுறைகளுக்கு தடங்கலை ஏற்படுத்தியிருக்கிறது.

நல்லிணக்கம், நீதி வழங்குதல் போன்ற நடவடிக்கையில் இலங்கை அரசு தொடர்ந்து ஈடுபாடு காட்டி வருவதாக தெரியவில்லை. ஜனநாயகத்தை நிலைநாட்டுமாறு சர்வதேசம் கூறும்போது, எந்த அடிப்படையில் இலங்கை மீதான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என்பதற்கான ஆதாரங்களை இலங்கை அரசு கேட்பது ஏன் என்பது புரியவில்லை.

2015-2019 வரை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின்போது, மனித உரிமை மீறல்கள் தொடர்பான பல பொலிஸ் விசாரணைகள் முன்னேற்றம் கண்டன. இவை கொலைகள் மற்றும் வலிந்து காணாமல் போனவர்களுக்குரிய உத்தியோகபூர்வ பொறுப்புக்கான ஆதாரங்களை வெளிப்படுத்தின. எவ்வாறாயினும், இப்போதைய அரசின் கீழ், 2009ஆம் ஆண்டு சிரேஷ்ட ஊடகர் லசந்த விக்ரமதுங்க கொலை உட்பட 2010இல் பத்திரிகையாளர் பிரகீத் எக்னெலிகொடவின் வலிந்து காணாமலாக்கல், 2008-2009இல் இளைஞர்கள் கடற்படை புலனாய்வு அதிகாரிகளால், பணம் அறவிடுவதற்காக, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை போன்ற முக்கியமான விசாரணைகள் தடம் புரண்டன.

2006ஆம் ஆண்டு திருகோணமலை படுகொலை, அதில் ஐந்து தமிழ் மாணவர்கள் கொல்லப்பட்டனர். மற்றும் ஒரு பிரெஞ்சு உதவிக்குழுவான கான்ட்ரே லா ஃபைம் (Contre la Faim) உடைய 17 உறுப்பினர்களை படுகொலை செய்தல் உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பிற முக்கிய விசாரணைகளில் எந்த முன்னேற்றமும் இல்லை.

அதே நேரத்தில் பாதுகாப்புப் படையினர், காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்றறிய போராடும், பாதிக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் மீது கடுமையான கண்காணிப்பு மற்றும் துன்புறுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

முந்தைய இலங்கை அரசாங்கங்கள் உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண சர்வதேச அழுத்தத்தை திசைதிருப்ப விசாரணை ஆணைக்குழுக்களை பயன்படுத்தின. அந்த ஆணைக்குழுக்கள் ஒருபோதும் அடிப்படை சர்வதேச தரங்களை பூர்த்தி செய்யவில்லை. மனித உரிமைகளில் நீதியான நடவடிக்கையை இலங்கை மறுப்பதால் அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கை படை அதிகாரிகள் அங்கு வருவதற்கு தடைகளை விதித்துள்ளன.

உலகை இப்படியாக தொடர்ந்தும் ஏமாற்றி அவப்பெயரை சம்பாதிக்காமல் மனித உரிமைகளை நிலைநாட்டி, ஜனநாயக மாண்புகளை பேண இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைய நாளில் அதனையே நாம் வலியுறுத்த விரும்புகிறோம்.

# மனித குலம் காக்க ஓர் அருமருந்து!

'நவீன கால டார்வின்', 'டார்வினின் வாரிசு' என்றெல்லாம் புகழப்படும் இ.ஓ.வில்சன் (எட்வர்ட் எஸ்போர்ன் வில்சன்) ஒரு பரிணாமவியலர், உயிரி-புவியியலர், சமூக உயிரியலர், எறும்பியலர் (myrmecologist). கடந்த நூற்றாண்டின் சிறந்த அறிவியல் எழுத்தாளர்களில் ஒருவரும்கூட. அமெரிக்காவின் மெசசூசிட்ஸ் மாகாணத்தில் 2021 கிறிஸ்மஸுக்கு அடுத்த நாள் 92 வயதில் காலமான அவர், உயிரியலின் வழியாக உலகைப் புரிந்துகொள்ள முயன்றவர். அறிவியல் ஆராய்ச்சிகளின் மூலம் தான் பெற்ற வெளிச்சத்தை வாழ்நாள் முழுவதும் உலகுக்குக் கடத்திக்கொண்டிருந்த அவர், உலகம் இன்றைக்கு எதிர்கொண்டுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக 'பூவுலகில் பாதி'யை (Half-Earth) இயற்கைக்கு அர்ப்பணித்தல் என்கிற கருத்தாக்கத்தை முன்வைத்தார். அந்தக் கருத்தாக்கத்தைத் தெளிவுபடுத்தி அவர் வலியுறுத்திய விதத்துக்குப் பின்னால், நீண்டதொரு ஆராய்ச்சிப் பயணம் இருக்கிறது.

### சிற்றுயிர் உலகம்

'ஒவ்வொரு குழந்தைக்கும் பூச்சிகளைப் பின்தொடர்ந்த பால்ய காலம் ஒன்றிருக்கும். அந்தப் பால்ய கால ஆர்வத்தைத் தாண்டி நான் வெளியே வரவில்லை. சூழலியலை ஆராய்ந்து பார்ப்பதிலும் குழந்தைகளுக்குப் பெருவிருப்பம் இருக்கும். பூச்சியியலை நான் தேர்ந்தெடுத்ததற்கு இப்படி குழந்தை மனத்துடன் இருந்தது ஒரு காரணம் என்றால், மற்றொரு காரணம், என்னால் ஒரு கண்ணால் மட்டுமே பார்க்க முடியும் என்பது. அதனால் தான் சிறிய விஷயங்களை உற்றுநோக்குவதில் கவனம் செலுத்தினேன்' என்று சுயசரிதையில் வில்சன் குறிப்பிட்டுள்ளார். அவருடைய ஏழு வயதில் தூண்டில்விட்டு மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, வலுவாக இரையைக் கடித்த ஒரு முள்மீனை நீரிலிருந்து வேகமாகப் பிடித்து இழுத்தபோது, மீனின் துடுப்பிலிருந்த கூர்மையான முள் அவருடைய வலது கண் பார்வையை வெட்டிவிட்டது. அதனால் வாழ்நாள் முழுக்க ஒரு கண்ணால் மட்டுமே தெளிவாகப் பார்க்கக்கூடிய நிலை அவருக்கு உண்டானது.

பால்ய காலத்தில் அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டன் பகுதியில் உள்ள ராக் கிரீக் பூங்கா பகுதிக்கு வில்சன் அடிக்கடி சென்று திரும்பினார். 'ஒரு நாள் மக்கிக்கொண்டிருந்த ஒரு மரக்கிளையை வெளியே எடுத்தேன். அதன் அடியில் சிட்ரோனெல்லா எறும்புகள் இருந்தன. அந்தக் கூட்டத்திலிருந்த உழைப்பாளி எறும்புகள் சிறிதாக, பருத்து, மஞ்சள் நிறத்தில் புத்திசாலிகளாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தன. அந்த எறும்புகளிலிருந்து எலுமிச்சைவாசம் வந்தது. அன்று எறும்புகள் குறித்து மனத்தில் பதிந்த அந்த பிம்பம் என் வாழ்நாள் முழுக்கத் திரும்பத் திரும்ப ஒரு நீங்காத காட்சியாக மனதில் பளிச்சிட்டுக்கொண்டே இருந்தது' என்கிறார்.

பதின்ம வயதின் இறுதியில் பூச்சியியலர் ஆகும் ஆர்வத்துடன் ஈக்களைச் சேகரிக்கத் தொடங்கினார். அப்போது இரண்டாம் உலகப் போர் நடந்துகொண்டிருந்ததன் காரணமாகப் பூச்சி மாதிரிகளைக் குத்திவைக்கும் குண்டூசிகள் கிடைப்பது சிக்கலாக இருந்தது. இதன் காரணமாகச் சிறு குப்பிகளில் சேகரித்து ஆராயக்கூடிய எறும்புகளின் மீது அவருடைய கவனம் திரும்பியது.

### உயிரினச் சமநிலை

புகழ்பெற்ற ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் 1956இல் பயிற்றுவிக்கும் பணியில் சேர்ந்தார். எறும்பு வகைப்பாட்டியலராகவும் அவற்றின் பரிணாமவியல் வளர்ச்சி குறித்தும் ஆராயத் தொடங்கினார். சக எறும்புகளுடன் தொடர்புகொள்வதற்காக பெரமோன் எனும் வேதிப்பொருளை எறும்புகள் பயன்படுத்துகின்றன என்பதை முதலில் கண்டறிந்தவர் அவர்தான். 1960களில் பிரபலக் கணிதவியலரும் சூழலியலருமான ரொபர்ட் மெக்ஆர்தருடன் இணைந்து வில்சன் பணியாற்றினார். ஃபுளோரிடா கீஸ் என்கிற சிறு தீவில் 'உயிரின வகைகள் சமநிலைக் கோட்பாடு' குறித்து அவர்கள் ஆராயத் தொடங்கினார்கள்.

இதற்காக அங்கிருந்த அலையாத்தித் தீவுகளில் பரிசோதனை மேற்கொண்டார்கள். முதலில் அந்தத் தீவுகளில் இருந்த பூச்சி வகைகளைக் கணக்கெடுத்தார்கள். பிறகு, அங்கிருந்த சிற்றுயிர்கள் அனைத்தையும் புகையூட்டி அழித்தார்கள். பிறகு புதிய உயிரின வகைகள் அந்தத் தீவுக்கு எப்படி வந்து, பெருகத் தொடங்குகின்றன என்பதை ஆராய்வதற்காக அவர்கள் காத்திருந்தார்கள். ஓரே ஆண்டில் அந்தச் சிறு தீவுகளில் இருந்த பல்லுயிர் வகைகள் ஒரு யுகத்துக்கு முந்தைய நிலைக்குத் திரும்பின. பிறகு, உயிரினப் பன்மை சமநிலையை எட்டி, அந்த இடத்தில் அவை நிலைத்திருக்கத் தொடங்கின.

இந்த நேரடிக் கள ஆய்வு முடிவுகள் அடிப்படையில், உயிரின வகைகள் - அவை வாழும் நிலப்பரப்பு இடையிலான சமன்பாடு எனும் கோட்பாடு முன்வைக்கப்பட்டது. இந்த ஆய்வு முடிவின்படி, ஒரு தீவில் வாழும் உயிரின வகைகளில் சமநிலை நிலவுகிறது என்பதுடன், அந்தத் தீவு சுருங்கினால், சில உயிரின வகைகளுக்கு இடமில்லாமல் போகும் என்பதும் உண்மையானது. அதாவது, ஓர் அளவுக்கு மேல் தீவுகளால் கூடுதல் உயிரின வகைகளைத் தாங்க முடிவதில்லை. அப்படித் தாக்குப்பிடிக்க முடியாத உயிரினங்கள் அழிந்துபோகின்றன. இந்த ஆய்வு அடிப்படையிலான 'தீவு உயிரி-புவியியல் குறித்த கோட்பாடு' என்கிற புத்தகம், சூழலியலர்களுக்கு நிரந்தரப் பாடமாக மாறியது.

சமூக நடத்தைகள் மரபணுக்களால் தீர்மானிக்கப்படுகின்றன என்கிற கருதுகோள் அடிப்படையில், 1975இல் அவர் எழுதிய 'Sociobiology: The New Synthesis' (சமூக உயிரியல்) என்கிற நூல் பெரும் சர்ச்சைக்குள்ளானது. சுயநலமற்றுப் பிறருக்கு உதவும் குணம் மரபணு வழியாகவும் இயற்கைத் தேர்வு மூலமாகவும் வந்திருக்கலாம் என்று விலங்கு சமூகங்களை முன்வைத்து வில்சன் கூறினார். குறிப்பாக, அந்த நூலின் கடைசி அத்தியாயத்தில் மனித சமூகத்தில் அதிகாரப் படிநிலை நிலவுவதற்கு மரபணுரீதியிலான காரணங்கள் இருக்கலாம் என்கிற கருதுகோளை அவர் முன்வைத்திருந்தார். மனித சமூக நடத்தைகளுக்கும் மரபணுக்கள் காரணமாக இருக்கலாம் என்று அவர் கூறியதே சர்ச்சைக்குள்ளானது.

சமூக உயிரியல் அடிப்படையில் அவர் எழுதிய 'On Human Nature' (1978) புலிட்சர் பரிசைப் பெற்றது. பிறகு, பெர்ட் ஹால்டாப்ளருடன் இணைந்து அவர் எழுதிய



'The Ants' (1990) நூலும் புலிட்சர் பரிசைப் பெற்றது. சர்ச்சைக்குரிய சமூக-உயிரியல் கருதுகோளுக்கு மாறாக, உயிரி-புவியியல் சார்ந்த வில்சனின் பங்களிப்பே பரவலான கவனத்தைப் பெற்றது, குறிப்பிடத்தக்க ஒன்றாகவும் மாறியது.

### பெரும் கொடை

புத்தாயிரத்துக்குப் பிந்தைய ஆண்டுகளில் மட்டும் 14 புத்தகங்களை அவர் எழுதியிருக்கிறார். 'பூவுலகில் பாதி'யை இயற்கைக்கு அர்ப்பணித்தல் என்கிற கருத்தாக்கத்தை முன்வைத்து 'Half-Earth: Our Planet's Fight for Life' (2016) என்கிற நூலை எழுதியபோது அவருடைய வயது 87. பருவநிலை மாற்றத்தைத் தீவிரமடைய வைக்கும் உயிரினங்கள் திரளாக அற்றுப்போதலையும், சூழலியல் உருக்குலைவையும் தடுத்து நிறுத்த முடியும் என்று வில்சன் நம்பினார். அவரது கடைசி ஆசை, நிறைவேறாக் கனவு என்று இந்தக் கருத்தாக்கத்தை கூறலாம் என்கிறார் அமெரிக்க சூழலியல் எழுத்தாளர் ஜெரிமி ஹான்ஸ்.

மக்களின் நன்மைக்காகவும் இயற்கையின் நன்மைக்காகவும் பூவுலகில் பாதியை இயற்கைக்கு அர்ப்பணித்துப் பாதுகாக்க வேண்டும். அந்தப் பகுதியில் மனிதர்களைத் தவிர்த்த மற்ற உயிரினங்கள் செழித்து வாழ்வதற்கு இடமளிக்க வேண்டும். இதன் மூலம் இயற்கை தனக்குத் தானே புத்துயிர் ஊட்டிக்கொள்ளும். தன் வாழ்நாளின் பெரும் பகுதியைப் பரிணாமவியல் ஆராய்ச்சிக்காகச் செலவிட்ட ஒருவர், பூவுலகுக்கும் மனித குலத்துக்கும் அளித்த மிகப் பெரிய கொடை இந்தக் கருத்தாக்கம் என்று ஜெரிமி குறிப்பிடுகிறார்.

பூவுலகில் பாதியை இயற்கைக்கு அர்ப்பணித்தால் 80 வீத உயிரினங்களைக் காப்பாற்ற முடியும். குறிப்பாக, உயிரினப் பன்மை மிகுந்த கடல் பவளத் திட்டுகள், வெப்பமண்டல மழைக்காடுகள் உள்ளிட்டவற்றைக் காப்பது அவசியம். இது சாத்தியமானால் உயிரினங்கள் திரளாக அற்றுப்போதலையும் ஒட்டுமொத்த சூழலியல் சீர்குலைவையும் தவிர்க்க முடியும். மனித நாகரிகமும் பேரழிவிலிருந்து தப்பும்.

### சாத்தியமற்றதா?

மனிதத் தூண்டுதலால் உலகில் பேரழிவு (Anthropocene) நடைபெற்றுவரும் காலம் என்று நாம் வாழும் காலம் அடையாளப்படுத்தப்படுகிறது. இந்தப் பின்னணியில் பூவுலகில் பாதியை இயற்கைக்கு அர்ப்பணிப்பது என்பது நடைமுறை சாத்தியமற்ற அறிவியல் புனைவைப் போல் தோற்றமளிக்கலாம். இன்றைய திகதிக்குப் பூவுலகின் நிலப்பரப்பில் 17 வீத காடுகளும் 7 வீத பெருங்கடல்களும் ஏதோ ஒரு வகையில் பாதுகாப்பைப் பெற்றுள்ளன. அப்படியென்றால், பூவுலகில் பாதியைக் காப்பதற்கான இடைவெளி பெரிது. அதே நேரம் இது சாத்தியமற்றதல்ல. உலக சராசரி வெப்பநிலை மேலும் 1.5 பாகை செல்சியஸ் அதிகரிக்காமல் தடுத்து நிறுத்த, '30 க்கு 30' என்கிற திட்டத்தை மார்ஷல் தீவுகள் 2016இல் முன்மொழிந்தன. அதன்படி பூவுலகின் 30வீத நிலப் பகுதியையும் 30வீத கடல் பகுதியையும் பாதுகாக்க 50 நாடுகள் முன்வந்துள்ளன.

இப்படிச் செய்வதன்மூலம் புவியை வெப்பப்படுத்திவரும் கரியமிலவாயு கூடுதலாகக் கிரகிக்கப்படும், தூய தண்ணீர் கிடைக்கும், மண் வளம் பெறும், உயிரினங்கள் செழிக்கும், இன்னும் என்னென்ன வகைகளிலெல்லாம் இயற்கை மீள வழியுண்டோ அத்தனை வழிகளிலும் இயற்கை மீண்டெழும். அதன் பலனாக மனித குலம் உட்பட அனைத்து உயிரிகளும் காக்கப்படும், உயிரைக் கையில் பிடித்துக்கொண்டிருக்கும் பூவுலகு இழந்த ஆரோக்கியத்தைத் திரும்பப்பெறும். பூவுலகுக்குப் புத்துயிர் ஊட்டுவதற்கு இ.ஓ.வில்சன் முன்வைத்த இந்த அருமருந்து, உத்தரவாதமாகப் பலன் கொடுக்கும். ஆனால், அந்தத் தீர்வைச் செயல்படுத்துவது யாரோ சிலருடைய கைகளில் இல்லை. நம் ஒவ்வொருவர் கைகளிலுமே உள்ளன என்பதைத் தன் பணி, எழுத்து வழியாக உணர்த்தி வில்சன் நம்மிடமிருந்து விடைபெற்றிருக்கிறார்.

• ஆதி வள்ளியப்பன்
நன்றி - இந்து

## இன்றைய நாளில்...

- 220 – சீனப் பேரரசர் சியான் முடி துறந்ததை அடுத்து ஆன் அரசமரபு முடிவுக்கு வந்தது.
- 1655 – யாழ்ப்பாணத்தின் போர்த்துக்கேய ஆளுநர் அன்டோனியோ டி மெனேசா மன்னாரில் இருந்து கொழும்பு செல்லும் வழியில் முகத்துவாரம் என்னும் இடத்தில் டச்சுப் படைகளினால் சிறைப் பிடிக்கப்பட்டார்.
- 1684 – ஐசாக் நியூட்டன் புவியீர்ப்பு விதிகளின் கொள்கைகளில் எழுதிய கெப்லரின் விதிகளின் தீர்வுகள் அரச கழகத்தில் எட்மண்ட் ஏலியினால் படிக்கப்பட்டது.
- 1768 – முதலாவது பிரித்தானிக்கா கலைக்களஞ்சியம் வெளியிடப்பட்டது.
- 1901 – முதலாவது நோபல் பரிசு வழங்கும் நிகழ்வு ஸ்டக்ஹோம் நகரில் இடம்பெற்றது.
- 1902 – டாஸ்மேனியாவில் பெண்களுக்கு வாக்குரிமை வழக்கப்பட்டது.
- 1906 – அமெரிக்க அரசுத்தலைவர் தியொடோர் ரோசவெல்ட் ரஷ்ய - ஜப்பானியப் போரை முடிவுக்குக் கொண்டுவந்தமைக்காக அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார். இது ஒரு அமெரிக்கர் பெற்ற முதலாவது நோபல் பரிசாகும்.
- 1909 – செல்மா லோவிசா லேகர்லாவ் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற முதலாவது பெண் என்ற பெருமையைப் பெற்றார்.
- 1948 – மனித உரிமைகள் குறித்த அனைத்துலகப் பிரகடனத்தை ஐ.நா. பொதுச் சபை அறிவித்தது. இந்நாள் உலக மனித உரிமைகள் நாள் ஆக அறிவிக்கப்பட்டது.
- 1984 – ஐக்கிய நாடுகள் பொதுச் சபை சித்திரவதைக்கு எதிரான ஐ.நா. உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டது.
- 2006 – வாகரை, மாங்கேணியில் இலங்கைப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் 17 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.
- 2016 – துருக்கி, இஸ்தான்புல் நகரில் உதைபந்தாட்ட அரங்கில் இரண்டு குண்டுகள் வெடித்ததில் 38 பேர் கொல்லப்பட்டனர். 166 பேர் காயமடைந்தனர்.

## நக்கல் நமசிவாயம்



# தடுப்பூசி தொடர்பில் தவறான தகவலை பரப்புவோர் மீது நடவடிக்கை எடுக்கவும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தல்



தடுப்பூசி தொடர்பில் தவறான தகவல்களை பரப்புவோருக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்டளைச் சட்டத்தின்கீழ் கடும் நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தடுப்பூசி திட்டத்தை பலவீனப்படுத்தும் நோக்கில் சில குழுக்கள் செயற்படுகின்றன என அச்சங்கத்தின் செயலாளரான வைத்தியர் செனல் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் சில குழுக்கள் தடுப்பு மருந்துகளை பெற்றுக்கொள்வதில் பொது மக்கள் மத்தியில் அச்சத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்துவதை தாங்கள் அவதானித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதுபோன்ற குழுக்கள் பொதுமக்களை தடுப்பூசி மீது நம்பிக்கை இழக்கச் செய்கின்றன. நாட்டில் போதியளவு தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளபோதிலும், பொதுமக்களின் ஆர்வம் குறைவாகவே உள்ளது.

வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான முக்கிய காரணி வைரஸுக்கு எதிரான தடுப்பூசிகளைப் பெறுவதாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்தியப் பிரதமரின் கடித முயற்சிக்கு மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகளின் பேராதரவுக்கு நன்றி

## ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் தெரிவிப்பு

இந்தியப் பிரதமரின் கடித முயற்சிக்கு மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகளின் பேராதரவுக்கு நன்றி கூறுகிறோம் என ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ் பேசும் மக்களின் கட்சிகள் ஒன்றுசேர்ந்து இந்தியப் பிரதமருக்கு அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப் படுத்தக் கோருவதன் மூலம் மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை பகிர்ந்து மக்கள் முகங்கொடுத்திருக்கும் தற்போதைய பிரச்சினைகளிலிருந்து மீட்கும் முயற்சியை மேற்கொண்டிருந்தோம்.

வடக்கு, கிழக்கை மையப்படுத்திய கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டில் அந்த முயற்சியை முன்னெடுத்திருந்தபோது, மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகளின் ஆதரவையும் பலத்தையும் கோரி நின்றோம். எவ்வித தயக்கமும் இல்லாது எமது முயற்சிக்கு நலமும் பலமும் சேர்க்கும் வகையில் நம்மோடு தோளோடு தோள் நின்று பயணிக்க முன்வந்தமைக்கு நன்றி கூறுகிறோம்.



இதனால் எமக்கு உத்வேகம் தந்துள்ளீர்கள்.

அனைத்து தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளையும் பிரதிபலிக்கும் வகையான வரைவை தயாரிக்க முற்பட்ட போதும் எமது அடிப்படை கோரிக்கைகளான தாயகம், சுயநிர்ணய உரிமை, சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு என்பவற்றில் நம்மால் விட்டுக்கொடுக்க முடியாத சூழ்நிலையை நீங்கள் புரிந்து கொண்டீர்கள். அதேநேரம், அதில் உங்களால் கையொப்பமிட முடியாத இக்கட்டான நிலையையும் நாங்களும் விளங்கிக் கொண்டோம். இருப்பினும், உங்களால் முன்வைக்கப்பட்ட மலையக மக்களின் கரிசனைகளையும் பிரதிபலித்துள்ளோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது மக்கள் எதிர்கொண்டிருக்கும் அரசியல் இக்கட்டிலிருந்து எம் மக்களை மீட்க நாம் முற்பட்டபோது எமது தரப்பிலிருந்து எம்மை விமர்சித்தும், எதிர்ப்புகளை வெளியிட்டும், கருத்துகளை பதிவிட்டும் தடுக்கும் முயற்சியிலும் சுயவிளம்பரங்களை தேடுவதிலும் ஈடுபட்டிருந்த வேளையில் உங்களது நாகரீகமான நடைமுறை அவர்களுக்கு ஒரு பாடமாக அமையும் என்று நம்புகிறோம்.

உங்களது அனைத்து முயற்சிகளிலும் எங்கள் ஆதரவு என்றும்போல் தொடர்ந்தும் இருக்கும் என்பதை உறுதியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். அதேவேளை, எம்மக்களின் விடிவிற்கான தொடர் பயணத்தில் நீங்கள் தொடர்ந்தும் எம்முடன் பயணிக்க விருப்புடன் கோரி நிற்கிறோம் - என்றார்.

# ‘மாற்றுமோதிரம்’ மணமகள் வடிவலங்காரம் கண்காட்சி

## - இன்று கொழும்பில் -



(அஷ்ரப் ஏ சமத்)

‘மாற்றுமோதிரம்’ என்ற மணமகள் வடிவலங்கார கண்காட்சி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மிகிலிலங்கா மதுர அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ பிரதம அதிதியாகவும் மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அனுசரணையாளர்களும் கலந்துகொள்ளவுள்ளதாக அருந்ததி தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர் கே. மேகலா தெரிவித்தார்.

வெள்ளவத்தையிலுள்ள கிரீன்ஸ் பலஸ் ஹோட்டலில் மேற்படி நிகழ்வு தொடர்பிலல் ஊடகவியலாளர் மாநாட்டின்போதே மேற்கண்டவாறு கே. மேகலா தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது,

கடந்த 2 வருட காலமாக கொவிட்-19 காரணமாக மணமகள் வடிவலங்கார சுயதொழில் கலைஞர்கள் அழகியற்றுறை கண்காட்சி சார்ந்த கலைஞர்கள் வீடுகளிலேயே முடங்கிக் கிடந்தனர். 2017, 2018 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இவ்வாறான கண்காட்சிகளை எமது நிறுவனம் வருடா வருடம் நடத்தி அதில் திறமையானவர்களுக்கு சிறந்த மணமகள் கலைஞர்களுக்கும் சான்றிதழ் விருதுகள் வழங்கி வந்தது.

கடந்த வருட கால கொவிட்-19 தொற்று காரணமாக இத்துறையைச் சேர்ந்தவர்கள் தமது திறமைகளை வெளிக்கொணர முடியாமல் போய்விட்டது. ஆகவே, இம்முறை 50 பேர்கொண்ட மணமகள் உடை அலங்கார நிகழ்வு ‘மாற்றுமோதிரம்’ என்ற தலைப்பில் கண்காட்சி இன்று நடைபெறுகின்றது.

கொழும்பிலுள்ள அலங்கார வடிவமைப் பாளர்கள், கலைஞர்கள் மற்றும் இத்துறைக் கான உடைகள் அலங்கார, நகை அலங்கார வியாபார ஸ்தாபனங்களின் அனுசரணையாளர்களையும் இணைத்து இந் நிகழ்வினை நடத்துகின்றோம். இதனால் மீண்டும் இத்துறைசார்ந்தவர்களது சுயதொழில் முயற்சியில் ஊக்கமளித்து அவர்களை இத்துறையில் புத்துணர்ச்சியளிப்பதே எமது நிறுவனத்தின் நோக்கமாகும். கொவிட்-19 சுகாதார வழிமுறை காரணமாக 200 பார்வையாளர்களுக்கு மட்டுமே இலவசமாக அழைப்பிதழ்கள் அனுப்பியுள்ளோம் - என அ மேகலா தெரிவித்தார்.

ஊடக மாநாட்டில் தினகரன் பிரதம ஆசிரியர் ரீ.செந்தில்வேலவரும், பிரமுகர்கள் வரவேற்பு பிரதிநிதி ரீ.மனோகரனும் பிரசன்னமாகியிருந்தனர்.

## தத்துவம் தங்கராசு



*சமத்துவம், சமவுரிமை, எல்லோருக்கும் ஒரே நீதி வேண்டும் என்று கடந்த தேர்தலில் மக்கள் கேட்டதும்தான் கேட்டார்கள்..*

*ஏழை, பணக்காரன், அந்த சாதிக்காரன், இந்த சாதிக்காரன், அந்த இனம், இந்த மதம் எல்லோரையும் ஒண்ணா மண்ணா, பத்தோட பதினொன்றா பால்மா, சிலிண்டர், மண்ணெண்ணெய் வாங்க வரிசையில நிற்க வச்சிருக்குது அரசாங்கம்..*

*மக்களின் கோரிக்கையை இதைவிட எப்படிங்கோ நிறைவேத்துறது?*

# புதுமாத்தளன் கடற்கரையில் வெளியே தென்படும் உழவு இயந்திரப் பாகங்கள்



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுமாத்தளன் கடற்கரைப் பகுதியில் மண்ணுள் புதையுண்ட உழவு இயந்திரத்தின் பாகங்கள் சில மீனவர்களால் இனங்காணப்பட்டுள்ளன.

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் கடல் சீற்றம் அதிகமாக காணப்படும் நிலையில், கடற்கரையில் அலையின் தாக்கம் அதிகமாக காணப்படுகின்றது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் (08) காலை புதுமாத்தளன் கடற்கரைப் பகுதியில் கடந்த காலத்தில் புதைக்கப்பட்ட அல்லது கடலில் அள்ளுண்டுபோன உழவு இயந்திரத்தின் பாகங்கள் சில கரையில் அடையாளம் காணப் பட்டுள்ளன.

உழவு இயந்திரத்தின் பெரிய ரயர்கள் உள்ளிட்ட பாகங்கள் கடற்கரையில் தென்பட்டுள்ளதுடன், இரும்புத் துண்டுகளும் இனங்காணப்பட்டுள்ளன.

2009ஆம் ஆண்டு போரின் இறுதி நாட்களில் மக்களால் கைவிடப்பட்ட உழவு இயந்திரத்தின் பாகங்களாக இருக்கலாம் என மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப் பட்டுள்ளதைத் தொடர்ந்து முல்லைத்தீவு பொலிஸார் குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டுள்ளதுடன், உழவு இயந்திரத்தின் பாகங்களை நீதிமன்ற உத்தரவிற்கமைய தோண்டிப் பார்ப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.



மாத்தளை, உக்குவெலவத்தை, நாகொல்ல பிரதேசத்தில் தீப்பெட்டி பொதிசெய்யும் வீடொன்றில் நேற்றுக்காலை ஏற்பட்ட தீப்பரவலால் வீடு பாரிய சேதத்திற்கு உள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். தீயினால் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்பதுடன் மாத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தொழிலாளர்களை மேம்படுத்த பல்வேறு புதிய வேலைத்திட்டங்கள்

## பிரஜா சக்தி செயல்திட்டத்தின் வருடாந்த அபிவிருத்தி கலந்துரையாடலில் ஆய்வு



(க.கிஷாந்தன்)

பிரஜா சக்தி அபிவிருத்தி செயல்திட்டத்தின் 2022ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி செயல்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் பூரி பிரஜாசக்தி நிலையத்தில் நடைபெற்றது.

அமைச்சர் ஜீவன் தொண்டமானின் எண்ணக்கருவுக்கமைய தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சின் ஊடாகவும் ஏனைய திணைக்களங்களின் ஊடாகவும் முன்னெடுக்கப்படவுள்ள செயல்பாடுகள் தொடர்பாக இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரஜாசக்தி செயல்திட்டத்தின் பணிப்பாளர் நாயகம் பாரத் அருள்சாமி, சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் அபிவிருத்திக்கான பணிப்பாளர் தியாகு பதுளை மற்றும் மொனராகலை மாவட்டத்தின் பிரஜா சக்தி அபிவிருத்தி செயல்திட்டத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் வசதிகள் அளிக்கும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டிருந்தார்கள்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த பாரத் அருள்சாமி,

"நாம் இவ்வாண்டு தொழில் முனைவோருக்கான வாய்ப்புகளையும் சுய தொழிலாளர்களுக்கான சந்தை வாய்ப்பு மற்றும் மூலோபாயங்கள், இளைஞர், யுவதிகளுக்கான தலைமைத்துவ வாய்ப்புகள் மற்றும் எமது சமூகத்திடையே தற்சார்பு பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் நோக்கில் பல வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுக்கவுள்ளோம். எமது பதுளை பிராந்திய அதிகாரிகளின் ஊடாக ஏறக்குறைய 2 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கடந்த ஆண்டு பயனடைந்துள்ளனர்.

இதனை மேலும் அபிவிருத்திசெய்யவும் பல தொழில்நுட்பம் சார்ந்த விடயங்களை எம் மக்களுக்கு கொண்டுசேர்க்கவும் எமது செயல்பாடுகள் அமையும். அந்தவகையில் பதுளை மாவட்டத்திற்கு தொண்டமான் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றின் கிளை கல்லூரி ஒன்றையும் நாம் இவ்வாண்டு உருவாக்கவுள்ளோம். அத்தோடு சிறுகைத்தொழில் வலயங்களையும் ஏனைய அரச திணைக்களங்களின் ஊடாக பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகளையும் நாம் பெற்றுக்கொடுப்போம்.

பதுளை மாவட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமானின் மூலம் பல அபிவிருத்தி செயல்திட்டங்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளன. அதற்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் எமது செயல்பாடுகளும் இவ்வாண்டு அமையும்" - என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஏ-9 வீதியில் பயணித்த சொகுசு காரில் ஹெரோயின் போதைப் பொருள் மீட்பு

## நால்வர் கைது



(வவுனியா நிருபர்)

ஏ9 வீதியில் பயணித்த சொகுசு கார் ஒன்றினை சோதனையிட்டபோது அதில் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ள நிலையில் அதில் பயணித்த இரு பெண்கள் உட்பட 4 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக ஈரற்பெரியகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து ஏ-9 வீதி ஊடாக வவுனியா நோக்கிச் சென்ற சொகுசு காரை ஈரப்பெரியகுளம் பகுதியில் வைத்து பொலிஸார் திடீர் சோதனை மேற்கொண்ட போது குறித்த காரில் 63.84 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கண்டுபிடிக்கப் பட்டது.

இதனையடுத்து குறித்த ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தமை மற்றும் அதனை கொண்டு சென்றமை தொடர்பில் அதில் பயணித்த இரு பெண்கள் உட்பட 4 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் மதவுவைத்தகுளம் மற்றும் சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்களுடன் 4 மற்றும் 8 மாதக் குழந்தைகளும் காரில் பயணித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளின்போது குறித்த 4 பேரையும் நீதிமன்றில் முற்படுத்த ஈரற்பெரியகுளம் பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

# நாட்டில் பொருளாதார வளர்ச்சியில் ஓய்வூதியர்களுக்கும் பங்குண்டு

(கண்டி நிருபர்)

தற்போது ஓய்வூதியம் பெறுவோர் ஒரு காலத்தில் நாட்டின் பொருளாதார மற்றும் தேசிய வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்புச் செய்தவர்களாவர். எனவே, ஒருபோதும் ஓய்வூதியம் பெறுவோரை அரசு குறைத்து மதிப்பிடு செய்யப்போவதில்லை - என உள்ளூராட்சி மாகாண சபைகள் மற்றும் அரச சேவைகள் அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

மாத்தளை மாவட்டத்தில் பல்லேபொல ஓய்வூதியர் சங்க அலுவலகத்தை திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் சுமார் ஐந்து இலட்சம் பேர் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். இவர்கள் தமது சேவைக்காலத்தில் நாட்டின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தவர்கள். எனவே, அவர்களை மறக்க முடியாது. அவ்வப்போது ஏதோவோர் அடிப்படையில் அரவர்களுக்கு அரசு சலுகைகளை வழங்கிவருகிறது.

ஓய்வூதியம் பெறுபவர்களை மதிப்பதன் மூலம் முழு அரச சேவையிலும் தற்போது பணி புரிபவர்களுக்கு அது ஓர் உந்துசக்தியாகி வருகிறது. தமக்கும் இவ்வாறு சிறப்புகள் கிடைக்க வேண்டும் என எதிர்பார்த்து அவர்கள் தமது வேலையை சிறப்பாக மேற்கொள்ள அது வழிசமைக்கும் - என்றார்.

# நாளுக்கு நாள் அதிகரிக்கும் அரிசி உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலை!

## வருவாயின்றி அவதிப்படுவதாக ஹட்டன், அதனை அண்மித்த பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் விசனம்



(மனூர சுதத் செல்லஹேவா)

ஹட்டன் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் தற்போதுவரையில் அரிசியின் விலை சடுதியாக அதிகரித்துள்ளமையினால் இந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் பெரும் அசௌகரியத்தை எதிரகொண்டுள்ளனர்.

தற்போதைய நிலைமையில், ஹட்டன் மற்றும் அதனை அண்மித்த நகர பகுதிகளில் ஒரு கிலோ வெள்ளை பச்சை அரிசி 150 ரூபாவிலிருந்து 160 ரூபாவுக்கும், ஒரு கிலோ சிவப்பு பச்சை அரிசியின் விலை 160 ரூபாவிலிருந்து 170 ரூபாவுக்கும், ஒரு கிலோ நாட்டரிசி 170 ரூபாவிலிருந்து 180 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

"அரிசி விலை இவ்வாறு சடுதியாக அதிகரித்துள்ளதால் நாங்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டுள்ளோம்" என்று இது தொடர்பில் அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த அநேகமான நுகர்வோர்கள் விசனம் தெரிவித்தனர்.

மேலும், அரிசி உள்ளிட்ட ஏனைய உணவுப் பொருட்களின் விலைகளிலும் தற்போது கடுமையான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் பொருட்களின் விலைகள் நாளாந்தம் அதிகரிக்கப்பட்டாலும் தமது வருமானத்தில் எவ்வித அதிகரிப்பும் இல்லை என்றும் தமது வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வதிலும் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக இந்த பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

அரிசி உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு தொடர்பில் ஹட்டன் உள்ளிட்ட அதனை அண்மித்த பிரதேசங்களைச் சேர்ந்த வியாபாரிகளிடம் விசாரித்தோம். இதுதொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

அரிசி உள்ளிட்ட அநேகமான உணவுப் பொருட்களின் மொத்த விற்பனை விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையினால் இந்த நிலைமை உருவாகியுள்ளதாக சுட்டிக் காட்டினார்கள்.

இவ்வாறு அரிசி உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலைகள் நாளாந்தம் அதிகரிக்கப்படும் நிலையில், நுகர்வோருக்கு பொருட்களின் விலையை குறிப்பிடும்போது அவர்கள் தம்மை திட்டும் சந்தர்ப்பங்களும் காணப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# தேயிலை பறித்துக்கொண்டிருந்த இருவர் மீது குளவிக் கொட்டு

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒட்டரி தோட்டத்தில் தேயிலை பறித்துக்கொண்டிருந்த பெண்கள் இருவர் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இந்த குளவிக் கொட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் (08) காலையில் இடம்பெற்றுள்ளது.


இவ்வாறு குளவிக்கொட்டுக்கு இலக்கான பெண்கள் இருவரும் டிக்கோயா வைத்தியசாலையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இதுதொடர்பில் ஹட்டன் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களுக்கமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஒட்டரி தோட்டத்தைச் சேர்ந்த 54 மற்றும் 55 வயதுடைய இருவரே இவ்வாறு குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.


# பாக்கு பறிக்கச் சென்றவர் சடலமாக மாறிய சோகம்

(கம்பளை நிருபர்)

கம்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுவரல்ல, புவக்கொட்டுவ தோட்டத்தில் நேற்று முன்தினம் இரவு ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.



நேற்று முன்தினம் காலை ஆறு மணியளவில் வீட்டிலிருந்து புறப்பட்ட குறித்த நபர், பாக்கு பறிப்பதற்காக தோட்டத்திற்கு சென்றுள்ளார். இந்நிலையில், இரவு வரை வீடு திரும்பாத காரணத்தினால் அவரின் குடும்பத்தார் அவரை



தேடியபோதே அன்று இரவு பாக்கு மரத்துக்கு கீழே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த நபர் பாக்கு மரத்திலிருந்து கீழே இறங்கும்போது தவறுதலாக விழுந்து உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

58 வயதான இந்த நபர் மூன்று பிள்ளைகளின் தந்தை. இவருடைய சடலம் மரண பரிசோதனைக்காக கம்பளை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கண்டி மாவட்டத்தில் டெங்கு பரவலடையும் ஆபத்து

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தில் கடந்த வருடம் ஆயிரத்து 117 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக மாகாண சுகாதாரத் திணைக்களம் நேற்று (09) தெரிவித்தது.

கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரத்து 117 பேருக்கு இவ்வாறு டெங்கு உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

அதில் கண்டி மாவட்டத்தில் ஜனவரி மாதத்தில் 67 பேரும், பெப்ரவரி மாதத்தில் 48 பேரும், மார்ச் மாதம் 51 பேரும், ஏப்ரல் மாதம் 90 பேரும், மே மாதம் 37 பேரும், ஜூன் மாதம் 40 பேரும், ஜூலை மாதம் 129 பேரும், ஓகஸ்ட் மாதம் 68 பேரும், செப்டெம்பர் மாதம் 32 பேரும், ஒக்டோபர் மாதம் 102 பேரும், நவம்பர் மாதம் 131 பேரும், டிசம்பர் மாதம் 35 பேருமாக பதிவானதாகவும் மொத்தம் 830 பேர் இனங்காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மாத்தளை மாவட்டத்தில் மொத்தமாக 228 பேர் இனங்காணப்பட்டதாக தெரிவிக்கப்படுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் 59 பேருக்கு டெங்கு நோயாளர்களை அடையாளம் காணப்பட்டுள்ளனர். 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது வருட ஆரம்பத்தில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தொகை குறைவாக இருந்தபோதும் வருட இறுதியில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு ஏற்பட்டதாக திணைக்களம் மேலும் குறிப்பிட்டது.





தேசிய சமாதான சபையின் அனுசரணையில் கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு, கண்டி கலைமகள் தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு முகக்கவசம் உட்பட கொவிட் பாதுகாப்பு உபகரணங்கள் கையளிக்கப்பட்டபோது....

(படங்கள் - கண்டி நிருபர்)

# மனைவி தாக்கி கணவன் பலி; குருவிட்டவில் நடந்த துயரம்

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

மனைவியின் கோடரி தாக்குதலுக்குள்ளான கணவன் உயிரிழந்த சம்பவம் இரத்தினபுரி, குருவிட்ட கந்தலந்த பகுதியில் நேற்று (9) இடம்பெற்றுள்ளது.

மனைவியின் தாக்குதலில் படுகாயங்களுக்குள்ளான இவர், இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 36 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் உயிரிழந்தவரின் மனைவி (31 வயது) குருவிட்ட பொலிஸாரி னால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மதுபோதையில் வீட்டுக்கு வரும் தனது கணவர் தினமும் தன்னை அடிப்பதாகவும் இதனால் கோபமடைந்து பிள்ளைகளுடன் அயல் வீடுகளில் மறைந்து வாழ்ந்து வந்ததாகவும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை குருவிட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வளவை கங்கையை கடக்க பாலம் இன்றி 800 குடும்பங்கள் நிர்க்கதி

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பலாங்கொடை, இம்புல்பே பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய வலேபொடை பிரதேசத்தில் வளவை கங்கையை கடந்து செல்வதற்குப் பாலம் ஒன்று இல்லாமையால் 800 குடும்பங்களைச் சேர்ந்த 3000இற்கும் அதிகமான மக்கள் பல இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.

படசாலை மாணவர்கள் உட்பட அரச தனியார் துறைகளில் தொழில் புரிவோர், தேயிலை மற்றும் விவசாயத்துறைகளில் என சகலரும் அசௌகரியத்தை எதிர்கொண்டுள்ளனர்.

மழை காலங்களில் இந்த ஆற்றைக் கடக்க முயற்சித்த பலர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாக கூறும் இம்மக்கள், இந்தப் பிரச்சினைக்கு தீர்வொன்றை பெற்றுத்தருமாறு பல வருடங்களாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை முன்வைத்தபோதிலும் இதுவரையில் எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை என விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, எதிர்காலத்தில் மேலும் பல உயிரிழப்புகள் ஏற்பட வழிவைக்காமல் தங்களின் அன்றாட நடவடிக்கைகளை சிரமமின்றி மேற்கொள்ள பாலமொன்றை நிர்மாணித்துத் தர அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

தற்போது விற்பனையில்




விலை ரூ.40/=

தொடர்புகளுக்கு : 0777 983308 - விநியோகப்பிரிவு

# ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் "WISDOM" திறந்த வகுப்பறை கட்டடத் தொகுதி திறந்துவைப்பு







(க.கிஷாந்தன்)

ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட "WISDOM" திறந்த வகுப்பறை கட்டடத் தொகுதியின் முதற்கட்டம், கல்லூரியின் ஆரம்பப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்டு கல்லூரி நிர்வாகத்துக்கு உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் (08) கையளிக்கப்பட்டது.

இந்த திறந்த வகுப்பறை கையளிக்கும் நிகழ்வு பழைய மாணவர்களின் அனுசரணையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பழைய மாணவர் புலமைப்பரிசில் நிதியம் மற்றும் பழைய மாணவர் சங்க நிர்வாகக் குழுவிற்கு 2020/2021ஆம் ஆண்டு அதன் செயற்பாடுகளை மேற்கொள்ள பல்வேறு வழிகளில் உதவிய நலன்விரும்பிகளை பாராட்டும் நிகழ்வு கல்லூரியின் அதிபரும் பழைய மாணவர் சங்கத்தின் தலைவருமான ஸ்ரீதர் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வின் சிறப்பு அதிதியாக வலயக்கல்விப் பணிமனையின் கல்விப் பணிப்பாளரும் கல்லூரியின் பழைய மாணவியுமான திருமதி லட்சுமி பிரபா செல்வேந்திரன் கலந்து சிறப்பித்தார்.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அர்ஜுன் ஜெயராஜ் கருத்து தெரிவிக்கையில்,

கல்லூரியின் வளர்ச்சியில் பழைய மாணவர் சங்கத்தின் பங்களிப்பு கடந்த இரு வருடங்களில் மாத்திரம் சுமார் 3.5 மில்லியன் ரூபா எனவும் கொரோனா காலப்பகுதியில் திட்டமிட்டபடி அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியாது போனாலும் இக்கட்டான சூழ்நிலைகளிலும் கல்லூரியின் வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கிய அனைத்து பழைய மாணவர்களுக்கும் நல்லுள்ளங்களுக்கும் நன்றியை தெரிவித்தார் .

மேலும்,அ கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த ஹைலண்ட்ஸ் கல்லூரியின் மாணவன் செல்வன் லவனிஷ் மற்றும் அவரின் பெற்றோரை பழைய மாணவர் சங்கம் சார்பாக பாராட்டு தெரிவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

# One Galle Face Mallஇல் புதிய தோற்றத்துடன் புத்தாண்டுக்காக புதுப்பிக்கப்பட்ட Huawei Experience Store








இலங்கையிலுள்ள புத்தாக்க ஸ்மார்ட்போன் வர்த்தக நாமமான Huawei புத்தாண்டுக்காக One Galle Face Mallஇல் புதிதாக புதுப்பிக்கப்பட்ட Huawei அனுபவ மையத்தை (Huawei Experience Store)) திறந்து வைத்துள்ளது. புதுப்பிக்கப்பட்ட Huawei அனுபவ மையமானது, தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் அடிப்படையில் Huaweiஇன் ப்ரீமியம் புத்தாக்க கண்டுபிடிப்புகள் மற்றும் அதன் சலுகைகளைப் புரிந்துகொள்வதற்கான வாய்ப்பை அனைத்து நுகர்வோருக்கும் வழங்குவதுடன், உயர் பயிற்சி பெற்ற ஊழியர்களிடமிருந்து உதவிகளையும் வழங்குகிறது.

One Galle Face Mallஇல் அமைந்துள்ள Huawei அனுபவ மையமானது, கொழும்பு மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகளில் உள்ள ஸ்மார்ட்போன் ஆர்வலர்களுக்கும் இதனைப் பார்வையிடுவதற்கும் அனுபவிப்பதற்கும் அனைத்து அற்புதமான சலுகைகளைப் பெறுவதற்கும் ஏற்ற இடமாகும். Huawei அனுபவ மையத்தில் நுகர்வோருக்கு பல்வேறு சலுகைகள் மற்றும் பலதரப்பட்ட தொழில்நுட்பத் தயாரிப்புகள் கிடைக்கின்றன. ஸ்மார்ட்போன்கள் மட்டுமின்றி, அவை கொண்டுள்ள அம்சங்கள் காரணமான உயர் கேள்வி மற்றும் பாவனையாளர் கவர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையிலான தயாரிப்புகளான டெப்கள், மொனிட்டர்கள், மடிக்கணினிகள், ஸ்மார்ட் கைக்கடிகாரங்கள் மற்றும் ஓடியோ தயாரிப்புகள் உள்ளிட்டவையும் இங்கு கிடைக்கின்றன. Huawei அனுபவ மையங்களில் கிடைக்கும் ஒவ்வொரு தயாரிப்பும் இவ்வருடத்தின் ஆரம்பத்திலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டவை என்பதுடன், அவை உள்ளூர் நுகர்வோரின் தொழில்நுட்பத் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றன. உலகம் முழுவதிலுமுள்ள மக்களுக்கு நவீன தொழில்நுட்பங்களை வழங்குவதற்கும் தொழில்நுட்ப முன்னேற்றம் மூலமான சந்தோஷத்தை பகிர்வதனை வெளிப்படுத்துவதில் Huawei தன்னை அர்ப்பணித்துள்ளது. Huawei நுகர்வோர், ஒப்பிட முடியாத விலை, மிக உயர்ந்த தரம், சிறந்த விற்பனைக்குப் பிந்தைய சேவை உள்ளிட்ட அம்சங்களைக் கொண்ட தங்கள் கனவு Huawei ஸ்மார்ட்போன் மற்றும் ஸ்மார்ட் அணிகலன்களை அனுபவித்து மகிழவும் அவற்றை கொள்வனவு செய்யவும் சிறந்த வாய்ப்பை Huawei அனுபவ மையம் வழங்குகிறது.

சமீபத்திய புதுப்பிக்கப்பட்ட Huawei அனுபவ மையம் குறித்து, Huawei சாதனங்களுக்கான நாட்டின் தலைவர் பீட்டர் லியு கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையில் உள்ள எமது விசுவாசமான நுகர்வோருக்கு சிறந்த அனுபவத்தை வழங்குவதில் நாம் எப்போதும் செயலூக்கமான பங்கேற்பாளராக இருந்து வருகிறோம். கொழும்பு நகரின் கவர்ச்சிக்கு மேலும் மெருகூட்டும் வகையில் சமீபத்தில் இணைந்துள்ள One Galle Face Mallஇல் Huawei கொண்டுவரும் அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் ப்ரீமியம் சலுகைகள் குறித்து எமது நுகர்வோர் அறிந்துகொள்ள மிகவும் பொருத்தமான இடமாகும். எமது அனைத்து புத்தாக்கக் கண்டுபிடிப்புகளையும் இலங்கையிலுள்ள நுகர்வோர் மிக ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டுள்ளதால் நாம் கொண்டு வரும் அனைத்து சமீபத்திய புதுப்பிப்புகள் மற்றும் புத்தாக்கங்களை அவர்களுக்கு வழங்க நாம் தொடர்ச்சியாக முயற்சி செய்து வருகிறோம்" என்றார்.

லியு மேலும் கருத்துத் தெரிவிக்கையில், "பல ஆண்டுகளாக தனது இருப்பை இலங்கையில் வெற்றிகரமாக மேலும் உறுதிப்படுத்த Huaweiஇனால் முடிந்துள்ளது. Huawei நிறுவனம் இலங்கையை ஒரு மூலோபாயச் சந்தையாக அங்கீகரித்துள்ளதுடன், நாட்டிற்குள் ஒரு விரிவான சந்தை தடத்தை நிறுவுவது தொடர்பில் முன்னோக்கிச் செல்ல நாம் எதிர்பார்க்கிறோம்" என்றார்.

நுகர்வோர் இந்த மையத்திற்குள் நுழைந்து காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள தயாரிப்புகளை அனுபவிப்பதற்கான வாய்ப்பைப் பெறுவதோடு மட்டுமல்லாமல், அவர்கள் தங்கள் சாதனங்களின் கொள்வனவுக்கான முன்பதிவுகளையும் மேற்கொள்ளலாம் என்பதுடன், எந்தவொரு Huawei சாதனங்களையும் கொள்வனவு செய்யலாம். அவர்கள் Huawei அனுபவ மையத்திற்குச் செல்லும்போது, அர்ப்பணிப்பு மற்றும் உயர் பயிற்சி பெற்ற விற்பனை உதவியாளர்களின் உதவியுடன் Huawei ஸ்மார்ட்போன்கள் மற்றும் சாதனங்கள் பற்றிய தகவல்களைப் பெறவும் ஆலோசனை மற்றும் உதவிகளைப் பெறவும் முடியும்.

தகவல் மற்றும் தொலைத்தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் (ICT) உட்கட்டமைப்பு மற்றும் ஸ்மார்ட் சாதனங்களின் முன்னணி உலகளாவிய வழங்குநரான Huawei, நான்கு முக்கிய களங்களில் ஒருங்கிணைந்த தீர்வுகளுடன் புத்தாக்கம் கொண்ட ஸ்மார்ட்போன் தரக்குறியீடாக அறியப்படுவது மட்டுமல்லாமல், பல்வேறு தொழில்நுட்ப தீர்வுகளை வழங்குவதில் உறுதியாக உள்ளது. அந்தவகையில் One Galle Face Mall இல் அமைந்துள்ள புதுப்பிக்கப்பட்ட Huawei அனுபவ மையத்தில், வாடிக்கையாளர்கள் Huawei இன் உண்மையான நுகர்வோர் அனுபவத்தைப் பெறும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

# கொமர்ஷல் வங்கியின் தன்னியக்க பண விநியோக இயந்திர வலையமைப்பு டிசம்பர் மாதத்தில் 91.8 பில்லியன் ரூபாவையும் 2021ஆம் ஆண்டில் 848.4 பில்லியன் ரூபாவையும் விநியோகித்துள்ளது



கொமர்ஷல் வங்கியின் தன்னியக்க பண விநியோக இயந்திர வலையமைப்பு நாடு முழுவதும் ATM இயந்திரங்களையும், பண மீள்சுழற்சி இயந்திரங்களையும் (CRMs) உள்ளடக்கியது. இந்த வலையமைப்பின் ஊடாக இலங்கையர்களின் முக்கிய பண்டிகை காலத்தையும் 2022 புத்தாண்டு வரவேற்பையும் உள்ளடக்கிய டிசம்பர் மாதத்தில் 91.872 பில்லியன் ரூபா விநியோகிக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் மாதம் 31ஆம் திகதி இந்த வலையமைப்பு ஒரே நாளில் 4.234 பில்லியன்களை விநியோகித்துள்ளது. இது 2021ஆம் ஆண்டு ஏப்ரல் 9 மற்றும் 10ஆம் திகதிகளில் ஒரே நாளில் விநியோகிக்கப்பட்ட தொகையை விட அதிகமாகும் என இலங்கையின் மிக முக்கிய தனியார் வங்கி அறிவித்துள்ளது. டிசம்பர் 16இல் ஒரு நாளில் இந்த வலையமைப்பு 3 பில்லியனுக்கும் அதிகமான தொகையை விநியோகித்துள்ளது. ஆகக் கூடுதலான தொகைகள் விநியோகிக்கப்பட்ட நாட்களாக டிசம்பர் 10, 24 மற்றும் 31ஆம் திகதிகள் பதிவாகியுள்ளன.

இலங்கை மக்களின் அன்றாட வாழ்வில் இந்த வலையமைப்பு செலுத்தி வரும் பங்களிப்பை இது துல்லியமாகத் தெளிவுபடுத்துகின்றது. அத்தோடு இந்த வலையமைப்பில் மக்கள் தங்கி இருப்பது அதிகரித்து வருகின்றமையையும் இது புலப்படுத்துகின்றது. கொமர்ஷல் வங்கியின் ATM மற்றும் பண மீள்சுழற்சி இயந்திரங்கள் (CRMs) என்பன 2021 முடிவில் 848.427 பில்லியன்களை விநியோகித்துள்ளன. இது சராசரியாக மாதாந்தம் 70.7 மில்லியன்கள் எனவும் வங்கி அறிவித்துள்ளது.

625 ATM இயந்திரங்களையும் 275 CRM இயந்திரங்களையும் உள்ளடக்கிய கொமர்ஷல் வங்கியின் தன்னியக்க பண விநியோக இயந்திர வலையமைப்பு 2021 டிசம்பரில் 5.3 மில்லியன் கொடுக்கல் வாங்கல்களைக் கையாண்டுள்ளது. இது சராசரியாக தினசரி 170,933 கொடுக்கல் வாங்கல்களாகும். அல்லது ஒரு மணித்தியாலத்துக்கு 7122 கொடுக்கல் வாங்கல்களாகும். டிசம்பர் 24இல் 241,427 செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. இதுவே இந்த ஆண்டில் ஒரே தினத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆகக்கூடிய அளவான கொடுக்கல் வாங்கல்களாகும். இலங்கையின் முதல் 100வீத கார்பன் பாவனையினை குறைத்த வங்கி, உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளில் தொடர்ந்தும் 11 வருடங்களாக பட்டியலிடப்பட்ட ஒரேயொரு இலங்கை வங்கி, கொமர்ஷல் வங்கியாகும். கொமர்ஷல் வங்கி வலையமைப்பினைக் கொண்ட 268 கிளைகள் மற்றும் 931 தானியங்கி இயந்திரங்களை கொண்டு இயங்குகின்றது. கொமர்ஷல் வங்கி இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகத்துறைக்கு பாரிய கடனுதவி வழங்குவதோடு நாட்டின் வங்கித்துறையில் டிஜிட்டல் புத்தாக்கங்களில் முன்னணியில் உள்ளது. வங்கியின் வெளிநாட்டு செயற்பாடுகள் பங்களாதேஷை உள்ளடக்கியது. அங்கு வங்கி 19 கிளைகளை இயக்குகின்றது. மியன்மார் நய் பியி தாவில் நுண்நிதி நிறுவனத்தினை கொண்டுள்ளது. மற்றும் மாலைதீவில் வங்கி பெரும்பான்மையான பங்குகளைக் கொண்ட முழு அளவிலான வங்கியாக காணப்படுகின்றது.




# Nestlé Health Science அறிமுகம் செய்யும் Nestlé BOOST ORIGINAL




Nestlé Health Science தனது சமீபத்திய தயாரிப்பான Nestlé BOOST ORIGINAL இனை அறிமுகம் செய்துள்ளது. இது வயது முதிர்ந்தவர்கள் ஆரோக்கியமான மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை முன்னெடுப்பதற்கான சமநிலை உணவுத் தேவையின் ஒரு அங்கமாக அமையத்தக்க ஊட்டச்சத்து நிறைந்த உணவுப் பானமாகும். Nestlé BOOST ORIGINAL தயாரிப்பானது, தசை வலிமையைப் பேணிப் பராமரிப்பதற்கு உதவும் புரதச்சத்தையும் நோய் எதிர்ப்பு சக்திக்கு உதவும் விற்றமின் சி, டி, துத்தநாகம் மற்றும் இரும்புச்சத்து உள்ளிட்ட 16 விற்றமின்கள் மற்றும் கனியுப்புகளைக் கொண்டுள்ளது. அத்துடன், குறைந்த அளவிலான கொழுப்பு அடங்கிய தயாரிப்பு என்பதுடன், குறைந்த அளவிலான கிளைசெமிக் (glycemic) சுட்டெண்ணைக் கொண்டுள்ளது.

ஒரு வல்லுனர் அணியைக் கொண்டுள்ள குழுவான Nestlé Health Science மக்களின் வயது முதிர்ச்சியில் அர்ப்பணிப்புடன் உதவுகின்றது. ஆரோக்கியமான வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்கத்துடன், Nestlé Health Science நிறுவனம் தினந்தோறும் பலவிதமான உயர் தரத்திலான ஊட்டச்சத்து தயாரிப்புகளை வழங்கி வருவதுடன், அவை புத்தாக்கத்துடனான அறிவியலின் அடிப்படையில், விரிவான ஆராய்ச்சியின் உதவியுடன் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

"இளமை முதல் முதுமை வரை தலைமுறை தலைமுறையாக நுகர்வோருக்கு சேவைகளை வழங்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்ற ஒரு நிறுவனமாக, மக்களின் வாழ்க்கைத் தரத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய புத்தாக்கமான ஊட்டச்சத்து தீர்வுகளை நாம் தொடர்ந்து அறிமுகப்படுத்தி வருகிறோம். முதியவர்களின் பல்வேறு ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் விசேடமாக வடிவமைக்கப்பட்டு, அறிமுகப்படுத்தப்பட்டுள்ள Nestlé BOOST இலங்கையில் அதிகரித்துச் செல்கின்ற முதிய தலைமுறையினருக்கு உதவும் என நம்புகிறோம்," என நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஜேசன் அவன்சென்யா குறிப்பிட்டார்.

A. Baur & Co. Pvt. Ltd நிறுவனத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்ற Nestlé BOOST ORIGINAL தற்போது நாடு முழுவதும் உள்ள சூப்பர் மார்க்கட்டுக்கள், கடைகள் மற்றும் பார்மசிகளில் 480 கிராம் அளவு கொண்ட பொதிகளில் கிடைக்கப்பெறுகிறது. "Nestlé Health Science நிறுவனத்தின் நம்பகமான மற்றும் நீண்டகால சந்தைப்படுத்தல் மற்றும் விநியோக பங்காளராக, எங்கள் தயாரிப்பு வரிசையில் Nestlé BOOST ORIGINAL தயாரிப்பை சேர்ப்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இந்த தயாரிப்பு வகையால் ஏற்கனவே நிரூபிக்கப்பட்ட சாதனையுடனான நற்சான்றுடன், Nestlé BOOST ORIGINAL வெகு விரைவில் அனைத்து இல்லங்களிலும் உச்சரிக்கப்படுகின்ற நாமமாக மாறும் என்று நாங்கள் நம்புகிறோம். எங்கள் விற்பனை மற்றும் விநியோக வலையமைப்பில் பெரும் முதலீடுகளை மேற்கொண்டுள்ள நிலையில், இன்று நாம் நாட்டில் தொழில்நுட்ப ரீதியாக மிகவும் மேம்பட்ட மற்றும் சிறந்த திறன் வாய்ந்த விற்பனை ஆளணியைக் கொண்டுள்ள நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருவதுடன், Nestlé BOOST ORIGINAL தயாரிப்பை மிகவும் திறமையான முறையில் சந்தையில் நிலைபெறச் செய்யத் தயாராக உள்ளோம்" என்று A. Baur & Co. Pvt. Ltd நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், தலைமை நிர்வாக அதிகாரியுமான ரோல்ஃப் பிளேசர் குறிப்பிட்டார்.

# யாழில் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவினாலும் விநியோகம் தடைப்படாது

## யாழ். வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரன்

யாழ்ப்பாண குடாநாட்டில் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவினாலும் மக்களுக்கான பொருட்களின் விநியோகம் தொடர்ந்து இடம்பெறும் என யாழ். வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரன் தெரிவித்தார்.

யாழ். வணிகர் கழகத்தில் நேற்று முன்தினம் (8) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதத்திற்குப் பின்னர் நாட்டில் படிப்படியாக சில பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, அந்தந்த நிறுவனங்கள் விநியோகத்தை மட்டுப்படுத்தியதன் காரணமாக பால் மா, எரிவாயு சிலிண்டர், கோதுமை மா என்பவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

எரிவாயு சிலிண்டர்களின் வெடிப்புகள் காரணமாக மீளப்பெறப்பட்டு அவை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. 60 – 70 வீதமான கோதுமை மா விநியோகம் தற்போது சீராகி வருகிறது. பாண் மற்றும் பணிஸுக்கு மாத்திரம் போதுமான அளவிற்கு கோதுமை மா வெதுப்பகங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. பால் மா விநியோகமும் இந்த மாத இறுதியில்



சீரடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நெல்லின் விலை அதிகரித்ததால் உள்ளூர் நாட்டரிசி 160 ரூபா வரை விற்கப்படுகிறது. இறக்குமதி செய்யப்படும் அரிசி 130 – 140 ரூபா வரையும் கீரிசம்பா 190 – 200 ரூபா வரையும் விற்கப்படுகின்றது.

உள்ளூர் அரிசிகளின் விலை தைப்பூசத்திற்கு பின்னர் சற்று குறைவடையும் சாத்தியக்கூறுகள் உள்ளன. 15 – 20 ரூபா வரை இந்த விலை இறக்கம் ஏற்படலாம். ஆனால், நெல் உற்பத்தியில் உரத் தட்டுப்பாடு, மழையின்மை போன்றவற்றால் இந்த பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

நாடு மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கின்ற நேரத்தில் உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்கவேண்டிய தேவை காணப்படுகின்றது. உளுந்து, பயறு, எள்ளு மற்றும் நிலக்கடலை போன்ற பயிர்ச்செய்கைகளில் விவசாயிகள் ஈடுபடவேண்டும். அரசாங்கம் உளுந்தை தடைசெய்துள்ள நிலையில் எல்லோரும் உளுந்தை அதிகளவில் உற்பத்தி செய்ததால் விலை வெகுவாக குறைந்துள்ளது.

வடமாகாணத்தில் குறிப்பாக, யாழ்ப்பாண குடாநாட்டில் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவினாலும் மக்களுக்கான பொருட்களின் விநியோகம் தொடர்ந்து இடம்பெறும் - என்றார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# வவுனியாவில் ஊடக அமைய அலுவலகம் திறந்துவைப்பு





வவுனியா ஊடக அமையத்தின் அலுவலகம் கடந்த வெள்ளிக்கிழமை (07) மாலை வவுனியா வைரவப்புளியங்குளத்தில் ஊடக அமையத்தின் தலைவர் எம்.ஜி.ரெட்னகாந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.ஏ.சரத்சந்திரவும் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன், வவுனியா நகரசபை செயலாளர் ஆர்.தயாபரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ்.சந்திரகுமார், வவுனியா முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத் தலைவர் சி.ரவீந்திரன், வவுனியா பஸ் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கே.இராஜேஸ்வரன், வர்த்தகர் சங்கச் செயலாளர் ஆ.அம்பிகைபாகன், காஞ்சனா நகையக உரிமையாளர் க.செல்வராசா, மாவட்ட செயலக தகவல் உத்தியோகத்தர் உபுல் பாலசூரிய ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வவுனியா ஊடக அமையத்திற்கான நிதி உதவி மற்றும் அலுவலக தளபாடங்கள் உட்பட பல்வேறு உதவிகளை அப்ரியல் அமைப்பின் பணிப்பாளர் ரவீந்திர டீ சில்வா வழங்கினார்.

# புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியினரால் வவுனியாவில் ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு





புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியினரால் வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் காலை குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கருத்து தெரிவித்தபோது,

மஹிந்த - கோட்டாபய அரசு ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் கடந்துள்ள நிலையில், உழைக்கும் மக்கள் நடுவீதிக்கு தள்ளப்பட்டுள்ளதுடன், அவர்களது வயிற்றிலே அடிக்கும் அவலநிலையை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் நாட்டில் பட்டினிச்சாவு ஏற்படும் அபாயநிலைமை ஏற்படுவதை எவராலும் தடுக்க முடியாது.

நாட்டை கொள்ளையடித்தவன், நாட்டுப்பணத்தை திருடியவன் எல்லாம் அதிகாரத்தில் இருந்து சுகபோக வாழ்க்கை வாழ்கின்றனர். ஆனால், சாதாரண மக்கள் இவர்களுக்கு வாக்களித்த குற்றத்தை தவிர வேறொன்றுமே செய்யவில்லை.

கடந்த தேர்தல் காலங்களில் கோட்டாவும் மஹிந்தவும் கொடுத்த வாக்குறுதிகளால் மக்களின் பசியைத் தீர்க்க முடிந்ததா? எனவே, இராணுவமயமாகிவரும் இந்த கொடுங்கோல் ஆட்சியினை அழித்தொழிக்க நாட்டுமக்கள் ஒன்றுதிரண்டு தமது எதிர்ப்பினை வெளிக்காட்ட முன்வரவேண்டும் - என்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் "உழைக்கும் மக்களை பட்டினிபோடாதே, கட்டுப்பாட்டுவிலையை கொண்டுவா, ஊழல் பணத்தை வெளியே கொண்டுவா, உழைப்போரை வதைக்காதே, தேர்தல் வாக்குறுதி என்னாச்சு" போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தியிருந்ததுடன் கோஷங்களையும் எழுப்பியிருந்தனர். ஆர்ப்பாட்டத்தில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் செயலாளர் சி.கா.செந்தில்வேல், கட்சியின் முக்கியஸ்தர்களான செல்வம் கதிர்காமநாதன், நி.பிரதீபன், வவுனியா தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் ந.கருணாநிதி, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளையின் பா.நேசராஜா, சமூகநீதிக்கான வெகுஜன அமைப்பினர் உட்பட பொது அமைப்புகள் ஆதரவினை வழங்கியதுடன், பெருமளவான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

# மீனவர் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் இந்திய துணைத்தூதரக பதில் துணைத்தூதருடன் சந்திப்பு

(யாழ். நிருபர்)

அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத்தூதரக பதில் துணைத்தூதுவர் ராம் மகேஷை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்திய இழுவைப்படகுகள் தொடர்பிலான பிரச்சினையைப் பற்றி மகஜரொன்றை கையளிப்பதற்காக வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் யாழ்ப்பாணம் மருதடி வீதியிலுள்ள இந்திய துணைத்தூதரகத்துக்கு வருகைதந்த அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் ரத்ன கமகே, தலைவர் நிஹால் கலப்பத்தி ஆகியோர் இந்திய துணைத்தூதரக பதில் துணைத்தூதுவர் ராம் மகேஷை சந்தித்து பேசினர்.

இதன்போது மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரும் கலந்துகொண்டிருந்தார்.

அம் மகஜரில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது,

சுமார் ஒரு தசாப்தகாலமாக இலங்கையின்



வடபகுதி கடற்பரப்பில் இந்திய மீனவர் ஆக்கிரமிப்பு காரணமாக இலங்கையின் வடபகுதி மீன்பிடித் தொழில் முற்றாக சரிவடைந்துள்ளது. இந்நிலை காரணமாக வடபகுதி சுமார் ஐம்பதாயிரம் மீனவர்களும், அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்களான சுமார் இரண்டு இலட்சம் பேரும் முகங்கொடுக்கும் நிலைமை மிகவும் கவலைகரமானதாகும்.

இந்திய மீனவர்களின் செயற்பாட்டினால் இந்நாட்டு மீனவர்களுக்கும், படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கும் ஏற்படும் அழிவு நாளுக்குநாள் அதிகரிப்பதோடு அவர்கள் பயன்படுத்தும் சட்டவிரோத 'பொட்டம் ரோலிங்' முறை காரணமாக கடலின் அடிபரப்புச் சூழலுக்கு ஏற்படும் அழிவு பாரியதொன்றாகும். இந்நிலைமை காரணமாக இந்நாட்டு மீன்பிடித்துறைக்கு ஒரு வருடத்திற்கு சுமார் 1000 மில்லியன் ரூபாவாகும். அத்துடன், கடற்சூழலுக்கு ஏற்படும் அழிவை எடைபோட முடியாது. இவ்விடயம் குறித்து எமது நாட்டு உரிய பொறுப்பு வாய்ந்தோருக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் அறியத் தந்தாலும், கண்டனங்கள், ஆர்ப்பாட்டங்கள், பேச்சுவார்த்தைகள் நடத்தியிருந்தாலும் ஆக்கபூர்வமான எவ்வித தீர்வையும் பெற்றுக்கொள்ள முடியாமற் சென்றுள்ளது.

இந்நாட்டு வடபகுதி மீன்பிடித் தொழிற்றுறைக்கும், மீனவர்களுக்கும் ஏற்படுத்தும் இந்த அழிவு தொடர்பாக இந்திய அரசுக்கு எமது கவலையை தெரிவிப்பதோடு இலங்கை மற்றும் இந்திய அரசுகளின் பொறுப்புவாய்ந்தோர் தலையிட்டு துரிதமாக நிரந்தரமான தீர்வை பெற்றுக்கொடுக்கும்படி வலியுறுத்துகிறோம் என்றுள்ளது.

# தென்மராட்சியில் டெங்கு தீவிரம்

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை எல்லைக்குட்பட்ட தென்மராட்சிப் பிரதேசத்தில் கொரோனா நிலைமை ஓரளவிற்கு கட்டுப்பாட்டில் உள்ளபோதிலும் டெங்கு நோய்ப் பரவல் தீவிரமடைந்திருப்பதாக சாவகச்சேரி சுகாதாரப் பகுதி சுட்டிக்காட்டியுள்ளது.

அந்தவகையில் தென்மராட்சியில் கடந்த டிசம்பர் மாதம் 12 டெங்கு நோயாளர்களும் ஜனவரி மாத முதல் வாரத்தில் 3 டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனினும், கடந்த காலத்தில் தென்மராட்சியை ஆட்டிப்படைத்த கொரோனா தொற்று ஜனவரி மாத முதல் வாரத்தில் 8ஆக குறைவடைந்திருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை பெண் சிற்றூழியர் மீது தாக்குதல்

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிற்றூழியராகக் கடமையாற்றும் பெண் ஊழியர் ஒருவர் மீது ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியில் காட்டுப்பகுதியில் வைத்து தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு ஊழியர் மீது ஏதோ ஒரு திரவத்தை வீசி தாக்குதல் மேற்கொண்டபோது கண்கள் பாதிக்கப்பட்ட நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்

இந்தச் சம்பவம் தூர பிரதேசங்களிலிருந்து வனப்பகுதிகளைக் கடந்து பணிக்கு வரும் ஊழியர்களை கடும் அச்சத்தில் தள்ளியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் பணியாற்றி வருகின்ற பெண் சிற்றூழியர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு தன்னுடைய கடமைகளை நிறைவுசெய்து நேற்று அதிகாலை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையிலிருந்து கொக்காவில் வீதி துணுக்காய் எனும் முகவரியில் அமைந்துள்ள தன்னுடைய வீட்டிற்கு மோட்டார்சைக்கிளில் ஒட்டுசுட்டான் நகரத்தை தாண்டி மாங்குளம் நோக்கி சென்றுகொண்டிருந்தபோது வனப்பிரதேசத்தில் வீதியில் நின்ற இருவர் குறித்த ஊழியர் மீது ஏதோ ஒரு திரவத்தை வீசியுள்ளனர். இதனால் கண்கள் பாதிக்கப்பட்ட குறித்த ஊழியர் மோட்டார்சைக்கிளை ஓட்டிச்செல்ல முடியாத நிலையில் அருகில் இருந்த ஒரு பொதுக் கிணற்றில் சென்று முகத்தை கழுவிய போதும் கண்ணில் பார்வை சீராகாத நிலையில் குறித்த பகுதியில் இருந்த ஒரு வீட்டில் தஞ்சமடைந்து அங்கிருந்து அவசர தொலைபேசி ஊடாக அம்பியூலன்ஸை அழைத்து மாவட்ட வைத்தியசாலைக்கு வருகை தந்திருக்கிறார்.

இந்நிலையில், அவருடைய கண்களில் பார்வை பிரச்சினையாகியுள்ள நிலையில் என்ன திரவம் வீசப்பட்டுள்ளது என்பதை கண்டறிவது தொடர்பில் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த தாக்குதல் முயற்சி திருடர்களால் மேற்கொள்ளப்பட்டதா அல்லது கொலை முயற்சியா அல்லது என்ன நோக்கத்துக்காக மேற்கொள்ளப்பட்டது என்பது தொடர்பில் தெரியாத நிலையில், ஊழியர்கள் மிகவும் அவதிக்குள்ளாகியுள்ளதோடு குறித்த பாதிக்கப்பட்ட பெண் தான் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வேலைக்கு வருவதாகவும் இவ்வாறான சம்பவம் இன்னும் தன்னை அச்சத்துக்குள்ளாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் தான் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் தன்னை தன்னுடைய கிராமத்திற்கு அருகிலுள்ள ஒரு வைத்தியசாலையில் கடமைக்கு மாற்றித் தரவும் தன் மீதான தாக்குதல் அல்லது கொலை முயற்சியை அல்லது அவ்வாறான செயற்பாட்டிற்கு ஒரு நீதியான விசாரணையை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்து ஊழியர் மாவட்ட வைத்தியசாலையிலுள்ள பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்திருக்கும் நிலையில் தற்போது யாழ்ப்பாணம் மாவட்ட வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வாள்வெட்டு

(யாழ். நிருபர்)

கல்வியங்காடு பகுதியில் புடவை வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நல்லூர் சட்டநாதர் ஆலயத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் இந்த வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த 28 வயதுடைய வர்த்தகர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காசு கொடுக்கல் வாங்கல் தொடர்பிலுள்ள முரண்பாடு காரணமாக இந்த வாள்வெட்டுத் தாக்குதல் இடம்பெற்றதென ஆரம்ப விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

# பூதன்வயல் கிணற்றிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு

(முல்லைத்தீவு நிருபர்)

முல்லைத்தீவு - முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பூதன்வயல் பகுதியிலுள்ள கிணறொன்றிலிருந்து பெண்ணொருவரின் சடலமொன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் பூதன்வயல் பகுதியைச் சேர்ந்த யோகராசா ராஜினி (வயது-39) என்பவர் என்பது பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் குறித்த பகுதிக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா மற்றும் சட்டவைத்திய அதிகாரி, திடீர் மரணவிசாரணை அதிகாரி, தடயவியல் பொலிஸார், முள்ளியவளை பொலிஸார் ஆகியோர் வருகைதந்து தமது விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.



விசாரணைகளைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் குறித்த சடலம் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டு மருத்துவப் பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேலும் இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முள்ளியவளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டிற்கு என்ன நடக்கப் போகின்றதென தெரியாத ஒரு அச்சநிலை ஏற்பட்டுள்ளது!

## ரிஷாட் பதியுதீன் எம்.பி. மன்னாரில் தெரிவிப்பு





ஒரு சில அரசியல் தலைமைகள் இனவாத, மதவாத சூழலை நாட்டில் ஏற்படுத்தி, தாங்கள் ஆட்சி பீடத்தில் ஏற வேண்டும் என்பதற்காக இனவாதத்தையும், மதவாதத்தையும் விதைத்து வந்துள்ளனர் என முன்னாள் அமைச்சரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் ஆரம்பிக்கப்பட்ட பிரபஞ்சம் செயற்திட்டம் நேற்றுமுன்தினம் (08) மதியம் மன்னார் எருக்கலம்பிட்டி மத்திய மகளிர் மகா வித்தியாலயத்தில் வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன் 500 மில்லியன் டொலர் கடன் கட்ட வேண்டியவர்களாக இந்த அரசு இருக்கின்றது.

இந்த வருட இறுதிக்குள் நாட்டிற்கு என்ன நடக்கப் போகின்றது என்று தெரியாத ஒரு அச்ச நிலை ஏற்பட்டுள்ளது. பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வைத்தியசாலை பொருட்கள், உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் நிலை என்னவாகும் என்ற கேள்வி நாட்டில் ஏற்பட்டுள்ளது.

நாட்டின் நலனுக்காகத்தான் இந்த நாட்டின் வரலாற்றில் நாங்கள் எல்லோரும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றோம்.

ஆனால் ஒரு சில அரசியல் தலைமைகள் இனவாதத்தையும், மதவாதத்தையும் கக்கி இனவாத, மதவாத சூழலை இந்த நாட்டில் ஏற்படுத்தி, தாங்கள் ஆட்சி பீடத்தில் ஏற வேண்டும் என்பதற்காக இனவாதத்தையும், மதவாதத்தையும் விதைத்து வந்துள்ளதை நாங்கள் பார்க்கின்றோம். இனவாதத்தையும், மதவாதத்தையும் மூலதனமாக கொண்ட அரசாங்கம் தான் இந்த இரண்டு வருட காலத்துக்குள் இவ்வாறான, மோசமான நிலைக்கு நாட்டை கொண்டு சென்றுள்ளார்கள் என்பது எம் எல்லோருக்கும் தெரியும்.

இன்று விவசாயிகள் வீதியில் இறங்கி போராடுகின்றார்கள். தங்கள் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க விடுங்கள்.

தமது விவசாயத்திற்கு தேவையான பசளையை தாருங்கள் என்று வீதியில் போராடுகின்ற ஒரு மோசமான நிலை இந்த நாட்டில் ஏற்பட்டுள்ளது. எரிவாயு சிலிண்டர் பெற்றுக்கொள்ள வரிசையில் நிற்கின்றனர். ஒரு நாள் வேலையை விட்டுவிட்டு சிலிண்டரினைப் பெற்றுக்கொள்ள வரிசையில் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு. நினைக்க முடியாத அளவிற்கு பொருட்களின் விலையேற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நானும் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரனவும் ஒரே அமைச்சில் அமைச்சர்களாக இருந்தோம். அவர் இராஜாங்க அமைச்சராக இருந்தார்.

எங்களில் ஒரு வருடங்கள் இல்லை இரண்டு வருடங்களாக எரிவாயு நிறுவனத்தினர் வந்து 250 ரூபா கூட்டித்தாருங்கள் என்று கேட்டார்கள். கடைசியாக 100 ரூபா கூட்டித்தாருங்கள் என்று கேட்டனர். நாங்கள் கூறினோம், ஒரு ரூபா கூட கூட்டித்தர முடியாது. உலகச் சந்தையில் இந்த விலை. நீங்கள் 100 ரூபா கூட்டித்தர கேட்டால் இந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் இதனால் பாதிக்கப்படுவார்கள் என்று கூறினோம். மாவின் விலையை கூட்டுவதற்கு இலங்கையில் உள்ள இரண்டு கம்பனியினர் எங்களிடம் வந்து கேட்டார்கள். 6 ரூபா கூட்டி கேட்டார்கள். அதற்கு நான் இருக்கும் வரை ஒரு ரூபா கூட கூட்ட அனுமதிக்க மாட்டேன் என்று கூறினேன்.

அதேபோன்று தான் 100 ரூபாவுக்கு சீனியையும், அரிசியை 70 ரூபா வரைக்கும், பருப்பு 120 ரூபாவுக்கு விற்றோம். இவ்வாறு ஒரு மனிதனுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை நியாயமான விலைக்கு விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொண்டோம். பொருட்களின் விலையை இந்த நாட்டில் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தோம்.

ஆனால் இன்று இனவாதத் தையும், மதவாதத்தையும் மூலதனமாகக் கொண்டு வந்த இந்த அரசு இன்று பொருட்களின் விலையை அரசாங்கம் அல்ல, அமைச்சர்கள் அல்ல பொருட்களின் விலையை கடை முதலாளிகள், வியாபாரிகள் தீர்மானிக்கின்ற நிலைக்கு இந்த நாடு மோசமடைந்துள்ளது.

எனவே எம்மிடம் உள்ள ஒரே ஒரு ஆயுதம் பிரார்த்தனை. இந்த பிரார்த்தனை ஊடாக இந்த நாட்டிற்கு நல்லதொரு ஆட்சிக்காக எல்லா இனத்தையும் சமமாக மதிக்கின்ற நல்லாட்சிக்காக, எல்லா இனமும் ஒற்றுமையாக வாழக்கூடிய ஆட்சிக்காகவும், நமது பொருளாதாரம் மேம்பட்டு, நமது பிள்ளைகள் நாளை ஏழைகளாக மாறிவிடாது, பசியிலும் பஞ்சத்திலும் வாழ்ந்திடாமல் நிம்மதியாக வாழ்ந்திட நல்லதொரு ஆட்சிக்காக நாம் எல்லோரும் இறைவனை பிரார்த்திப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்றுமுன்தினம் வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்கு சென்று ஆசி பெற்றுக் கொண்டார்.

# மலைப்பாம்பை உயிருடன் பிடித்த வலப்பனை பொலிஸ் அதிகாரி




வலப்பனை, கும்பல்கமுவ தென்னஹேன்வல, உல்மொல்லிய வயல்வெளியில் நேற்றுமுன்தினம் (08) மாலை சுற்றித் திரிந்த 15 அடி நீள மலைப்பாம்பு ஒன்றை வலப்பனை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி அம்பகஸ்பிட்டிய உயிருடன் பிடித்தார்.

வயல்வெளியில் மலைப்பாம்பு ஒன்று நடமாடுவதாகவும், அந்த மலைப்பாம்பு வயல்வெளிக்கு அருகில் உள்ள வீடுகளில் உள்ள குழந்தைகளுக்கும், மனித உயிர்களுக்கும் ஆபத்தை விளைவிக்கக்கூடும் என்றும் அப்பகுதி மக்களால் வலப்பனை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

அப்போது வலப்பனை பொலிஸ் தலைமையகத்தின் பதில் பொலிஸ் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய அம்பகஸ்பிட்டிய, உடனடியாக மற்றொரு பொலிஸ் உத்தியோகத்தருடன் வயல்வெளிக்கு சென்று மலைப்பாம்பை பிடித்தார்.

பின்னர் கோணிப் பையொன்றுக்குள் பாம்பை வைத்துவிட்டு, வலப்பனை கீர்த்திபண்டாரபுர வனவிலங்கு அலுவலகத்திற்கு தகவல் அளித்ததையடுத்து, வனவிலங்கு அதிகாரிகள் மலைப்பாம்பை விடுவிப்பதற்காக பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு சென்றனர்.

# கல்கிசை – காங்கேசன்துறை இடையே கடுகதி ரயில் சேவை நேற்று ஆரம்பம்





(ஐ.சிவசாந்தன்)

கல்கிசை – காங்கேசன்துறை இடையே குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி சேவையில் புதிய ரயில் சேவை நேற்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 5.10 மணியளவில் கல்கிசையிலிருந்து சேவையை ஆரம்பித்த கடுகதி ரயிலானது நண்பகல் 12.15 மணிக்கு யாழ்ப்பாணம் முதன்மை ரயில் நிலையத்தை வந்தடைந்து பின்னர் காங்கேசன்துறை ரயில் நிலையத்துக்கு பயணத்தைத் தொடர்ந்தது.

காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 1.15 மணிக்கு சேவையை ஆரம்பிக்கும் குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி ரயில் சேவையானது யாழ்ப்பாணம் முதன்மை ரயில் நிலையத்திலிருந்து பிற்பகல் 1.37 மணிக்கு சேவையை ஆரம்பித்து கொழும்பை இரவு 8 மணிக்கு சென்றடையும்.

இதுவரை காலமும் 5 குளிரூட்டப்பட்ட பெட்டிகளுடன் சேவையில் ஈடுபட்ட இந்த நகர்சேர் கடுகதி சேவை இன்று முதல் மேலதிகமாக 3 பெட்டிகளை இணைத்து 8 பெட்டிகளுடன் சேவையில் ஈடுபடவுள்ளது. இதன்மூலம் பயணிகளின் எண்ணிக்கை 360ஆக அதிகரிக்க முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

முதலாவது சேவையில் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்ட பிரதேச போக்குவரத்து அதிகாரியை யாழ்ப்பாணம் முதன்மை ரயில் நிலைய தலைமை அதிபர் ரி.பிரதீபன் வரவேற்றார்.

இந்தியாவின் 318 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியின்கீழ் ரயில் இந்தியா தொழில்நுட்ப மற்றும் பொருளாதார சேவைகள் (RITES) நிறுவனமானது இலங்கை ரயில்வே திணைக்களத்திற்கு குளிரூட்டப்பட்ட வசதிகளுடனான டீசல் ரயில்கள்(DMU) இரண்டை வழங்கியது.

அவற்றில் ஒன்று வடக்குக்கான சேவையில் நேற்று முதல் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த கடனுதவித் திட்டத்தின்கீழ் மாஹோ முதல் ஓமந்தை வரையிலான 128 கிலோ மீற்றர் ரயில் பாதை சீரமைப்பு, மாஹோ முதல் அநுராதபுரம் வரையிலான சமிக்ஞை வலையமைப்புத் திட்டம், பொல்காவலை முதல் குருநாகல் வரையிலான இரட்டை ரயில் பாதைத் திட்டம் உள்ளிட்ட திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன.

# வவுனியா கிராமங்களில் குறைகேள் நடவடிக்கை நேரடியாக முன்னெடுப்பு

## மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் பிரதேச செயலாளர் இணைந்து ஏற்பாடு






(வவுனியா நிருபர்)

வவுனியாவில் கிராமங்களுக்கு சென்று மக்கள் குறைகேள் நடவடிக்கைகளை மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும் பிரதேச செயலாளரும் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.

வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இளமருதங்குளம், சேமமடு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும் நவ்வி மற்றும் இத்திக்குளம் ஆகிய கிராமங்களிலும் குறித்த மக்கள் குறைகேள் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில், மக்களது பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. இதன்போது குறித்த கிராம மக்களுக்கு நீண்டகாலம் கிடைக்கப்பெறாத வீட்டுத்திட்டம், கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைக்கு வீதி ஏற்படுத்திக் கொடுத்தல், விவசாய பாதைகளை சீர்செய்தல், ஆவணம் இன்றி தனிநபர்களால் ஆக்கிரமிப்பு செய்துள்ள காணிகளை கிராம மக்களுக்கு பெற்றுக் கொடுத்தல், காணி ஆவணங்கள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல், விளையாட்டு மைதானம் பெற்றுக் கொடுத்தல், விளையாட்டு மைதானங்களை புனரமைப்பு செய்ய நிதி ஒதுக்குதல், ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மேலதிக காணியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை, சுயதொழில் முயற்சியாளர்களை இனங்கண்டு அவர்களை ஊக்குவிக்க நடவடிக்கை, பாடசாலை மாணவர்களுக்கு பஸ் வசதி செய்து கொடுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் அவற்றுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் வன்னி மாவட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி.) நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் இணைப்பு செயலாளர் டினேஸ், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி.) நகரசபை உறுப்பினர் நிரோசன், வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன், ஈ.பி.டி.பி. கட்சியின் கிராம மட்ட செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# டெங்கு, மலேரியாவை கட்டுப்படுத்த வவுனியாவில் விசேட செயற்றிட்டம்




(வவுனியா நிருபர்)

டெங்கு மற்றும் மலேரியாவை கட்டுப்படுத்த வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் வவுனியா, பட்டானிச்சூர் புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பட்டானிச்சூர், வேப்பங்குளம், பட்டக்காடு ஆகிய பகுதிகளில் டெங்கு மற்றும் மலேரியா நுளம்பு பெருக்கும் இடங்களை அழிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா நகர சபையின் அனுசரணையுடன் நகர உறுப்பினர்களான எம்.லரீப், அப்துல் பாரி, பொது சுகாதார பரிசோதகர் வாகீசனின் ஏற்பாட்டில் பொது இடங்கள், வீதிகள், வீடுகள் என்பன பார்வையிடப்பட்டதுடன், அப் பகுதிகளில் காணப்பட்ட நுளம்பு பெருகும் இடங்களும் அழிக்கப்பட்டன. அத்துடன் மலேரியா மற்றும் டெங்கு நுளம்பு பெருகும் வகையில் வீடுகளின் அயற் சூழலை வைத்திருந்தவர்களுக்கு எச்சரிக்கையும் விடப்பட்டது.

# ரூ.2 கோடி பெறுமதியான கேரள கஞ்சா பாணந்துறையில் மீட்பு




சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவை வேனில் ஏற்றிச் சென்ற நபர் ஒருவர் நேற்று காலை பொத்துப்பிட்டியவில் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த கஞ்சா, வெளிநாடு ஒன்றில் மறைந்திருந்து போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுவரும் "பாணந்துறை சலிந்து" என்பவருடையது என பொலிஸார் தெரிவிக்கின்றனர். பாணந்துறையில் இருந்து களுத்துறை நோக்கிப் பயணித்த வேன் பொத்துப்பிட்டி சந்திக்கு அருகில் காலி வீதியில் சோதனைக்காக நிறுத்தப்பட்டபோது பொலித்தீன் பைகளில் 63 கிலோ 200 கிராம் கேரள கஞ்சா பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவரிடமிருந்து 7 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

## - தொற்றுப் பரவலிலிருந்தும் நாட்டு மக்களை பாதுகாத்தமை -

# ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வண. ஈத்தலவெட்டுனுவெவே ஞானதிலக்க தேரர் கோரிக்கை

இனம் தெரியாத தொற்றுநோயிலிருந்து மக்களைக் காப்பாற்றி மக்கள் உயிர்வாழும் சுதந்திரத்தை இருமுறை வழங்கிய ஜனாதிபதியின் எதிர்காலத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவது அனைவரினதும் கடமையும் பொறுப்புமாகும் என்று, மிரிசவெட்டிய விஹாராதிகாரி ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் வேந்தர், கலாநிதி வண.ஈத்தலவெட்டுனுவெவே ஞானதிலக்க தேரர் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் (08) முற்பகல் மிரிசவெட்டிய விஹாராதிகாரி தேரரைச் சந்தித்தபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நாடு பெரும் கடன் சுமையை எதிர்கொண்டுள்ளது. ஆனால் அதையெல்லாம் சமாளித்து, தொற்றுநோய்க்கு அச்சப்படாமல் மக்கள் சுதந்திரமாக வாழ வாய்ப்பளித்திருப்பது, ஏனைய உலக நாடுகளுக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது என்றும் தேரர் சுட்டிக்காட்டினார்.

புதிய பொதுமைப்படுத்தலின்கீழ் மக்களின் வாழ்க்கை முறையைக் கொண்டுசெல்வதற்கு ஜனாதிபதியின் வேலைத்திட்டங்கள் ஆத்ம சக்தியாக அமைந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டை மீண்டும் மூடுவதற்கு இடமளிக்காமல் சுய ஒழுக்கத்துடன் வாழ வேண்டும். அத்துடன், பொருளாதாரத்தை நிர்வகித்துக்கொண்டு தற்போதைய நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை முன்னேற்றுவதற்காக ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவது அனைவரதும் கடமையும் பொறுப்புமாகும் என்றும் தேரர் எடுத்துரைத்தார்.







அதன் பின்னர் லங்காராம விஹாரைக்குச் சென்ற ஜனாதிபதிக்கு, அதன் விஹாராதிகாரி வண. ரலபனாவே தம்மஜோதி நாயக்கத் தேரர், பிரித் பாராயணம் செய்து, ஆசிர்வாதம் அளித்தார். நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில், ஜனாதிபதி இதன்போது தேரரிடம் எடுத்துரைத்தார்.

அதனையடுத்து, அநுராதபுரம் ஸ்ரீசம்புத்த ஜயந்தி விஹாரையின் விஹாராதிபதி கலாநிதி வண. நுகேதென்னே பஞ்ஞானந்த தேரரையும் சந்தித்து ஜனாதிபதி ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார்.

உலகில் அதிக கேள்வி நிலவும் நொரிடாகே பீங்கான் உபகரணங்கள், ஜப்பான் நிறுவனமொன்றினால் இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த நிலைமையைக் கருத்திற்கொண்டு, உயர்தரத்தைக் கொண்ட டைல்களை உள்நாட்டிலேயே தயாரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. எதிர்வரும் வருடத்தில், நாட்டுக்குத் தேவையான டைல்களை தேசிய நிறுவனங்களின் மூலம் வழங்க முடியுமென்று ஜேதவனாராமாதிபதி வண. இஹல ஹல்மில்லேவே ரத்தனபால தேரரைச் சந்தித்து உரையாடும் போது ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சேதனப் பசளை விவசாயத்துக்கு விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாகவும் ஜேதவனாராமாதிபதி தேரருக்கு ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

அபயகிரி விஹாரைக்குச் சென்ற ஜனாதிபதி, விஹாராதிபதி கலாநிதி வண. கல்லஞ்சியே ரத்தனசிறி தேரரைத் சந்தித்துக் கலந்துரையாடினார். அநுராதபுரம் புண்ணிய பூமிக்கு வருகை தரும் யாத்திரிகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, முறையான போக்குவரத்துத் திட்டத்துடன் கூடிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் அவசியத்தைத் தேரர் சுட்டிக்காட்டினார்.

ரஜரட்ட வலயத்தில் மாத்திரம், மூவாயிரத்து முன்னூற்று இருபத்து இரண்டு பெரிய, நடுத்தர மற்றும் சிறிய குளங்கள் காணப்படுகின்றன. அவற்றை மறுசீரமைத்து விவசாயப் பொருளாதாரத்துக்கு பங்களிக்கச் செய்வது தொடர்பிலும் தேரர் தெளிவுபடுத்தினார்.

உரிய நேரத்தில் சரியான முடிவுகளை ஜனாதிபதி எடுப்பார் என மஹா சங்கத்தினர் எதிர்பார்க்கின்றனர் என்றும், ரத்தனசிறி தேரர் இதன்போது எடுத்துரைத்தார்.

# விமான நிலையத்தில் 5 புதிய சோதனைக் கவுன்டர்கள் திறப்பு




பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வெளியூர் பயணிகளுக்காக ஐந்து புதிய சோதனைக் கவுன்டர்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள சோதனைக் கவுண்டர்களின் எண்ணிக்கை 60ஆக உயர்ந்துள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் போக்குவரத்து அதிகரித்துள்ளதால், வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவரான ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

தற்போது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுமார் 7,000 பேர் புறப்படும் முனையத்தைப் பயன்படுத்துகின்றனர். 6,000 பேர் வருகை முனையத்தைப் பயன்படுத்துகின்றனர்.

# சுதந்திரக்கட்சியின் புத்தளம் அமைப்பாளர்கள் நியமனம்

(ரஸீன் ரஸ்மின்)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புத்தளம் தொகுதி மற்றும் மாவட்ட புதிய அமைப்பாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றின்போது கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவினால் தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் நியமிக்கப் பட்டனர்.





இதன்போது கற்பிட்டி பிரதேச சபையின் தலைவர் ஏ.எம்.இன்பாஸ் புத்தளம் தொகுதி இணை அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புத்தளம் மாவட்ட அமைப்பாளராக, அக்கட்சியின் நீண்டகால உறுப்பினரான மதுரங்குளி கணமூலையைச் சேர்ந்த ஹனீபா முஹம்மது ரிஸ்லியும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முருத்தெட்டுவே ஆனந்த தேரருக்கு பிரதமர் தலைமையில் கௌரவிப்பு







கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தராக நியமிக்கப்பட்ட நாரஹேன்பிட்ட ஸ்ரீஅபயராம புராதன விகாராதிபதி வண. முருத்தெட்டுவே ஆனந்த தேரருக்கு கௌரவமளிக்கும் விழா ("அனத நாஹிமி குலபதி உபஹார") நேற்று முன்தினம் (08) பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.பொதுச் சேவை ஐக்கிய தாதியர் சங்கம் இந்த விழாவினை ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது நாரஹேன்பிட்ட ஸ்ரீஅபயராம புராதன விகாராதிபதி வண. முருத்தெட்டுவே ஆனந்த தேரர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் கௌரவிக்கப்பட்டார். குறித்த நிகழ்வில் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவும் கலந்து கொண்டிருந்தார்.

இலங்கை வரலாற்றின் பல்வேறு சந்தர்ப்பங்களில் தேசிய பிரச்சினைகள் மற்றும் அனர்த்தங்களின் மத்தியில் மஹாசங்கத்தினர் முன்னின்று செயற்பட்டமைக்கு வரலாறு சாட்சியளிக்கும். இந்நாட்டின் தேசிய பிரச்சினைகளின்போது முன்னின்று பெருந்தன்மையாக உழைத்த ஒருவராக நமது தேரர் வரலாற்றில் இடம்பிடித்துள்ளார். அந்த தேசிய பிரச்சினைகளின் மத்தியில் அவர் தயக்கமின்றி செயற்பட்டார்.

அதேபோன்று தொழில் உரிமைக்காகவும் அவர் முன்னின்று செயற்பட்டார். அது இறுதியில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் தொழிற்சங்க நடவடிக்கையாக மாற்றுவதற்கும் நேரடி கருத்துகள் ஊடாக போராடி வெற்றியுடன் நிறைவுசெய்வது தொடர்பில் நாம் ஒவ்வொருவரும் பெருமையடைய வேண்டும். விசேடமாக தாதியர் சேவையின் முன்னேற்றம் உள்ளிட்ட இந்நாட்டின் சுகாதாரத்துறைக்கு அவரிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைகள் மிகவும் முக்கியமானதுடன், அது சாதகமான சுகாதார சேவைக்கு முக்கியமானதாக விளங்குகின்றது என அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல இதன்போது குறிப்பிட்டார்.

சிலுமின பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தர்மன் விக்ரமரத்ன இதன்போது வணக்கத்திற்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரரின் வாழ்க்கை தத்துவம் என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார்.

கொழும்பு பல்கலைக்கழக வேந்தர், நாரஹேன்பிட்ட ஸ்ரீ அபயராம புராதன விகாராதிபதி மற்றும் பொதுச் சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவர் வண. முருத்தெட்டுவே ஆனந்த தேரர் இதன்போது உரையாற்றினார்.

பல நிகழ்வுகளை இரத்துச் செய்தே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்நிகழ்வை சிறப்பிப்பதற்காக வருகை தந்துள்ளார். அன்று அபயராம மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டபோது பிரதமர், விகாரைக்கு வருகை தந்து எம்மைப் பற்றி விசாரித்தமையை ஒருபோதும் மறக்க முடியாது. நீங்கள் இன்று செய்துள்ள கௌரவிப்பிற்கும் எமது சங்கம் நன்றி தெரிவிக்க விரும்புகிறது என முருத்தெட்டுவே ஆனந்த தேரர் குறிப்பிட்டார்.

நிகழ்வில் வண.மெதகொட அபயதிஸ்ஸ தேரர், கெடமான்னே குணானந்த தேரர் உள்ளிட்ட மஹாசங்கத்தினர் மற்றும் ஏனைய மதத் தலைவர்களும் பங்கேற்றிருந்தனர்.

மேலும் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத், பிரதி பணிப்பாளர் நாயகம் லால் பனாபிடிய, பொதுச் சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் உபதலைவர் ஆர்.கே.பட்டுவிட, தலைமை செயலாளர் ஏ.டீ.கல்யாணி உள்ளிட்ட பொதுச் சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தாதியர்களும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

# சீன வெளியுறவு அமைச்சர் வாங்-யீயை விமான நிலையத்தில் வரவேற்றார் நாமல்





சீன வெளியுறவு அமைச்சர் வாங்-யீ உத்தியோகபூர்வ பயணமாக நேற்றுமுன்தினம் இலங்கை வந்தடைந்த நிலையில் அவரை இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ விமான நிலையத்தில் வரவேற்றார். கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வாங்-யீ பயணித்த விமானம் தரையிறங்கியது.

சீனா - இலங்கை ஜனநாயக உறவுகளின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அவர் இலங்கை விஜயம் செய்ததாக கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

கென்யா, எரித்திரியா, கொமொரோசு மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்த பின்னரே சீன வெளியுறவு அமைச்சர் இலங்கை வந்தார்.

# கோட்டாவின் ஆட்சிக்காலத்தில் மட்டும் 5.18 பில்லியன் அமெரிக்க டொலர் கடன்

## சம்பிக்க வெளியிட்ட அதிர்ச்சி தகவல்

2020ஆம் ஆண்டில் மட்டும் 1,875 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனாகப் பெறப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மொனராகலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தான் ஜனாதிபதியாக இருந்த இரண்டு வருட காலப்பகுதியில் ஒரு வெளிநாட்டுக் கடன் கூட பெறப்படவில்லை எனத் தெரிவித்திருந்தார்.



"எனது 2 வருட பதவிக் காலத்தில் நான் ஒரு சதம் கூட கடனாக வாங்கவில்லை. நாம் ஆண்டுக்கு 6.3 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். இந்த கடன்கள் முந்தைய அரசுகளால் பெற்றவை. இது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவோ அல்லது வேறு எந்த விஷயத்துக்காகவோ இருந்திருக்கலாம். ஆனால் நாம் இப்போது ஒவ்வொரு வருடமும் திருப்பிச் செலுத்த வேண்டும்" என்று அவர் கூறியிருந்தார்.

இதற்கிடையில், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தற்போதைய அரசாங்கம் வாங்கியதாக கூறப்படும் கடன்களின் பட்டியலை வெளியிட்டுள்ளார்.

2020ஆம் ஆண்டில் மட்டும் 1,875 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனாகப் பெறப்பட்டதாக சம்பிக்க பகிர்ந்துள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2021இல், மொத்தக் கடன்கள் 3,300 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் பெறப்பட்டுள்ளது.

இதன்படி, சம்பிக்க ரணவக்க பகிர்ந்துள்ள விவரங்களின்படி, கடந்த இரண்டு வருடங்களில் மொத்தமாக 5.18 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனாகப் பெறப்பட்டுள்ளதென அவர் கூறியுள்ளார்.






எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்றுமுன்தினம் (08) பிற்பகல் மன்னார் பேராயர் இம்மானுவேல் பெர்னாண்டோவை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார்.

# மட்டு.கோறளைப்பற்று பிரதேச சபை ஊழியர்கள் மூன்றாவது நாளாகவும் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம்

## பணியாளரை தாக்கியவர் கைதுசெய்யப்படவேண்டுமென கோரிக்கை










(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு கோறளைப்பற்று பிரதேச சபை ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் தொடர்ந்து 3 நாட்களாக ஈடுபட்டு வருகின்றனர். பணியாளர் ஒருவர் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கண்டித்தும் சந்தேக நபர் கைதுசெய்யப்பட வேண்டும். தமக்கு நீதி வேண்டும் எனத் தெரிவித்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை, இவ்விடயம் தொடர்பாக அறிந்த இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் சம்பவ இடத்திற்கு வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியதுடன், அவர்களது கோரிக்கையினை கேட்டறிந்து கொண்டார்.

இவ்விடயத்திற்கு தீர்வுகாணும் முகமாக வாழைச்சேனை பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். குறித்த விடயம் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் தலைமையில் பிரதேச சபை சபா மண்டபத்தில் தவிசாளர் திருமதி சோபா ஜெயரஞ்சித், வாழைச்சேனை உதவி பொலிஸ் அதிகாரி பிரதேச சபை ஊழியர்கள் ஆகியோருக்கிடையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

அரச ஊழியர்களின் மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள் சட்டத்தின்முன் தண்டிக்கப்பட வேண்டும். சுகாதாரப் பணியாளர்கள் மக்களோடு மக்களாக களப் பணியில் ஈடுபடுபவர்கள். அவர்கள் சென்றுவரும் இடங்களில் கடமைக்கு இடையூறு இடம்பெறாது பாதுகாப்பு பெறுவது, ஊழியர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். தொழில்நுட்ப உத்தியோகத்தர் உட்பட 3 ஊழியர்களது கைது தொடர்பாக பொலிஸாரின் எதிர்கால நடவடிக்கை, பொலிஸாரின் ஒத்துழைப்பு, பொலிஸார் குறித்த காணி தொடர்பான விடயத்தில் முறைப்பாடு பதிவுசெய்வதில் இழுத்தடிப்பு மேற்கொண்டமை, தவிசாளர் மற்றும் பிரிவு கிராமசேவகர் செய்த முறைப்பாட்டிற்கு பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்காமை போன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இவ்விடயங்களை கேட்டறிந்துகொண்ட பொலிஸார் ஊழியர்களது பாதுகாப்பு உறுதிப் படுத்தப்படுவதாகவும் 3 ஊழியர்களது பெயர் விவரங்களை முறைப்பாட்டுக்காரர் பதிவுசெய்துள்ளதாகவும் இவர்களது கைது விடயம் தொடர்பாக தவிசாளர், சபைச் செயலாளர் மற்றும் வாழைச்சேனை நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோருடன் கலந்துரையாடப்படும். ஊழியர்களுடன் பொலிஸார் கைது விடயம் தொடர்பாக தொடர்புகொள்ளமாட்டார்கள் என பொலிஸார் தெரிவித்தனர். இதன்போது தவிசாளரின் பணிப்பிற்கமையவே ஊழியர்கள் கடமைக்கு சென்றதாகவும் அவர்களை கைது செய்ய இடமளிக்கப்போவதில்லை என்றும் இல்லையேல் தன்னை கைதுசெய்யுமாறு பொலிஸாரிடம் தவிசாளர் கேட்டுக்கொண்டார்.

சந்தேகநபர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

இவர் கைதுசெய்யப்பட்டு வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தும் நடவடிக்கைகள் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது சந்தேகநபர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதனால் அவரை நீதிமன்று கொண்டுசெல்லமுடியாத நிலைமை ஏற்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸாரினால் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த அறிக்கைக்கமைய குற்றம் சுமத்தப்பட்டவரும் பாதிக்கப்பட்டவரும் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதனால் சம்பவம் தொடர்பாக அறிய வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி எம்.எச்.எம்.ரம்சின் வைத்தியசாலைக்கு நேரடியாகச் சென்று குறித்த வழக்கின் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

சந்தேகநபரின் சட்டத்தரணியின் அறிக்கைக்கு அமைய ஒரு இலட்சம் ரூபா சீரப் பிணையில் அவர் விடுவிக்கப்பட்டதுடன், இதன் வழக்கு எதிர்வரும் 07.02.2022 ஆம் திகதி இடம்பெறும் என பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், அரச காணி விடயத்திற்கு தீர்வுகாண வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் எதிர்வரும் தினமொன்றில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், பிரதேச சபை தவிசாளர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோருடன் இராஜாங்க அமைச்சர் கலந்துரையாடலொன்றை மேற்கொள்வது எனப் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தங்களது போராட்டம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையில், தங்களது ஊழியர்கள் 3 பேரின் பெயர்கள் பொலிஸ் முறைப்பாட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களது பெயர் விவரம் முறைப்பாட்டிலிருந்து நீக்கப்படும்போது தங்களது போராட்டமும் நிறுத்தப்படும் என்றும் அவ்வாறில்லையேல் போராட்டம் தொடரும் எனவும் தெரிவித்தனர்.

கடந்த 6ஆம் திகதி வியாழக்கிழமையன்று வாழைச்சேனை பெற்றோல் நிலையச் சந்திக்கு அருகாமையில் ஆலையடி வளவு என அழைக்கப்படும் காணியினுள் பிரதேச சபையின் அனுமதியின்றி வியாபார நடவடிக்கைக்காக சட்டவிரோத தற்காலிகக் கொட்டில் அமைக்கும் பணி இடம்பெற்று வந்ததாகவும் அதனை அகற்றுவதற்குச் சென்ற பிரதேச சபை ஊழியர்களை அக்காணிக்கு உரிமை கோரும் நபர் தாக்கி கல்லால் எறிந்ததாகவும் இதில் காயமுற்ற சபை ஊழியர் ஒருவர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாகவும் குற்றவாளியை கைதுசெய்யுமாறு தெரிவித்து கவனயீர்ப்புப் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

## போழியார் புலம்பல்.!



***நெருக்கடியான நேரங்களில் இலங்கைக்கு இந்தியா உதவுமாம் எண்டு இந்திய வெளிவிவகார அமைச்சர் சொன்னதப் பார்த்தால் சீனாட நெருக்கடி தமக்கு வந்தாலும் பறவா இல்ல சிங்கள நெருக்கடிய வராம பார்க்கோணும். சோக்கான கத இது! சோதையன் குடும்பி சும்மா ஆடாது பார்பம்!***

# ரஹ்மத் பவுண்டேசனின் ஒருங்கிணைப்பில் கல்முனையில் வாழ்வாதார உதவிகள் கையளிப்பு







(எம்.என்.எம்.அப்ராஸ்)

ரஹ்மத் பவுண்டேசனின் ஒருங்கிணைப்பில் வை.டபிள்யு.எம்.ஏ. (YWMA) அமைப்பின் பூரண அனுசரணையுடன், வாழ்வாதார உதவிகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ரஹ்மத் பவுண்டேசனின் ஸ்தாபகத் தலைவரும், கல்முனை மாநகர சபை பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூர் தலைமையில் கல்முனை அல் - மிஸ்பாஹ் மகா வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக தெரிவுசெய்யப்பட்ட கணவனை இழந்த பெண்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டதுடன், மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் என்பன இதன்போது வழங்கப்பட்டன.

மேலும், பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடரும் மாணவி ஒருவருக்கு புலமைப்பரிசில், கல்முனை அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலய விசேட கல்விப் பிரிவுக்கு உதவித்தொகை என்பன பாடசாலை அதிபரிடம் குறித்த YWMA அமைப்பினரால் வழங்கப்பட்டது.

மேலும் இதன்போது ரஹ்மத் பவுண்டேசனின் அமைப்பினால் YWMA அமைப்பின் தலைவி தேசமான்ய பவாசா தாஹா மற்றும் கனடா - இலங்கைக்கான முஸ்லிம் பெண்கள் அமைப்பின் தலைவி பைருசா காசிம் ஆகியோர் ரஹ்மத் பவுண்டேசனினால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா





(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா வலயக்கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட முள்ளிப்பொத்தானை மத்திய கல்லூரியில் 2019/2020 சித்திபெற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான 19 மாணவ, மாணவிகளுக்கான கௌரவிப்பும் நினைவுச் சின்னம் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் (08) பாடசாலை அதிபர் அஸ்கீன் மஹ்ரூப் தலைமையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக கிண்ணியா வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.நசுருகர்கான் கலந்து சிறப்பித்தார்.

இதில் உதவிப் பணிப்பாளர் மற்றும் பாடசாலை இணைப்பாளர் எம்.ஹசன், கல்வி நிர்வாக பிரதி பணிப்பாளர் ஏ.சீ.நஸார், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எம்.எஸ்.எம்.நஸார் மற்றும் பாடசாலை அதிபர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மட்டு. மாவட்ட முஸ்லிம் ஊடகர்கள் அமைப்பின் புதிய நிர்வாகம் தெரிவு



(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் ஊடகவியலாளர்கள் அமைப்பின் 2022ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவும் பொதுக் கூட்டமும் நேற்று முன்தினம் (08) மாலை ஏறாவூரில் இடம்பெற்றது.

இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் 2022ஆம் ஆண்டிற்கான புதிய தலைவராக ஊடகவியலாளர் ஏ.எம்.அஸ்மி, செயலாளராக ஊடகவியலாளர் எம்.ரீ.எம்.பாரிஸ் மற்றும் பொருளாளராக ஊடகவியலாளர் ஏ.எச்.ஏ.ஹுசைன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டதுடன், பிரதித் தலைவர்களாக ஊடகவியலாளர்களான எம்.ஐ.பாறூக், எம்.எஸ்.எம்.சஜீ ஆகியோரும் உப செயலாளராக எம்.ஐ.அப்துல் நஸார் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன், ஊடக இணைப்பாளர்களாக ஊடகவியலாளர்களான எஸ்.எம்.எம்.முர்ஷித், எம்.ஏ.சீ.எம்.ஜலீஸ், எம்.ஜீ.ஏ.நாஸர் ஆகியோரும் கணக்குப் பரிசோதகர் எச்.எம்.எம்.பர்ஸான் ஆகியோர் இவ்வாண்டின் புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாக பொதுச் சபையினால் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாழைச்சேனை நவாஸின் பல்லின சமூகத்தின் இன நல்லிணக்கம் நூல் வெளியீட்டு நிகழ்வு







(கல்குடா நிருபர்)

வாழைச்சேனை எம்.ஐ.எம்.நவாஸ் (ஸலமி) எழுதிய, 'பல்லின சமூகத்தின் இன நல்லிணக்கம்' நூல் வெளியீட்டு விழா அந்நூர் தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் நேற்று முன்தினம் (08) இடம்பெற்றது.

ஓய்வுபெற்ற கோட்ட கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.கே.றஹ்மான் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச்.எம்.முஸம்மில் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், ஓட்டமாவடி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.எம்.அல்-அமீன், வாழைச்சேனை பொலிஸ் நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி ஈ.ஏ.டபிள்யூ.எஸ்.எதிரிசிங்க, மும்மத பெரியார்கள், பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், பிரதேச கலைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

'பல்லின சமூகத்தின் இன நல்லிணக்கம்' நூலின் முதற் பிரதி பிரதம அதிதி பிரதேச செயலாளர் எஸ்.எச்.எம்.முஸம்மில் மற்றும் நூலாசிரியரின் தாயாருக்கும் வழங்கப்பட்டதுடன், அதிதிகளுக்கும் பிரமுகர்களுக்கும் பிரதி வழங்கப்பட்டது.

இவ்விழாவில் நூலின் நயவுரையை கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம்.பP.எம்.நிஸ்வி நடத்தியதுடன், வாழ்த்துரையை அதிபர் எச்.எம்.எம்.இஸ்மாயில் நடத்தியதுடன், ஏற்புரையையும் நன்றியுரையையும் எம்.ஐ.எம்.நவாஸ் (ஸலமி) நடத்தியதுடன், நிகழ்ச்சி தொகுப்பினை எம்.எச்.எம்.அப்ஷல் அலி வழங்கினார்.

# கந்தளாயில் சூதாட்டம்; அறுவர் கைது

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பணத்திற்கு சூது விளையாடிய ஆறு பேரை கைதுசெய்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் பேராறு பகுதியைச் சேர்ந்த 38, 32, 45, 22 மற்றும் 20 வயதுடைய ஆறு பேரை நேற்று முன்தினம் (08) கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் பேராறு ஆற்றங்கரை பகுதியில் பணம் செலுத்தி சூது விளையாடிக்கொண்டிருந்த போது கந்தளாய் குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சுற்றிவளைத்து சூது விளையாடிய ஆறு சந்தேகநபர்களை கைதுசெய்துள்ளதாகவும், சூது விளையாடுவதற்கு பயன்படுத்தப்பட்ட இருபதாயிரம் ரூபா பணத்தினை கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர்களை தடுத்துவைத்துள்ளதோடு கந்தளாய் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# சிங்கள பேச்சுப் போட்டியில் தேசிய ரீதியில் இரண்டாமிடம்

## ஓட்டமாவடி தேசிய பாடசாலை மாணவன் அம்ஹர்



(மீராவோடை நிருபர்)

தேசிய மீலாத் போட்டியில் கலந்துகொண்ட எமது ஓட்டமாவடி தேசிய பாடசாலை மாணவன் எம்.ஐ.எம்.அம்ஹர் தேசிய ரீதியில் இரண்டாமிடம் பெற்று சாதனை படைத்துள்ளதாக பாடசாலையின் அதிபர் எம்.ஏ.ஹலீம் இஸ்ஹாக் தெரிவித்தார்.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட 2021ஆம் ஆண்டிற்கான தேசிய மீலாத் போட்டி சிங்கள பேச்சுப் போட்டியில் கலந்துகொண்டு குறித்த மாணவன் சாதனை படைத்துள்ளார்.

எட்டாம் தரத்தில் கல்வி கற்கும் மாணவன் எம்.ஐ.எம்.அம்ஹர் ஓட்டமாவடி தேசிய பாடசாலையின் பிரதி அதிபர் எம்.எல்.எம்.இப்றாகீம் மதனியின் புதல்வராவார்.

குறித்த போட்டியில் கலந்துகொண்டு பாடசாலைக்கும் பிரதேசத்திற்கும் பெருமை தேடித் தந்துள்ள மாணவன் அம்ஹரை பாடசாலை சமூகம் சார்பாக அதிபர் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.

# சேற்றில் புதையுண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டவரின் மரணத்தில் சந்தேகம்

## பொலிஸாரின் தாக்குதலிலேயே உயிரிழந்தாரென உடலை பெற மறுத்த குடும்பத்தினர்




(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை, புல்மோட்டை, வலத்தாமலை பிரதேசத்தில் சேற்றில் புதையுண்ட நிலையில் சடலமொன்று மீட்கப்பட்டு, பிரேத பரிசோதனைகளுக்காக நேற்று முன்தினம் (08) திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டிருந்தது.

இவ்வாறு அனுப்பப்பட்ட குறித்த சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் விசேட வைத்திய நிபுணர் நெரியெல்லவினால் பிரேத பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு புல்மோட்டை பொலிஸ் அதிகாரிகளிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இதன்போது குறித்த மரணம் மின்சாரம் தாக்கியதாலும் சேற்றில் புதையுண்டு மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளதாக விசேட வைத்திய நிபுணரினால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, பொலிஸாரினால் மரணமடைந்தவரின் குடும்பத்தினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இவ்வாறு மரணமடைந்தவர் பொலிஸார் தாக்கியதினாலேயே உயிரிழந்து இருக்கின்றாரென குடும்பத்தினர் முரண்பட்டதுடன், வைத்தியசாலையிலிருந்து குறித்த சடலத்தை உறவினர்கள் பெற மறுத்துள்ளனர்.

இதன்போது வைத்தியசாலை வளாகத்திலுள் அமைதியின்மை ஏற்பட்டதுடன், குறித்த மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் பிரேத பரிசோதனை செய்யப்பட்ட வைத்தியர் பக்கச்சார்பாக நடந்துகொண்டதாகவும் தமக்கு குறித்த சடலத்தின் இரண்டாவது முறை பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இம்மரணத்திற்கு நீதியை பெற்றுத்தருமாறும் குடும்பத்தினர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.பொலிஸாரினால் துரத்திச்செல்லப்பட்ட குறித்த நபர் பொலிஸாரின் தாக்குதலில் உயிரிழந்திருக்கலாம் எனவும் குறித்த நான்கு பொலிஸ் அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறும் குடும்பத்தினர் இதன்போது கூச்சலிட்டனர்.

மேலும் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

குறித்த நபருக்கு நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் கைதுசெய்வதற்கு வீட்டுக்கு வந்ததாகவும் இதேவேளை, அவர் தப்பி ஓடியதாகவும் இவ்வாறு மரணமடைந்தவரின் மனைவி தெரிவித்தார்.

இதனையடுத்து நானும் கணவரும் பஸ்ஸில் திரியாய் நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும்போது யான் ஓயா பாலத்தை அண்மித்த பகுதியில் பஸ்ஸை இடைமறித்த குச்சவெளி பொலிஸார் தனது கணவரை கைதுசெய்ய முற்பட்டதாகவும் இதனையடுத்து கணவர் தப்பி ஓடியதாகவும் ஓடிய கணவரை மூன்று பொலிஸார் துரத்திச் சென்றதாகவும் உயிரிழந்தவரின் மனைவி தெரிவித்தார்.

மீண்டும் துரத்திச்சென்ற மூன்று பொலிஸ் உத்தியோகத்தரில் இருவர் மாத்திரம் திரும்பி வந்து தன்னை பொலிஸ் வாகனத்தில் ஏற்றிச்சென்று திரியாய் சந்தியில் வைத்தியசாலைக்கு அருகில் தனியாக இறக்கிவிட்டு நாளை கணவர் வீட்டுக்கு வருவார் என பொலிஸார் கூறியதாகவும், இருப்பினும் மறுநாள் தனது கணவன் வீடு திரும்பவில்லையெனவும் கணவனின் மரண செய்திதான் தனது காதில் எட்டியதாகவும் தனது கணவரை பொலிஸார் துரத்திச்சென்று பொலிஸாரின் தாக்குதலினாலேயே அவர் உயிரிழந்திருக்கலாம் எனவும் உயிரிழந்தவரின் மனைவி குற்றம் சுமத்துகின்றார்.

மேலும் எனது கணவன் குற்றவாளியாகவே இருந்தாலும் நீதிமன்றத்தினால் அவரை அழைத்துவருவதற்கான பிடியாணை மாத்திரமே வழங்கப்பட்டுள்ளதாகவும் அவரை அடித்துக் கொலைசெய்ய பொலிஸ் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை எனவும் கணவரின் மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் தமக்கு நியாயமான நீதியினை பெற்றுத்தருமாறும் உயிரிழந்தவரின் மனைவி உரிய அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுப்பதாக தெரிவித்தார்.

குறித்தஸசார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுவருவதுடன், மரணமடைந்தவரின் உடலை உறவினர்கள் பெற மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உப்புவெளி பகுதியில் உள்நாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது



(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விளாங்குளம் காட்டுப்பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட துப்பாக்கியொன்று மீட்கப்பட்டுள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை சர்தாபுற விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நேற்று முன்தினம் (08) மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் இவ்வாறு உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியினை மீட்டுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட துப்பாக்கியினை உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அக்கரைப்பற்று தக்வா ஜும்ஆ பள்ளிவாசலில் இரத்த தானம்




(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை இரத்த வங்கிக்கு அன்பளிப்புச்செய்யும் நோக்கில், அக்கரைப்பற்று தக்வா ஜும்ஆ பள்ளிவாசலினால் ஏற்பாடுசெய்யப்பட்ட மாபெரும் இரத்த தான முகாம் பள்ளிவாசலில் நேற்று முன்தினம் (08) நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் அஸாத் எம்.ஹனிபாவின் வேண்டுகோளுக்கிணங்க, தக்வா ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் எம்.எம்.றியாட்டின் ஒருங்கிணைப்பில் கோவிட் கால நிலைமை மற்றும் இரத்தப் பற்றாக்குறையைக் கருத்திற் கொண்டு மேற்படி நிகழ்வு ஏற்பாடுசெய்யப் பட்டிருந்தது.

இம்முகாமில் அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி எவ்.எம்.ஏ.காதர் மற்றும் வைத்திய சாலையின் இரத்த வங்கி வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், பள்ளிவாசல் பிரதிநிதிகள் ஆகியோர் ஒத்துழைப்பு நல்கியதுடன், இதில் பொதுமக்கள் பெரும்பாலானோர் ஆர்வத்தோடு கலந்துகொண்டு, இரத்த தானம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு பொலன்னறுவை எல்லைக் கிராம வடமுனைக்கான வீதியை புனரமைக்க கோரிக்கை




(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு பொலன்னறுவை எல்லைக் கிராமமான வடமுனை ஊத்துச்சேனைக்கான வெலிகந்தையிலிருந்து ஊத்துச்சேனைக்கான பிரதான வீதி பள்ளமும் குழியுமாக மக்கள் நடந்து கூட செல்லமுடியாதளவிற்கு சகதியான நிலையில் உள்ளது . இதனால் அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் வேறு பிரதேசங்களுக்கு பிரயாணிக்க முடியாது பல்வேறு துன்பங்களை எதிர்நோக்கிவருவதாக கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிரான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிராமங்களான வடமுனை எல்.பி, ஊத்துச்சேனை வடமுனை ஆகிய எல்லைக் கிராமங்களிலுள்ள சுமார் 800 குடும்பங்கள் கடந்த கால யுத்தத்தினால் இடம்பெயர்ந்து பின்னர் குடியேற்றப்பட்டனர்.

இருந்தபோதும் இப்பிரதேசத்துக்கான பிரதான வீதி வெலிகந்தையிலிருந்து செல்லும் இப் பிரதான வீதி ஊடாக அந்த பகுதியில் இருக்கும் மாதுறு ஓயா ஆற்றுப்பகுதியில் இருந்து நாளாந்தம் சுமார் 50 உழவு இயந்திரம் மற்றும் கனரக வாகனங்கள் ஊடாக மணல் அகழ்ந்து எடுத்துச் செல்கின்றனர்.

இதனால் ஊத்துச்சேனை பாலத்திலிருந்து வெலிகந்தை சந்திவரையிலான சுமார் 2 கிலோமீற்றர் வரையிலான வீதி மிகவும் பழுதடைந்துள்ளதுடன், வீதியால் நடந்து கூட செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பஸ் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. இதனால் நாளாந்த பொருட்களை கொள்வனவுசெய்ய வெலிகந்தைக்கு 9 கிலோமீற்றர் தூரம் சகதியில் நடந்து செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது

ஏற்கனவே இந்த மணல் அகழ்வை நிறுத்தி, வீதியை புனரமைத்து தருமாறு கோரி கடந்த டிசம்பர் 27ஆம் திகதி பிரதேச மக்கள் பொலன்னறுவை - கொழும்பு வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வாறான நிலையில் பெய்துவரும் அடைமழை காரணமாக வீதி குளம்போல் காட்சியளிப்பதுடன், சகதியான நிலை ஏற்பட்டுள்ளதுடன் வீதியின் மதகொன்று இடிந்து வீழ்ந்துள்ளதால் வீதிப் போக்குவரத்து தடை ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்தும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, உரிய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்காவிடின் சம்பந்தப்பட்ட திணைக்களங்களை தமது குழந்தைகளுடன் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப்போவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# நிந்தவூரில் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது



(பெரியநீலாவணை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப் பொருளை கடத்திச்சென்ற 34 வயதுடைய இளைஞரொருவர் விசேட அதிரடிப்படையினரால் (08) நேற்று முன்தினம் இரவு அட்டப்பள்ளம் சந்தியில் வைத்து கைதுசெய்யப்பட்டார்.

பெரியநீலாவணை விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, குறித்த பகுதிக்கு விரைந்த அதிரடிப்படையினர் சூட்சுமமான முறையில், சிவில் உடையில் சென்று குறித்த நபரை கைதுசெய்தனர்.

விற்பனைக்காக கொண்டுசெல்ல முற்பட்ட 30 கிராம் ஐஸ் போதைப்பொருள் இவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இதற்கு பயன் படுத்திய மோட்டார்சைக்கிளும் கைப்பற்றப் பட்டுள்ளது. குறித்த இளைஞன் நீண்ட காலமாக போதைப்பொருள் கடத்திச்சென்று விற்பனையில் ஈடுபட்டுவரும் ஒருவர் என படையினர் தெரிவிக்கின்றனர்.

விசேட அதிரடிப்படையினரின் பிரதி பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தர, அம்பாறை வலயக் கட்டளை அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.ஆர்.சேனாதிராஜ ஆகியோரது அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட கட்டளை அதிகாரி டி.சி.வேவிடவிதான வழிகாட்டலில் பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.சி.டி.ஏ.ரத்நாயக்க, எஸ்.எம்.பி.பி.எம்.டயஸ் (IP) தலைமையிலான விசேட அதிரடிப்படையினர் இந்த சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# துர்நாற்றம் வீசும் சாய்ந்தமருது தோணா ஆறு

## ஆற்றை அண்மித்த குடியிருப்பாளர்கள் அசௌகரியம்




(திகாமடுல்ல)

சாய்ந்தமருது பிரதேசத்தை குறுக்கறுத்துச் சென்று முகத்துவாரத்தில் முடிவடையும் தோணா ஆறு துர்நாற்றம் வீசுவதோடு, சுகாதார சீர்கேடும் ஏற்பட்டு வருகின்றது. அண்மைக் காலமாக பெய்துவரும் அடைமழை காரணமாக இத்தோணா ஆறு பெருக்கெடுத்துள்ளதுடன், நீரின் நிறமும் மாறி சகிக்க முடியாத துர்நாற்றமும் வீச ஆரம்பித்துள்ளதால் தோணா ஆற்றின் இரு மருங்கிலும் குடியிருக்கும் குடியிருப்பாளர்கள் இரவும் பகலும் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

கல்முனை மாநகர சபை எல்லைக்குள் அமையப்பெற்றுள்ள மேற்படி ஆற்றை சுத்திகரிக்கும் பணிகள் கடந்த ஆண்டு கல்முனை மாநகர சபை சுயேட்சைக் குழு சாய்ந்தமருது உறுப்பினர்கள் சிலரால் ஏட்டிக்குப் போட்டியாக ஆரம்பிக்கப்பட்டு, தோணாவின் இருமருங்கிலும் மரங்கள் நாட்டப்பட்டு, பொழுதைக் கழிப்பதற்காக கொங்கிரீட் கதிரைகளும் இடப்பட்டன. தற்போது அந்த முயற்சிகள் கைவிடப்பட்டுள்ளதுடன், குப்பைகளும் வீட்டுக்கழிவுநீரும் நிறைந்து காணப்படுகின்றது.

தோணா முழுமையாக நீர்க்களைகளினால் மூடப்பட்டு காணப்படுவதுடன், விஷஜந்துக் களின் வாழிடமாகவும் மாறியுள்ளது. இரவுவேளைகளில் நுளம்பின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதால் தொற்றுநோய்கள் பரவுவதற்கான சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம்செலுத்தி தோணாவில் வளர்ந்து காணப்படும் நீர்க்களைகளை அகற்றி, சுற்றுப்புறத்தில் வாழும் பொதுமக்களுக்கு சௌகரியத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

# அம்பாறையில் கட்டாக்காலி மாடுகளால் மக்கள் போக்குவரத்தில் அசௌகரியம்




(திகாமடுல்ல)

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் பல பகுதிகளிலுமுள்ள பிரதான வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையினால் வாகனச் சாரதிகளும், பாதசாரிகளும், பாடசாலை மாணவர்களும், பெண்களும், முதியவர்களும் பலவிதமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவேண்டியுள்ளது.

கட்டாக்காலி மாடுகளை மேய்ச்சலுக்கு விடுவோர் ஆய்ந்தோய்ந்து பாராமல் தமது பராமரிப்பிலுள்ள மாடுகளை விளைச்சல் நிலங்களிலும் மக்கள் பயன்படுத்தும் பாதைகளிலும் குறிப்பாக, பிரதான வீதிகளில் விடுவதனால் ஆபத்தான பல சம்பவங்கள் அண்மைக்காலங்களில் இடம்பெற்றுள்ளன.

வீதியில் பயணிக்கும் மோட்டார்சைக்கிளுக்கு முன்னால் இவை திடீரென பாய்வதால் விபத்துக்குள்ளாகி பலர் உயிரிழந்துள்ளதுடன், அங்கவீனர்களாகவும் இந்தப் பிரதேசத்தில் பலர் வாழ்ந்துவருகின்றனர்.

மாடுகளின் சாணத்தினால் சுகாதார சீர்கேடுகள் இடம்பெறுவதுடன், விபத்துகளும் சம்பவித்துள்ளன. கல்முனை மாநகர சபையாலும் ஏனைய பிரதேச சபைகளினாலும் இவ்விடயம் தொடர்பாக பலமுறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் தொடர்ச்சியான நிலையான திட்டமொன்று வகுக்கப்படாமையினால் தொடர்ந்தும் இக் கட்டாக்காலிகள் பிரதான வீதிகளிலேயே திரிகின்றன.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்தவேண்டுமென பொது மக்கள் கேட்டுள்ளனர்.

# லசந்த உட்பட படுகொலைக்குள்ளான 44 ஊடகர்களுக்கு நீதி கிடைக்காது!

## ஆனால் இறைவன் தண்டனை வழங்குவான் என்கிறார் சாணக்கியன்




(திருக்கோவில் நிருபர்)

படுகொலைசெய்யப்பட்ட லசந்தவுக்கு எதிராக அன்று பாதுகாப்புச் செயலாளராக இருந்த இப்போதைய ஜனாதிபதி வழக்கு தாக்குதல் செய்திருந்தார். அவருக்காக சட்டத்தரணியாக இருந்தவர்தான் இன்று நீதி அமைச்சர். எனவே, லசந்த உட்பட படுகொலை செய்யப்பட்ட 44 ஊடகவியலாளர்களுக்கும் நீதிகிடைக்கும் என எதிர்பார்ப்பது கஷ்டம் - என நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் லசந்த விக்கிரமதுங்கவின் 12ஆவது நினைவேந்தல் மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத் தூபியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை (08) இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

கொழும்பிலிருக்கும் பல ஊடகங்கள், சிரேஷ்ட ஊடகவியலாளர்கள், பத்திரிகையாளர்களை அரசு தமது வியாபாரிகளைவிட்டு அனைத்தையும் கைப்பற்றும் சில நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதுடன், பல சிரேஷ்ட ஊடகவியலாளர்களுக்கு தொலைபேசி அழைப்புகளை விடுத்து நீங்கள் இவ்வாறான வேலைகளை தொடர்ச்சியாக செய்வீர்களானால் உங்களை வேலையிலிருந்து நீக்கவேண்டிவரும் என தெரிவிக்கப்பட்டுள்ளதாக நாங்கள் அறிகின்றோம்.

2022ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக இருக்கும் இவர்தான் அன்று பாதுகாப்புச் செயலாளராக இருந்தவர். அவர் 2009ஆம் ஆண்டு லசந்த விக்கிரமசிங்க கொல்லப்பட்டதன் பிறகு கொடுத்த பேட்டி ஒன்றை பார்த்திருந்தேன். அப்போது யார் இந்த லசந்த என்று கேட்டிருந்தார். எனக்கும் அவருக்கும் எதுவித பிரச்சினையும் இல்லை. ஆனால், அவருக்கு எதிராக வழக்கு தாக்குதல் செய்யவிருக்கின்றேன் என்றவர்தான் இன்று நாட்டில் ஜனாதிபதியாக இருக்கின்றார். அவருக்காக வழக்கு பேசிய அலி சப்ரிதான் இந்த நாட்டில் நீதி அமைச்சராக இருக்கின்றார்.

ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கு பல அச்சுறுத்தல் இருக்கும் காலப்பகுதியில் தான் நாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் லசந்த மட்டுமல்ல, 44 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் நீதி கிடைக்கவேண்டும். அதேவேளை, பொலிஸாரால் லசந்த கொலை தொடர்பாக வழக்கு தொடரவில்லை.

இருந்தபோதும் நல்லாட்சி அரசாங்கத்தில் கூட அந்த வழக்கை ஆரம்பித்தாலும் திருப்திகரமான முடிவை எந்த அரசாங்கமாக இருந்தாலும் பெற முடியவில்லை என்பது கவலையான விடயம்.

எனவே, இனிவரும் காலங்களிலாவது படுகொலைசெய்யப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும். கொலை செய்யப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தால் நீதிமன்றத்தில் தண்டனை வழங்காவிட்டாலும் இறைவன் தண்டனை வழங்குவான் - என்றார்

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஆபத்தான நிலையில் சிறுவர் பூங்காக்கள்




## மழைக்காலத்தில் கல்முனையில் குளமாக காட்சியளிப்பு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மாநகர எல்லையில் கடற்கரையை அண்டிய பகுதிகளில் அமையப்பெற்றிருக்கும் சிறுவர் பூங்காக்கள் ஒழுங்காக பராமரிக்கப்படாத நிலையில் அத்தனையும் உப்புக்காற்றுக்கு இரையாகி துருப்பிடித்திருக்கின்றன. பூங்காவிலுள்ள சிறுவர்களின் ஊஞ்சல்கள் விளையாட முடியாது அறுந்துவிழும் நிலையில் உள்ளன. பல ஆயிரக்கணக்கான ரூபாக்களை செலவழித்து நிர்மாணிக்கப்பட்ட கல்முனை சிறுவர் பூங்காவின் வாயிற்கதவு உடைந்து விழுந்துள்ளது.

குறுகியகாலப் பயன்பாட்டுக்கும் உட்படாத நிலையில் விளையாட்டு உபகரணங்கள் உடைந்து கழிவு இரும்புக்கும் எடுக்க முடியாத நிலையில் இருக்கக் காரணம், பொருத்தமற்ற பாராமரிப்பற்றிருப்பதுமாகும். இறப்பர் மெத்தைகளோடு அமையப்பெறவேண்டிய சிறுவர் விளையாட்டு உபகரணங்கள் இது வரைகாலமும் இறப்பர் மெத்தைகளே இல்லாமலேயே பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதோடு ஆபத்தான சூழலிலேயே சிறுவர்கள் விளையாடி வந்திருக்கின்றனர். ஆனால், தெய்வாதீனமாக எந்த அசம்பாவிதங்களும் மேற்படி இடங்களில் இன்றுவரை பெரியளவில் பதிவாகியிருக்கவில்லை.

இருந்தாலும் பாரிய அனர்த்தம் வர முன்னர் இந்த பூங்காக்களை பாவனைக்கு உகந்ததாக மாற்றியமைக்கவேண்டிய தேவை உள்ளது.

மழைக்காலம் ஆரம்பித்துள்ளதனால் குறித்த பூங்காக்களில் நீர் வடிந்தோட முடியாமல் குளம்போன்று தேங்கி நிற்கிறது. இந்த பூங்காக்களை பராமரிப்பதில் கல்முனை மாநகர சபையோ, சபையின் உரிய அதிகாரிகளோ இன்றுவரை எந்தவித எத்தனங்களும் எடுக்காதது கவலையளிக்கிறது. பெயர்ப்பலகை கூட இல்லாமல் சில இடங்களில் புற்கள் வளர்ந்தும் கட்டாக்காலி மாடுகளின் இருப்பிடமாகவும் உள்ள இந்த நிலையை கவனத்திலெடுத்து சிறுவர்களின் பொழுதுபோக்குக்கு முக்கியத்துவம் கொடுத்து மாநகர மேயர், சிறுவர் பூங்காக்களை பொருத்தமான பாதுகாப்பு வசதிகளை செய்து பாராமரித்துத் தர முன்வரவேண்டும் என்று பிரதேச பொதுமக்கள் கல்முனை மாநகர சபை நிர்வாகத்தை கேட்டுக் கொள்கின்றனர்.

# நாட்டு நலனோங்க அம்பாறை பள்ளிவாசலில் பிரார்த்தனை

## ஹரீஸ் எம்.பி. - அரசாங்க அதிபர் பங்கேற்பு

(நூருல் ஹுதா உமர்)

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் அம்பாறை ஜும்மா பள்ளிவாசலுக்கு விஜயம் செய்து பள்ளிவாசலின் தற்போதைய நிலைகள் தொடர்பில் ஆராய்ந்ததுடன், நாட்டின் நலம்




மற்றும் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டு அம்பாறை மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக அண்மையில் கடமையேற்றுள்ள இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரி ஜே.எம்.ஏ.டக்ளஸ் ஆகியோர் வேண்டி துஆ பிரார்த்தனை நிகழ்வும் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயலக பிரதம பொறியியலாளர் எம். றபீக், அம்பாறை மாவட்ட விவசாயப் பணிப்பளர் எம்.எஸ்.ஏ.கலீஸ், அம்பாறை ஜும்மா பள்ளிவாசல் தலைவர் உட்பட நிர்வாகிகள், அம்பாறை மாவட்ட செயலக அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நாட்டில் சுபீட்சம் ஓங்கவும், மக்களுக்கு நிம்மதியான வாழ்க்கை முறை கிட்டவும் அம்பாறை ஜும்மா பள்ளிவாசல் பிரதம இமாம் துஆ பிரார்த்தனை நிகழ்த்தினார்.

# வாழ்வாதார செயற்றிட்டம் கிராம மட்டத்தில் ஆரம்பம்




(சர்ஜுன் லாபீர்)

வரவுசெலவுத்திட்டம் 2022இற்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் அபிவிருத்தியின் பயன்கள் விரைவாக மக்களுக்கு சென்றடையும் வகையில் கிராம மட்ட பிராந்திய அபிவிருத்திகளுக்கு முன்னுரிமை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற "கிராமத்துடன் உரையாடல்" கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தி கீழ் வாழ்வாதார மற்றும் உட்கட்டமைப்பு செயற்றிட்டத்தை ஆரம்பம் செய்யும் நிகழ்வு கடந்த 07ஆம் திகதி கல்முனை பிரதேச செயலகத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜெளபர் தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரீஸ் கலந்துகொண்டு வாழ்வாதார உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களை ஆரம்பித்துவைத்தார்.

மேலும், இந்நிகழ்வில் அதிதிகளாக கல்முனை மாநகர பிரதி மேயர் ரகுமத் மன்சூர், கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான சட்டத்தரணி ஏ.எம் றோஸன் அக்தர், எம்.எஸ். நிசார் (ஜேபி), ஏ.சி.ஏ.சத்தார், ஏ.ஆர்.அமீர், எம்.எஸ்.உமர் அலி, சப்றாஸ் மன்சூர், சி.எம்.முபீத், ஆரிகா காரியப்பர், ஐ.எம்.ரஜாப்தீன், ஏ.எல்.ரபீக், அபிவிருத்தி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் கே.எல்.யாஸீன் பாவா, சமூர்த்தி முகாமையாளர் என்.எம்.முபீன், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேகச் செயலாளர் நௌபர் ஏ பாவா, இணைப்பாளர் சப்றாஸ் நிலாம் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# மதுபான வியாபாரத்தில் ஈடுபட்ட இருவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டு. வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள தாண்டியடி புதுமண்டபத்தடியிலுள்ள பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு மற்றும் அரச மதுபானங்களை விற்பனை செய்துவந்த இரு வீடுகளை பொலிஸார் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை (8) முற்றுகையிட்டு இருவரை கைதுசெய்ததுடன், கசிப்பு மற்றும் மதுபானப் போத்தல்களை மீட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றுக்கமைய சம்பவதினமான குறித்த பகுதியிலுள்ள அருகருகே உள்ள இரு வீடுகளை முற்றுகையிட்டனர். இதன்போது ஒரு வீட்டில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட ஒருவரை 5 லீற்றர் கசிப்புடன் கைதுசெய்தனர்.

அருகிலுள்ள வீட்டை முற்றுகையிட்ட பொலிசார் அரச மதுபானங்களை சட்டவிரோதமாக விற்பனைசெய்து வந்த ஒருவரை 10 போத்தல் மதுபானங்களுடன் கைதுசெய்தனர். இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கிண்ணியாவில் நெல் அறுவடை ஆரம்பம்; விளைச்சல் குறைவென விவசாயிகள் கவலை

(கிண்ணியா நிருபர் )

திருகோணமலை மாவட்டம், கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தற்போது நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளது. வெல்லாங்குளம், குரங்குபாஞ்சான், கிரான், வாழைமடு போன்ற விவசாயிகள் நெல் அறுவடையினை இயந்திரம் மூலமாக அறுவடையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இம்முறை அறுவடை குறைவாக உள்ளதாகவும் தங்களுக்கு போதுமான அசேதனப் பசளை இன்மையால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர் இப்பகுதியில் சுமார் 350இற்கும் மேற்பட்ட ஏக்கர் அளவில் நெல் விவசாயம் செய்யப்பட்ட போதிலும் அறுவடை குறைவாக உள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

சேதனப் பசளை வெற்றியளிக்கவில்லை. இதனால் தாங்கள் கடன் பட்டும், மனைவி பிள்ளைகளின் நகைகளை அடகு வைத்தும் இம்முறை நெற்செய்கை செய்தபோதிலும் விளைச்சலின்றி பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே தங்களுக்கான அசேதனப் பசளை மற்றும் நஷ்ட ஈட்டினையும் தருமாறும் உரிய அரச அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றனர்.

# பின்தங்கிய வைத்தியசாலைகளுக்கு வைத்திய உபகரணங்கள் கையளிப்பு



கொழும்பு தேசிய வைத்திய சாலையின் வைத்தியசாலை சேவைகள் சபையினால் திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஐந்து பின்தங்கிய பிராந்திய வைத்திய சாலைகளுக்கான மருத்துவ உபகரணங்களின் கையளிப்பு சேருவில கிராமிய வைத்திய சாலையில் வண. இராஜவெல்லே சுபூதி தேரரின் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

வொஷிங்டன், நியூயோர்க் மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த இலங்கையின் பரோபகாரர்கள் கொழும்பு தேசிய வைத்திய சாலையின் மருத்துவ சேவைகள் சபைக்கு இந்த மருத்துவ உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

இதன் பெறுமதி 6 மில்லியன் ரூபாவாகும். வைத்திய உபகரணங்களின் கையளிப்பு திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் டி.கே. கொஸ்தாவிடம் வழங்க ஏற்பாடுசெய்யப்பட்டது. மஹதிவுல்வெவ, கோமரன்கடவல, பதவி ஸ்ரீபுர, மொரவெவ மற்றும் சேருவில ஆகிய வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டன.

# விற்பனைப் பிரதிநிதிகளுக்கான சங்கம் திருமலையில் உதயம்




(ரவ்பீக் பாயிஸ்)

இலங்கையில் முதல் தடவையாக விற்பனைப் பிரதிநிதிகளுக்கான சங்கம் திருகோணமலையில் 'திருமலை விற்பனைப் பிரதிநிதிகள் சமூகம்' என்ற பெயரில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது

நேற்றுமுன்தினம் (08) திருகோணமலை விபுலானந்தா கல்லூரி கேட்போர் கூடத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது

இச்சங்கம் திருகோணமலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விற்பனைப் பிரதிநிதிகளை மையமாகக்கொண்டு சுமார் 170இற்கும் அதிகமான பிரதிநிதிகள் அங்கத்தவர்களாக இணைந்து நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டு நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது

இந்திய செய்திகள்

# இந்தியாவில் ஒமிக்ரொனால் கொரோனா 3ஆவது அலை

## ஒருநாளில் 1.59 இலட்சம் பேருக்கு கொரோனா பாதிப்பு; இதுவரை 3,623 பேருக்கு ஒமிக்ரொன் தொற்று உறுதி



ஒமிக்ரொன் வைரஸ் காரணமாக இந்தியா கொரோனாவின் 3ஆவது அலை பரவலை எதிர்கொண்டுள்ளது.

இதேவேளை, இந்தியாவில் ஒரே நாளில் (நேற்றுக் காலை 8 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில்) புதிதாக 1.59 இலட்சம் பேர் (ஒரு இலட்சத்து 59 ஆயிரத்து 632 பேர்) கொரோனா தொற்று பாதிப்பு உறுதியாகியுள்ளதுடன் 327 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் இதுவரை 3,623 பேருக்கு ஒமிக்ரொன் தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதாக இந்திய மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இந்தியாவில் டெல்ட்டா வகை கொரோனா தீநுண்மியால் அத்தொற்றின் 2ஆவது அலை பரவியது. டெல்ட்டா தொற்று பரவல் படிப்படியாகக் கட்டுக்குள் கொண்டுவரப்பட்ட நிலையில், தற்போது ஒமிக்ரொன் தொற்று பரவல் வேகமாக அதிகரித்து வருகிறது.

சில நாட்களுக்கு முன்புவரை மேற்குப் பகுதியிலுள்ள மாநிலங்களில் மட்டுமே ஒமிக்ரொன் தொற்று பரவி வந்தது. மேற்கு வங்கம், சத்தீஸ்கர், ஒடிசா ஆகிய கிழக்கு மாநிலங்களில் டெல்ட்டா பரவலே அதிகமாகக் காணப்பட்டது.

ஆனால், தற்போது கிழக்குப் பகுதி மாநிலங்களிலும் ஒமிக்ரொன் தொற்று வேகமாகப் பரவி வருவதை தரவுகள் உறுதிசெய்கின்றன.

இதுகுறித்து மத்திய அரசு அதிகாரியொருவர் தெரிவிக்கையில்,

"அதிவேகமாகப் பரவிவரும் ஒமிக்ரொன் தொற்று காரணமாக நாட்டின் அனைத்து மாநிலங்களும் கொரோனாவின் 3ஆவது அலை பரவலை எதிர்கொண்டுள்ளன" என்றார்.

கொரோனா பரவலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு மாநிலங்களுக்கும் மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது. நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்பதால், மருத்துவமனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**3,623 பேருக்கு ஒமிக்ரொன்**

இந்தியாவில் 3,623 பேருக்கு ஒமிக்ரொன் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்தியா முழுவதும் 100இற்கும் மேற்பட்ட மாநிலங்களில் ஒமிக்ரொன் தொற்று பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்தவகையில் மகாராஷ்டிரத்தில் 1,009 பேருக்கு ஒமிக்ரொன் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. தமிழகத்தில் 185 பேருக்கு ஒமிக்ரொன் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று டில்லியில் - 513, கர்நாடகாவில் - 441, ராஜஸ்தானில் - 373, கேரளாவில் - 333, குஜராத்தில் - 204, ஹரியானாவில் - 123, தெலுங்கானாவில் - 123, உத்தரப் பிரதேசத்தில் - 113 பேருக்கும் ஒமிக்ரொன் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## த்ரிஷா - சத்யராஜ் உள்ளிட்ட நட்சத்திரங்களுக்கு கொரோனா



இந்தியாவில் கொரோனா தொற்று வேகமெடுத்துள்ள நிலையில், ஒரேநாளில் 3 நடிகைகளுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. கொரோனா பாதிப்புகள் பொலிவுட் நட்சத்திரங்களைபோன்று கொலிவுட் நட்சத்திரங்களையும் தாக்கத் தொடங்கியுள்ளது.

**த்ரிஷா**

நடிகை த்ரிஷா புத்தாண்டு மற்றும் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்துக்காக தனது தோழிகளுடன் லண்டன் சென்றுள்ளார். அங்கு அவருக்கு இலேசான காய்ச்சல் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து செய்யப்பட்ட மருத்துவ பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

தற்போது லண்டனிலுள்ள தோழி வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார். இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்,

"எனக்கு கொரோனா தொற்று ஏற்பட்டது. ஏற்கனவே தடுப்பூசி போட்டிருப்பதால் பெரியளவில் பாதிப்பில்லை. இப்போது குணமடைந்து வருகிறேன். சில பரிசோதனைகள் முடிந்த பின்னர் நாடு திரும்புவேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

**சத்யராஜ்**

இது தவிர, நடிகர் சத்யராஜுக்கு திடீர் காய்ச்சல் ஏற்பட்டது. பரிசோதனையில் கொரோனா உறுதிசெய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

**லட்சுமி மஞ்சு**

தெலுங்கு தயாரிப்பாளரும், நடிகையுமான லட்சுமி மஞ்சுவுக்கு கொரோனா உறுதிசெய்யப்பட்டுள்ளது. லட்சுமியின் சகோதரரும் நடிகருமான மனோஜ் மஞ்சுக்கு சமீபத்தில் கொரோனா தொற்று ஏற்பட்டது. அதனால் லட்சுமியும் பரிசோதனை செய்துகொண்டார். இதில் அவருக்கும் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டது.

**ஷெரீன்**

ஏற்கனவே கொரோனா தொற்றிலிருந்து மீண்டு வந்த நடிகை ஷெரீனுக்கு மீண்டும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து அவர் தெரிவிக்கையில், ஒருமுறை வந்து சென்றால் பின்பு கொரோனா வராது என்று நினைக்காதீர்கள் எனக்கு வந்திருக்கிறது. எச்சரிக்கையாக இருங்கள் - என்றார்.

**ஸ்வாரா பாஸ்கர்**

பொலிவுட் நடிகை ஸ்வாரா பாஸ்கர் குடும்பத்தினருக்கு கொரோனா உறுதிசெய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து அவருக்கு பரிசோதனை செய்ததில் அவருக்கும் கொரோனா தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது அவர் மும்பையிலுள்ள தனது வீட்டில் குடும்பத்தினருடன் தனிமைப்படுத்திக்கொண்டுள்ளார்.

**மீனா**

அண்மையில் நடிகை மீனா உட்பட அவரது குடும்பத்தினருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முழு ஊரடங்கால் வெறிச்சோடிய தமிழகம்



ஒமிக்ரொன் பரவலை கட்டுப்படுத்தும் விதமாக நேற்று தமிழகத்தில் ஒருநாள் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

ஒமிக்ரொன் பரவலை கட்டுப்படுத்துவதற்காக மத்திய மாநில அரசுகள் மருத்துவக் குழுக்களை அமைத்து தீவிர நடவடிக்கைகளை எடுத்துள்ளன. சமூகப் பரவலை குறைப்பதற்காக கடந்த 6ஆம் திகதி முதல் இரவு 10 மணியிலிருந்து காலை 5 மணிவரை இரவுநேர ஊரடங்கு ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டிருந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல் முழு ஊரடங்கு அமுலாகியது.

முழு ஊரடங்கு காரணமாக சென்னை, திருச்சி, மதுரை, கோவை உள்ளிட்ட முக்கிய நகரங்களின் சாலைகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. பல்வேறு இடங்களிலும் தடுப்புகளை ஏற்படுத்தி பொலிஸார் சோதனையில் ஈடுபட்டனர்.

## இந்திய நாடாளுமன்றத்துள் கொரோனா: 402 ஊழியர்களுக்கு தொற்று உறுதி



இந்திய நாடாளுமன்றத்தில் பணியாற்றும் 402 ஊழியர்களுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர்களது இரத்த மாதிரிகள் மரபணு பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் விரைவில் தொடங்கவுள்ள நிலையில், கடந்த 4 முதல் 8ஆம் திகதிவரை நாடாளுமன்றத்தில் பணியாற்றும் 1,409 ஊழியர்களுக்கு கொவிட் பரிசோதனை நடந்தது. அதில் 402 ஊழியர்களுக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தொற்று உறுதியானவர்களில் 200 பேர் லோக்சபாவிலும், 69 பேர் ராஜ்யசபாவிலும் பணியாற்றுபவர்கள். மற்றவர்கள் ஊழியர்கள். தொற்று உறுதிசெய்யப்பட்டவர்களின் மாதிரிகள் மரபணு பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவர்களுடன் தொடர்பிலிருந்தவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுளன்னனர். லோக்சபா மற்றும் ராஜ்யசபாவில் பணியாற்றும் ஊழியர்கள் சிலரும் தனிமைபடுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**ஊழியர்களுக்கு கட்டுப்பாடு**

கொரோனா காரணமாக ஊழியர்களின் வருகைக்கு ராஜ்யசபா செயலகம் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. செயலாளர் பதவிக்கு கீழுள்ளவர்கள் மற்றும் 50 சதவீத ஊழியர்கள் இந்த மாத இறுதிவரை வீட்டிலிருந்து பணிபுரிய வேண்டும். இந்த மாத இறுதியில் பட்ஜெட் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், கொவிட் சூழ்நிலை குறித்து ஆய்வுசெய்த அவைத்தலைவர் வெங்கையா நாயுடு, மேலும் பரவாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கர்ப்பிணிகள் மற்றும் நீரழிவு நோய் உள்ளவர்கள் அனைவரும் அலுவலகம் வர தடை விதிக்கப்பட்டுள்ளது. கூட்டங்கள் அனைத்தும் வீடியோ கொன்பரன்சிங் முறையில் நடத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## கொரோனா அச்சம் காரணமாக விஷம் அருந்திய குடும்பத்தினர்: இருவர் உயிரிழப்பு; இருவர் வைத்தியசாலையில்; மதுரையில் சம்பவம்

**திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது**



மதுரையில் கொரோனா அச்சம் காரணமாக ஒரே குடும்பத்தில் 4 பேர் விஷம் குடித்துள்ளனர். அதில் தாய் மற்றும் மகன் உயிரிழந்துள்ளமை பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மதுரை அருகேயுள்ள கல்மேடு எம்.ஜி.ஆர். நகரைச் சேர்ந்தவர் நாகராஜன், கூலி தொழிலாளி. இவரது மனைவி லட்சுமி (வயது 46). இவர்களது மகள்கள் அனிதா, ஜோதிகா (வயது 23), மகன் சிபிராஜ் (வயது 13).

அனிதா கடந்த சில மாதங்களுக்கு முன்பு திடீரென இறந்துவிட்டார். ஜோதிகாவுக்கு திருமணமாகிவிட்டது. அவர் தனது கணவர் வல்லரசு மற்றும் மகன் ரித்திஷ் (வயது 3) ஆகியோருடன் அதே பகுதியில் தனியாக வசித்துவந்தார்.

இந்நிலையில், நாகராஜனுக்கு திடீரென உடல் நலம் பாதிக்கப்பட்டது. இதையடுத்து ஜோதிகா தனது பெற்றோர் வீட்டுக்கு மகனுடன் வந்து தந்தையை கவனித்து வந்தார். கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு நாகராஜன் இறந்துவிட்டார்.

மகன் மற்றும் கணவர் அடுத்தடுத்து இறந்ததால் லட்சுமி வேதனையடைந்தார். இதனால் ஜோதிகா தாய்க்கு ஆறுதலாக அவருடன் அவரது வீட்டில் மகனுடன் வசித்து வந்தார். அப்போது கடந்த சில நாட்களுக்கு முன்பு ஜோதிகாவுக்கு சளி, காய்ச்சல் மற்றும் இருமல் இருந்துள்ளது.

இதனால் அவர் அந்தப் பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் கொரோனா பரிசோதனை செய்தார். அப்போது அவருக்கு கொரோனா தொற்று இருப்பது தெரியவந்தது. இதுகுறித்து ஜோதிகா தனது தாயிடம் தெரிவித்துள்ளார். அதனை கேட்டு தாய் லட்சுமி அதிர்ச்சியடைந்தார்.

ஒரு வீட்டில் ஒருவருக்கு கொரோனா வந்துவிட்டால் அனைவருக்கும் வந்துவிடுமே என்று அவர் அச்சமடைந்துள்ளார். தங்களது குடும்பத்தில் ஏற்கனவே 2 பேர் இறந்துவிட்டதை நினைத்து லட்சுமி மற்றும் ஜோதிகா வேதனையடைந்தனர்.

கொரோனா வந்து குடும்பத்துடன் அவதிப்படுவதை விட குடும்பத்தோடு நிம்மதியாக இறந்துவிடலாம் என்று ஜோதிகா தனது தாயிடம் தெரிவித்துள்ளார். அதற்கு தாய் லட்சுமியும் ஒப்புக்கொண்டார். சனிக்கிழமை இரவு ஜோதிகா, அவரது தாய், தம்பி மற்றும் மகன் ஆகிய 4 பேரும் சாப்பிட்டுவிட்டு படுக்கச் சென்றனர்.

அப்போது ஜோதிகா மற்றும் அவரது தாய் ஆகிய இருவரும், 3 வயது சிறுவன் ரித்திஷ் மற்றும் சிபிராஜிக்கு விஷத்தை (சாணி பவுடர்) குடிக்கக் கொடுத்தனர். பின்பு ஜோதிகா மற்றும் அவரது தாயும் பூச்சிமருந்தை குடித்தனர். சற்றுநேரத்தில் 4 பேரும் மயங்கி விழுந்தனர்.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலை லட்சுமியின் வீட்டுக் கதவு வெகுநேரம் திறக்காமல் இருந்துள்ளது. இதனால் சந்தேகமடைந்த அக்கம் பக்கத்தினர் அதுகுறித்து சிலைமான் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து பொலிஸார் சம்பவ இடம் வந்து லட்சுமி வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தனர்.

அப்போது அங்கு ஜோதிகா மற்றும் அவரது மகன் ரித்திஷ் ஆகிய இருவரும் இறந்து கிடந்தனர். ஜோதிகாவின் தாய் லட்சுமி மற்றும் தம்பி சிபிராஜ் ஆகிய இருவரும் உயிருக்குப் போராடியபடி கிடந்தனர். இதையடுத்து அவர்கள் 2 பேரையும் பொலிஸார் மீட்டு மதுரை அரச ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தனர்.

அங்கு அவர்கள் 2 பேரும் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. தற்கொலை செய்துகொண்ட ஜோதிகா மற்றும் அவரது மகன் ரித்திஷ் ஆகிய இருவரது உடல்களையும் பொலிஸார் மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பிவைத்தனர்.

## மதுரையிலிருந்து விமானம் மூலம் இலங்கைக்கு போதைப்பொருள் கடத்த முயன்ற இளைஞர் கைது

### சுமார் ரூ.2 கோடி மதிப்பிலானது என அதிகாரிகள் தெரிவிப்பு

**திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது**



மதுரையிலிருந்து விமானம் மூலம் இலங்கைக்கு போதைப்பொருள் கடத்த முயன்ற இளைஞர் கைது செய்யப்பட்டார்.

மதுரையிலிருந்து இலங்கைக்குச் செல்லவிருந்த ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் மூலம் விலை உயர்ந்த போதைப் பொருட்கள் கடத்தவுள்ளதாக போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. மதுரை விமான நிலையத்தில் தகவல் அளித்ததன் பேரில் இலங்கைப் பயணிகளிடம் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது மதுரை வில்லாபுரத்தைச் சேர்ந்த ஜவஹர் மகன் ஷகில் அஹமது (வயது 28) என்பவரின் உடைமைகளை சோதனை செய்தபோது பையில் வைத்திருந்த பழைய மண்ணெண்ணெய் அடுப்பில், மண்ணெண்ணெய் இருக்கும் பகுதியில் விலை உயர்ந்த போதைப்பொருள் இருப்பது தெரியவந்தது.

எனவே, அவரைக் கைதுசெய்து விசாரணை செய்தபோது அந்த நபர் பொருள் தன்னுடையது இல்லை என்றும், விமான நிலையம் வந்தபோது அறிமுகம் இல்லாத நபர் இலங்கையில் சேர்த்து விடும்படி கேட்டதன்பேரில் எடுத்து வந்ததாகவும் தெரிவித்தார். ஷகில் அகமதுவிடம் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தொடர்ந்து விசாரணைசெய்து வருகிறார்கள்.

இலங்கைக்கு கடத்த இருந்த போதைப்பொருட்களின் சர்வதேச மதிப்பில் ரூ.2 கோடி இருக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# உலக செய்திகள்





## கசகஸ்தானில் தொடரும் வன்முறை: உளவுத்துறை முன்னாள் தலைவர் கைது

கசகஸ்தானில் நடைபெற்று வரும் வன்முறைப் போராட்டங்கள் தொடர்பாக, அந்த நாட்டின் தேசிய உளவுத் துறை மற்றும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் முன்னாள் தலைவர் கரீம் மசிமோவ் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுகுறித்து. அவர் முன்னர் தலைமை வகித்த தேசிய பாதுகாப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தற்போது நடைபெற்று வரும் வன்முறைச் சம்பவங்களில் தேசத்துரோகக் குற்றங்கள் இழைக்கப்பட்டனவா என்பது குறித்து தேசிய பாதுகாப்புச் சபை விசாரணை நடத்தி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, தேசிய பாதுகாப்புச் சபை முன்னாள் தலைவர் கரீம் மசிமோவ் உட்பட பலர் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர். தேசத்துரோகக் குற்றச்சாட்டின் கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

தற்போது தற்காலிக தடுப்புக் காவலில் கரீம் மசிமோவ் உள்ளார் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கசகஸ்தானில், வாகனங்களில் பயன்படுத்தப்படும் திரவ பெற்றோலிய வாயுவின் (எல்.பி.ஜி.) விலை திடீரென மிக அதிகமாக உயர்த்தப்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த வாரம் முதல் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். எண்ணெய் வயல் அமைந்துள்ள ஜனாவோஸென் நகரில் தொடங்கிய அந்த தன்னெழுச்சிப் போராட்டம், தலைநகர் ஆல்மட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கும் மிக வேகமாகப் பரவியது.

வாகன எரிவாயு விலையுயர்வு மட்டுமன்றி, அரசின் செயற்பாடுகள் மீது மக்களிடையே அதிகரித்து வரும் அதிருப்தியும் போராட்டங்கள் தீவிரமடைவதற்குக் காரணமாகக் கூறப்படுகிறது.



கசகஸ்தான் இதுவரை கண்டிராத இந்தத் தீவிரப் போராட்டத்தை தணிக்கும் முயற்சியாக, நாடு முழுவதும் ஜனாதிபதி காசிம்-ஜொமார்ட் டோகயேவ் அவசரநிலை பிரகடனம் செய்தார். போராட்டக்காரர்களை சமாதானப்படுத்தும் வகையில் பிரதமர் ஆஸ்கர் மமின் தலைமையிலான அமைச்சரவை பதவி விலகியது. தனது பாதுகாப்புச் சபைத் தலைவர் பதவியை நூர்சுல்தான் நாசர்பையேவும் இராஜினாமா செய்தார்.

எனினும், இதனால் சமாதானமடையாத போராட்டக்காரர்கள் வீதிகளில் தடை ஏற்படுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




வன்முறையில் ஈடுபடும் போராட்டக்காரர்களைக் கண்டதும் சுட்டுக் கொல்ல பாதுகாப்புப் படையினருக்கு காசிம்-ஜொமார்ட் டோகயேவ் உத்தரவிட்டார்.

பாதுகாப்புப் படையினருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே நடந்த மோதலில் 26பேர் பலியாகினர். 18 பேர் காயமடைந்தனர்; 4,400இற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பாதுகாப்புப் படையினர் தரப்பில் 18 பேர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வன்முறையைக் கட்டுப்படுத்த ரஷ்யா மற்றும் அதன் தலைமையிலான பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பின் (சி.எஸ்.டி.ஓ.) முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளான ஆர்மீனியா, பெலாரஸ், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளின் அமைதிப் படையினர் களமிறங்கியுள்ளனர்.

இந்தச் சூழலில், போராட்டங்கள் தொடங்கியதற்குப் பின்னர் தேசிய உளவுத் துறை தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட கரீம் மசிமோவ், தற்போது அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்கள் வீட்டைவிட்டு வெளியேவந்தால் கைது

### - பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி



பிலிப்பைன்ஸில் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள் தேவையின்றி வீட்டை விட்டு வெளியே வந்து சுற்றித்திரிந்தால் கைது செய்யப்படுவார்கள் என அந்நாட்டு ஜனாதிபதி ரோட்ரிகோ டுடேர்டே (Rodrigo Duterte) எச்சரித்துள்ளார்.

இதுவரை தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள் அத்தியாவசிய தேவைக்காக மட்டுமே வீட்டை விட்டு வெளியேற வேண்டுமென்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அந்நாட்டு ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸில் கடந்த இரண்டு மாதங்களில் இல்லாத வகையில், தினசரி கொரோனா பாதிப்பு கடந்த வியாழக்கிழமை 17 ஆயிரத்தை எட்டியமை குறிப்பிடத்தக்கது.

## கார்ட்டூன் கதாபாத்திரங்களில் தோன்றி சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் சுகாதார பணியாளர்கள்



செக்குடியரசில் தடுப்பூசி மீதான பயத்தை சிறார்களுக்கு போக்க சுகாதார பணியாளர்கள் கார்ட்டூன் வேடங்களில் வலம் வந்து தடுப்பூசி செலுத்துகின்றனர்.

தடுப்பூசி செலுத்திக்கொண்ட பின் தென்படும் லேசான பக்க விளைவுகளை கண்டு அஞ்சும் சிறுவர்கள் மற்றும் மன ரீதியாக தடுப்பூசி செலுத்திக்கொள்ள அஞ்சுபவர்களை சகஜ நிலைக்கு கொண்டு வரவே நூதனத் திட்டத்தை கையாண்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். பிரபல கார்ட்டூன் வேடங்களான பிகாச்சூ, ஸ்னோ ஓமிட், மிக்கி மவுஸ் உள்ளிட்ட கதாபாத்திரங்களை கண்டு குழந்தைகள் மகிழ்கின்றனர்.

## 121 கோடி பேருக்கு கொரோனா தடுப்பூசி

### செலுத்தியுள்ளதாக சீன அரசு அறிவிப்பு



சீனாவில் 121 கோடி பேர் முழுவதுமாக கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

3 வயதிற்கு மேற்பட்ட 121 கோடியே 59 இலட்சம் பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ 89.54 சதவீதம் பேர் தடுப்பூசி செலுத்திக் கொண்டனர்.

தடுப்பூசி செலுத்திக் கொள்ள தகுதியான அனைவருக்கும் விரைவில் செலுத்தப்பட்டு முற்றிலும் தடுப்பூசி செலுத்திய நாடாக சீனா மாறுமென அரசு தெரிவித்துள்ளது.

### மகனுக்கு கொரோனா...

## தன்னை பாதுகாத்துக்கொள்ள மகனை கார் டிக்கியில் வைத்து பூட்டிய தாய்



அமெரிக்காவில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட மகனிடமிருந்து தனக்கு தொற்று ஏற்படாமலிருக்க மகனை கார் டிக்கியில் வைத்து பூட்டி வைத்திருந்த தாயை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

டெக்ஸாஸ் மாகாணத்தை சேர்ந்த சாரா பீம் என்ற ஆசிரியை கடந்த 3ஆம் திகதியன்று தனக்கு கொரோனா பரிசோதனை செய்வதற்காக காரில், டிரைவ் - த்ரு எனப்படும், காரிலிருந்தபடியே கொரோனா பரிசோதனை மேற்கொள்ளும் மையத்திற்கு சென்றுள்ளார்.

அப்போது அங்கிருந்த ஊழியர்கள் சாரா பீம்-ன் காரின் பின்புறத்திலிருந்து சத்தம் வருவதை பார்த்து அது குறித்து கேட்டுள்ளனர். அப்போது தனது மகன் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருப்பதால் தனக்கு பரவாமலிருக்க அவனை டிக்கியில் வைத்து பூட்டி வைத்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஊழியர்கள் தகவல் கொடுத்ததன் அடிப்படையில் அங்கு சென்ற பொலிஸார் சிறுவனை விடுவித்ததுடன், தாயார் சாராபீமை கைது செய்தனர்.

## பாகிஸ்தானில் கடும் பனிப்பொழிவில் சிக்கி 10 குழந்தைகள் உட்பட 22 சுற்றுலாப் பயணிகள் பலி!



பாகிஸ்தானில் சுற்றுலா சென்று கடும் பனிப் பொழிவில் சிக்கிய கார்களில் 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

பஞ்சாப் மாகாணத்திலுள்ள முர்ரீ பகுதிக்கு ஆயிரக்கணக்கான கார்களில் சுற்றுலா சென்ற மக்கள், கடும் பனிப் பொழிவில் சிக்கி திரும்ப முடியாமல் ஸ்தம்பித்து போனதாக கூறப்படுகிறது.

கடும் குளிரிலிருந்து தப்பிக்க கார் கண்ணாடிகளை மூடியதால் மூச்சுத் திணறல் மற்றும் உறை பனி குளிரில் சிக்கி 10 குழந்தைகள் உட்பட 22 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதனையடுத்து பஞ்சாப் மாகாணத்தில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டு மீட்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பனியில் சிக்கிக் கொண்ட ஆயிரத்து 122 பேர் மீட்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பெருவில் 5.2 ரிச்டர் நிலநடுக்கம்: 12 நிமிடங்கள் தொடர்ந்த அதிர்வு

### பீதியில் மக்கள் வீதிகளில் தஞ்சம்



பெருவில் திடீரென ஏற்பட்ட 5.2 ரிச்டர் அளவிலான நில நடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கி இடிந்து வீழ்ந்து சேதமாகின.

வடகிழக்கு மாவட்டமான சாண்டா அனிடாவிலிருந்து 56 கிலோமீற்றர் தொலைவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.2 ஆக பதிவானதாக ஐரோப்பிய மத்திய தரைக்கடல் நில அதிர்வு ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

ஏறத்தாழ 12 நிமிடங்கள் நிலநடுக்கம் உணரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி அலறியடித்து வீதிகளில் தஞ்சமடைந்துள்ளனர். அந்நாட்டு தொலைக்காட்சி அலைவரிசைகளில், நிலநடுக்கத்தின்போது தெருவோர மின் விளக்குகள் அணைந்தது, கடல் சீற்றம் குறித்த வீடியோ காட்சிகள் வெளியாகியுள்ளன.

## பிரேஸிலில் படகு பயணிகள் மீது இடிந்து வீழ்ந்த இராட்சத பனிப்பாறை

### சுற்றுலாப் பயணிகள் ஐந்து பேர் பலி; 20 பேர் மாயம்; 32 பேர் படுகாயம்



தென்கிழக்கு பிரேஸிலிலுள்ள ஃபர்னாஸ் ஏரிக்கு சென்ற சுற்றுலாப் பயணிகள் மீது இராட்சத பாறையொன்று இடிந்து வீழ்ந்த கோர விபத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், இந்த விபத்தில் 20 பேர் மாயமானதாகவும் 32 பேர் பலத்த காயமடைந்ததாகவும் தீயணைப்பு வீரர்கள் தெரிவித்தனர்.

வார இறுதி நாளையொட்டி ஃபர்னாஸ் ஏரிக்கு 3 படகுகளில் சென்ற சுற்றுலாப் பயணிகள் மீது இராட்சத பாறை இடிந்து வீழ்ந்துள்ளது. சம்பவ இடத்தில் தீயணைப்பு வீரர்கள் மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

## எகிப்தில் கடும் பனிமூட்டத்தால் பஸ் விபத்து; 16 பேர் பலி: 18 பேர் காயம்




எகிப்தில் கடும் பனிமூட்டம் காரணமாக வீதி தெளிவாக தெரியாததால் பஸ்ஸொன்று மற்றுமொரு பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 16 பேர் உயிரிழந்துள்ளதுடன் 18 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வடகிழக்கு எகிப்திலுள்ள சினாய் தீபகற்பத்தில், பன்னாட்டு நெடுஞ்சாலையில் நேற்றுமுன்தினம் அதிகாலையில் இந்த விபத்து நேரிட்டுள்ளது. இதில் படுகாயமடைந்தவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

எகிப்தில் கடந்த 2020ஆம் ஆண்டு வீதி விபத்துகளில் சிக்கி 7,000பேர் வரை உயிரிழந்துள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

# வர்ணனையாளராக மாறிய அவுஸ்திரேலிய பிரதமர்



இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையேயான நான்காவது டெஸ்ட் போட்டி சிட்னி மைதானத்தில் நடைபெற்றபோது, மூன்றாம் நாள் ஆட்டத்தைப் பார்க்க வந்திருந்த அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசன் வர்ணனையாளர் அறைக்குச் சென்று திடீரென மைக்கை பிடித்து வர்ணனை செய்ய ஆரம்பித்தார்.

அடம் கில்கிறிஸ்ட், ஈசா குஹா ஆகியோருடன் இணைந்து சில நிமிடங்கள் அவர் போட்டியை வர்ணனை செய்தார். ஒரு நாட்டின் பிரதமரே நேரடியாக வர்ணனையாளர் அறைக்குச் சென்று போட்டியை வர்ணனை செய்தது ரசிகர்கள் மத்தியில் பெரியளவில் கவனத்தை ஈர்த்துள்ளது.

## கல்வியங்காடு ப்ரீமியர் லீக்

# வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிய கல்வியங்காடு ரைனோஸ் அணி

*(யாழ். நிருபர்)*

கல்வியங்காடு ப்ரீமியர் லீக்கின் (கே.பி.எல்) இரண்டாவது பருவகால தொடரின் வெற்றிக் கிண்ணத்தை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கோப்பாய் பிரதேச சபை உறுப்பினர் சண்முகராஜா சிறிகுமரனின் கல்வியங்காடு ரைனோஸ் (கே.ஆர்.) அணி தனதாக்கியது.

ஞானபாஸ்கரோதய சங்கம் நடத்திய கல்வியங்காடு ப்ரீமியர் லீக்கின் (கே.பி.எல்.) இறுதிப் போட்டி கடந்த புதன்கிழமை இரவு 7.00 மணிக்கு ஜீ.பி.எஸ். விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் கல்வியங்காடு ரைனோஸ் (கே.ஆர்.) அணியை எதிர்த்து கல்வியங்காடு நைட் ரைடஸ் (கே.கே.ஆர்.) அணி மோதியது..

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற கல்வியங்காடு ரைனோஸ் (கே.ஆர்.) அணியின் தலைவர் முதலில் பந்துவீச்சை தெரிவுசெய்தார். இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கல்வியங்காடு நைட் ரைடஸ் (கே.கே.ஆர்.) அணி நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்களில் 72 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

73 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய கல்வியங்காடு ரைனோஸ் (கே.ஆர்) அணியினர் 9 ஓவர்கள் முடிவிலேயே வெற்றி இலக்கை அடைந்தனர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக கல்வியங்காடு ரைனோஸ் (கே.ஆர்) அணி வீரர் மதுசன் தெரிவுசெய்யப்பட்டார். தொடர் ஆட்டநாயகனாக கல்வியங்காடு ரைனோஸ் (கே.ஆர்) அணி வீரர் தாருகாசன் தெரிவுசெய்யப்பட்டார்.









இத்தொடரில் வெற்றிபெற்ற கல்வியங்காடு ரைனோஸ் (கே.ஆர்) அணிக்கான வெற்றிக் கிண்ணத்தை நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் வழங்கினார்.

# போராடி போட்டியை சமநிலை செய்த இங்கிலாந்து

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

வரலாற்றுச் சிறப்புமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரின் நான்காவது போட்டியில் இங்கிலாந்து அணி போராடி போட்டியை சமநிலை செய்தது. 5 போட்டிகள்கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதல் மூன்று போட்டிகள் நிறைவில் அவுஸ்திரேலிய அணி மூன்று போட்டிகளிலும் வெற்றிபெற்று தொடரை கைப்பற்றியிருந்த நிலையில், இரு அணிகளுக்குமிடையிலான நான்காவது டெஸ்ட் போட்டி கடந்த புதன்கிழமை சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமானது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸி. அணி முதலில் துடுப்பெடுத்தாடி தங்களது முதல் இன்னிங்ஸில் உஸ்மான் கவாஜாவின் சதத்தின் உதவியுடன் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 416 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஜொனி பெயர்ஸ்டோவின் சதத்தின் உதவியுடன் 294 ஓட்டங்களை சேர்த்தது. 122 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த ஆஸி. அணி, மீண்டும் உஸ்மான் கவாஜாவின் சதத்தின் உதவியுடன் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 265 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் இன்னிங்ஸை இடைநிறுத்தியது.



அதனடிப்படையில் 388 ஓட்டங்களை வெற்றியிலக்காகக்கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, நேற்றைய இறுதிநாள் ஆட்டநேர முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 270 ஓட்டங்களை சேர்த்து மயிரிழையில் போட்டியை சமப்படுத்தியது. இதன் மூலம் 4 போட்டிகள் நிறைவில் ஆஸி. அணி 3-0 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்கிறது. ஐந்தாவதும் இறுதியுமான போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஹோபார்ட்டில் ஆரம்பமாகிறது.

# களுத்துறை லீக் உதைபந்தாட்டப் போட்டி மீண்டும் ஆரம்பம்

*(என். ஜெயரட்னம்)*

களுத்துறை எயர்லங்கா விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட அணி 4-1 என்ற கோல் வித்தியாசத்தில் களுத்துறை யுத் விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட அணியை இலகுவாக தமது காலிறுதிப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம்' புலூஸ்டார் அணியுடனான அரையிறுதிப் போட்டியில் மோத தகுதிபெற்றது.

களுத்துறை உதைபந்தாட்ட லீக் ஏற்பாட்டில் கடந்த 2019 டிசம்பர் மாதத்தில் நொக்கவுட் முறையில் ஆரம்பிக்கப்பட்ட இப்போட்டிகள் கொரோனா தொற்று பரவல் காரணமாக பல்வேறு சந்தர்ப்பங்களில் பிற்போடப்பட்டு நீண்ட இடைவெளிக்குப் பிறகு நேற்று முன்தினம் களுத்துறை வேர்ணன் யு பெர்னாண்டோ விளையாட்டு அரங்கில் மீண்டும் ஆரம்பமானது.





# 2022 உலகின் முக்கியமான விளையாட்டுகள்

**ஜனவரி:** 1 - 14 - டக்கார் போட்டி (பாலைவன கார்), சவூதி அரேபியா.

★09 - பெப்ரவரி 6 - ஆபிரிக்க நேஷன்ஸ் கிண்ணப் போட்டி (உதைபந்தாட்டம்), கமரூன்

★ 14 - ஐ.சி.சி. U-19 உலகக் கிண்ணத் தொடர், மேற்கிந்திய தீவுகள்.

★ 17 - 30 - அவுஸ்திரேலிய ஓபன், மெல்போர்ன், அவுஸ்திரேலியா.

★ 18 - 23 - நான்கு கண்டங்களின் ஃபிகர் ஸ்கேட்டிங் சம்பியன்ஷிப், தாலின், எஸ்டோனிய.

★ 20 - 6 - ஆ.எவ்.சி மகளிர் உதைபந்தாட்ட ஆசியக் கிண்ண தொடர், இந்தியா.

**பெப்ரவரி**

4 - 20 - குளிர்கால ஒலிம்பிக், பீஜிங், சீனா.



**மார்ச்**

★ 3 - 6 - உலக ஸ்பீட் ஸ்கேட்டிங் சம்பியன்ஷிப், ஹமர், நோர்வே.

★ 4 - 13 - பராலிம்பிக் குளிர்கால விளையாட்டு, பீஜிங், சீனா

★ 18 - 20 - உலக தடகள இன்டோர் சம்பியன்ஷிப், பெல்கிரேட், செர்பியா.

★ 18 - 20 - உலக ஷார்ட் டிராக் ஸ்பீட் ஸ்கேட்டிங் சம்பியன்ஷிப், மாண்ட்ரீல், கனடா.

21 - 27 - உலக ஃபிகர் ஸ்கேட்டிங் சம்பியன்ஷிப், மாண்ட்பெல்லியர், பிரான்ஸ்.

**ஏப்ரல்:** 16 - மே 2 - உலக ஸ்னூக்கர் சம்பியன்ஷிப், ஷெஃபீல்ட், பிரிட்டன்.



**மே** : 13 - 29 - 19ஆவது எவ்.ஐ.என்.ஏ. உலக சம்பியன்ஷிப், ஃபுகுவோகா, ஜப்பான்

22 - ஜூன். 5 - பிரெஞ்சு ஓபன், பாரிஸ், பிரான்ஸ்.

**ஜூன்:** 26 - ஜூலை 7 - 31 கோடைகாலப் பல்கலைக்கழகம், செங்டு, சீனா 27 - ஜூலை 10 - விம்பிள்டன், லண்டன், பிரிட்டன்.

**ஜூலை** : 15 - 24 - உலக தடகள சம்பியன்ஷிப், ஓரிகான், அமெரிக்கா

28 - ஓகஸ்ட் 8 - காமன்வெல்த் விளையாட்டு, பர்மிங்காம், பிரிட்டன்.

30 - உலக தடகள ஷாங்காய் டயமண்ட் லீக், ஷாங்காய், சீனா.




**ஓகஸ்ட்** : 6 - உலக தடகள ஷென்சென் டயமண்ட் லீக், ஷென்சென், சீனா.

★ 21 - 28 - பி.டபிள்யு.எவ் உலக பெட்மின்டன் சம்பியன்ஷிப், ஜப்பான்.

★ 26 - செப். 11 - எவ்.ஐ.வி.பி ஆண்கள் உலக சம்பியன்ஷிப், ரஷ்யா.

★ 29 - செப். 11 வரை யு.எஸ். ஓபன் டென்னிஸ், நியுயார்க், அமெரிக்கா.

★ ஓகஸ்ட் - செப்டம்பர் - ஆசியக்கிண்ண கிரிக்கெட் தொடர் - இலங்கை (திகதி உறுதியாகவில்லை)

**செப்டெம்பர்:**




★ 10 - 25 - 19வது ஆசிய விளையாட்டுப் போட்டிகள், ஹாங்சோ, சீனா.

★ 22 - ஒக். 1 - பெண்கள் கூடைப்பந்து உலகக் கிண்ணம், அவுஸ்திரேலியா.

★ 23 - ஒக். 15 - எவ்.ஐ.வி.பி மகளிர் உலக சம்பியன்ஷிப், நெதர்லாந்து மற்றும் போலந்து.

**ஒக்டோபர்:**

★ 16 - நவ. 13 - எட்டவது ஐ.சி.சி இருபதுக்கு 20 உலகக்கிண்ணம் - அவுஸ்திரேலியா

★ 29 - நவ. 6 - உலக ஜிம்னாஸ்டிக்ஸ் சம்பியன்ஷிப், லிவர்புல், பிரிட்டன்

**நவம்பர்:**

★ 13 - உலக தடகள அரை மரதன் சம்பியன்ஷிப், யாங்சு, சீனா

★ 21 - டிச.18 - பிபா உலகக்கிண்ண உதைபந்தாட்டம், கட்டார்

**டிசம்பர்:**

★ 20 - 28 - 3ஆவது ஆசிய இளைஞர் விளையாட்டுப் போட்டிகள், சாந்துர் சீனா.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7